உ

ஸ்ரீசற்குருவேநமா.

பகவத்கீதைவசனம்.

இஃது.
சேலஞ்ஜில்லாகிலில்கோர்ட்
வக்கீல்.

ம-ா-ா-
அப்பாசுவாமிபிள்ளையவர்களால்
கேட்டுக்கொண்டபடி.

பாரிப்பாக்கம்
முனியப்பமுதலியாரால்

சமதம்.
மெய்ஞ்ஞானவிளக்கவச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1861.

சிவமயம்.

அத்தியாயவகராதி.

		பக்கம்.
க	விஷாதயோகவத்தியாயம்..........................	க
உ	சாங்கியயோகவத்தியாயம்..........................	ரு
ங	கர்ம்மபிரம்மயோகவத்தியாயம்..........................	யக
ச	ஞானகர்ம்மயோகவத்தியாயம்..........................	யரு
ரு	சந்நியாசயோகவத்தியாயம்..........................	யகூ
சா	அப்பியாசயோகவத்தியாயம்..........................	உக
எ	பரமஹம்சவிஞ்ஞானயோகவத்தியாயம்..........	உரு
அ	அட்சரப்பிரம்மயோகவத்தியாயம்..........	உஅ
கூ	ராஜவித்தியாராஜகுஹ்யயோகவத்தியாயம்.......	ஙக
ய	விபூதிவிஸ்தாரயோகவத்தியாயம்..........	ஙச
யக	விஸ்வரூபயோகவத்தியாயம்..........	ஙஎ
யஉ	பத்தியோகவத்தியாயம்..........	சங
யங	பிரகிருதிபுருஷயோகவத்தியாயம்..........	சரு
யச	குணத்திரயவிபாகயோகவத்தியாயம்..........	சகூ
யரு	புருஷோத்தமயோகவத்தியாயம்..........	ருக
யசா	தெய்வாசுரசம்பத்துவிபாகயோகவத்தியாயம்	ருங
யஎ	சிரத்தாத்திரயவிபாகயோகவத்தியாயம்..........	ருரு
யஅ	சகலவுபநிஷதார்த்தப்பிரதிபாதன மோட்சயோகவத்தியாயம்..........	ருஅ

உ

ஸ்ரீகுருப்யோநம:



பகவத்கீதாவசனம்.

காப்பு விருத்தம்.

ஐவகைப்பொருளாதான்குரோதமுக்குணத்தின்மூன்றாகி *
செய்வினையிரண்டுமொன்றியாவுமாய்ந்தடைப்படுகிற ... ...*
பொய்யிருளகலஞானப்பொருட்கதிர்விரித்தபுத்தேள் ... ... *
கைவளையாழிச்செங்கட்டவனைமனத்தகத்துள்வைப்பாம் . ...*

முதலாவது.

சோகவத்தியாயம்.

தருமராசன்வனவாசமும்அஞ்ஞாதவாசமுமுடித்தியுத்தத்துக்குயத் தப்பட்டு இராசனுமெதிர்த்திருக்கிறபோது திருதராஷ்டிரன் ளெப்படிமுடியுமோவென்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் அவ்வி டத்துக்கு வேதவியாசமகாமுனிவந்து திருதராஷ்டிரனுடனே ஒரு வார்த்தைசொல்லுகிறார் - ஓ ராஜாவே கிருஷ்ணனாகவாயி பூபாரமடக் க அவதரித்திருக்கிறார் - இந்தயுத்தத்தில் ராஜாக்களெல்லாரு காலங்களிட்டுக் கொண்டிருக்கிறது - ஆகையால் ஆர்க்கென்டாலு ன்றாலும்போகாது - நீயென்னிதைச்சிந்திக்கிறாய் நடந்தேறும் ப ண்ணுகிறயுத்தியம் உனக்குத்தெரியத்தக்க தக்கதம்முடைய அனு க்கிரகத்தினாலே திரிகாலத்திபணியான சஞ்சயனுனக்குச்சொல்லு வானென்று அவிடத்திற்சஞ்சயனைவைத்துப்போட்டுவியாசர்தம்மு டையஆசிரமத்துக்குப்போய்விட்டார்.

அப்பால் திருதராஷ்டிரன் சஞ்சயனைப் பார்த்து - ஓ சஞ்சயா - தர்மக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்திலே யுத்தம் பண்ண நினைத்துக்கூடின - என்னவர்களும் பாண்டவர்களும் என்ன செய்கிறார்களோ என்று கேட்க அதற்குச் சஞ்சயன் சொல்லுகிறான் இப்போ துரியோதன ராஜா அதிக்கிரமமாய் வியூகாகாரமாய்க் கூடியிருக்கிற பாண்டவ சேனையைப் பார்த்துத் துரோணாசாரியர் சமீபத்திற்குப் போய் ஓ ஆசாரியரே உம்முடைய சிஷ்யனாய்ப் புத்திமானாகிய துருபத ராஜன் புத்திரனாலே வியூகாகாரமாய் வகுக்கப்பட்ட பாண்டவர்களுடைய மகத்தான சேனையைப் பாரும் அதிலே சூரர்களாய் மகாவில்லாளிகளாய்ப் பீமார்ச்சுனர்களுக்கு ஒப்பானவர்களாய் யுத்தரங்கத்திலே - யுயுதான் - அர்ச்சுனன் - யுயுதானனும் - விராடனும் - மகாரதிகன் துருபதனும் திருஷ்டகேதுவும் சேகிதானனும் வீரியவானான காசிராஜனும் புருஜித்தும் குந்திபோசனும் - நரசிரேஷ்டனான சைப்பியனும் - பராக்கிரமமுள்ள யுதாமன்யுவும் வீரியவந்தனான உத்தமௌஜாவும் சௌபத்திரனும் - துரௌபதி மக்களும் - இத்தனை பெருமகாரதிகர்களாயிருக்கிறார்கள் - ஓ பிராமண சிரேஷ்டரான ஆசாரியரே - நம்முடைய சம்பந்தமானவர்களுக்குள்ளே - சிரேஷ்டராயிருப்பவர்களைத் தெரிந்துக்கொள்ளும் - நம்முடைய சேனைக்கு நாயகர்களாயிருக்கிறவர்களுள் யாரென்று உமக்கு எடுத்துச் சொல்லுகிறேன் கேளும்.

அவர்களாரென்றால் - நீரும் - பீஷ்மரும் - கர்ணனும் - யுத்தத்திலே ஜயிக்கிற கிருபனும் - அசுவத்தாமனும் - விகர்ணனும் சோமதத்தன் புத்திரனான பூரிசிரவசும் - பின்னரும் இதர சூரர்களான ராஜாக்களும் நானாவித ஆயுதங்களும் உடையவர்களாய் என்னுடைய நிமித்தம் தம் பிராணன் மேலே ஆசையை விட்டிருக்கிறார்கள் பின்னும் இவர்களெல்லாரும் யுத்தத்திலே மெத்தவும் பிரயாசைப்படுவார்களே இப்படிக்கொத்த நம்முடைய சேனைகளைப் பீஷ்மராலே ரக்ஷிக்கப்பட்டிருந்தும் - நமக்குண்டாயிருக்கின்றது பாண்டவர்களுடைய பலம் பீமனாலே ரக்ஷிக்கப்பட்டுச் சமர்த்தமாயிருக்கின்றது - அப்படியிருக்கிறபடியினாலே நீங்களெல்லாருங்கூடி யுத்தரங்கத்திலேயிருந்து பீஷ்மரைக் காப்பாற்றிக்கொண்டு வாருங்கோளென்று சொல்ல அதைக் கேட்டமாத்திரத்திலே துரியோதனனுக்குச் சந்தோஷிப்பிறப்பிக்கிறவரும் கௌரவர்களில் விருத்தருமான பீஷ்மாசாரியர் சிம்மநாதம் பண்ணிச் சங்கம் ஊதினார் - அதின் பிறகு அவரவர்களுடைய சங்கங்கள் பேரிகைகள் முதலான வாத்தியங்களைச் சீக்கிரமாக முழக்கினார்கள் அந்த வாத்தியத்தொனி எங்கும் நிறைந்திருந்தது

அப்போது வெள்ளைக்குதிரைகள் பூட்டப்பட்டதான பெரிய ரதத்திலே யிருக்கி
ற ஸ்ரீ க்ருஷ்ணனும் அர்ச்சுனனும் திவ்யமான சங்கங்களைப் பூரித்
தார்கள் அந்தச் சங்கங்களுக்குப் பேர் சொல்லுகிறேன் - பாஞ்சஜன்யம்
ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி பூரித்தார் - தேவதத்தம் அர்ச்சுனன் பூரித்தான் - பௌ
ண்டரம் பீமன் பூரித்தான் - அநந்தவிஜயம் தர்மராஜா பூரித்தார், ஸுகோ
ஷம் நகுலன் பூரித்தான், மணிபுஷ்பகம் ஸகதேவன் பூரித்தான், மஹாவி
ல்லுண்டான காசிராஜாவும் மஹாரதிகனான சிகண்டியும் - த்ருஷ்டத்யு
ம்நனும் சாத்யகியும் த்ருபதராஜனும் த்ரௌபதைமக்களும் அபிமன்
னும் இன்னும் பலமான ராஜாக்களும் வெவ்வேறாயவரவர்கள் சங்
கங்களை அவரவர்கள் பூரித்தார்கள் அந்தச்சங்கநாதங்கள் ஆகாசமும் பூமி
யும் பிரதித்வனியினாலே நிறைந்து - திருதராஷ்டிரன் புத்திரரு
டைய சேனைகளிருதயங்களைப் பேத்தித்துவிட்டது - அதின்பிறகு யு
த்தத்துக்கு நிச்சயம் பண்ணிக் கொண்டிருக்கிற திருதராஷ்டிர புத்
ரர்களைக்கண்டு அர்ச்சுனன் சஸ்த்ரஸம்பாதம் நடக்கிற வே
ளையிலே வில்லெடுத்துக்கொண்டவனாய் க்ருஷ்ணஸ்வாமியைப் பார்த்து ஸ்வா
மி உபயசேனைகளுக்கும் நடுவில் என்னுடைய ரதத்தை நிறுத்தும் இப்போ
து யுத்தம் பண்ண நிச்சயித்துக் கூட்டங் கூட்டிக் கொண்டிருக்கிற து
ர்புத்தியான த்ருதராஷ்டிரன் குமாரன் சேனைகளில் ஆருடையோ அவன் பக்ஷ
மாகச் சண்டைசெய்யவேணுமோ அவர்களைப் பார்க்கிறேன். இந்த ரத
த்தில் நிற்கும் யுத்தத்துக்கு துர்புத்தியான துரியோதனனு
க்குப் ப்ரியம்பண்ண நிச்சயித்தவர்கள் யார்யார் கூடியிருக்கிறார்களோ
அவர்களை நான் பார்க்கிறேனென்று சொல்ல. அதைக் கேட்டுக் க்ருஷ்ணமூ
ர்த்தியும் உபயசேனைகளுடைய நடுவே - பீஷ்மத்ரோணாசார்யர் முத
லான ஸகலராஜாக்கள் முன்னே உத்தமமான ரதத்தை நிறுத்தி ஓய் அர்
ச்சுன இப்போது கூடியிருக்கிறவர்களைப் பாரென்று
ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி சொல்லியருளினார்.

அப்போது - அர்ச்சுனனானவன் தகப்பன்மார் பாட்டன்மார் ஆ
சாரியர் மாமன்மார் அண்ணன்மார் தம்பிமார் பேரன்மார் பெண்
கொடுத்தமாமன்மார் சிநேகிதர் பந்துஜனங்களை எல்லாரையும் பார்த்
து மகாகிருபையுடனே துக்கப்பட்டுக்கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி
யைநோக்கி - ஓ! ஸ்வாமி! யுத்தம்பண்ண நிச்சயித்துக் கூடின
இந்தப் பந்துக்களைப்பார்த்தமாத்திரத்தில் என்னுடைய சரீரம் நடுங்
குகின்றது வாய் உலர்ந்து போகின்றது மயிர்க்கூச்செறிகின்றது கையிலே
யிருக்கிற காண்டீபம் நழுவுகின்றது மனது பிரமித்தாற்போலயிரு
க்கின்றது மேலும் நிற்கிறதுக்குச் சக்தியில்லாமலிருக்கிறேன்

விபரீதமான நிமித்தியங்களை பார்க்கிறேன் - ஆதலால் நம்முடையவர்களை யுத்தத்தில் கொன்றதினாலே ஒருசிரேயசுங்காணேன் கிருஷ்ண விசயங்களையும் கொன்றுஜெயிக்கும் ராச்சியத்தையும் சுகத்தையும் ஆசைப்படேன், நமக்குராச்சியமென்னத்துக்கு - போகமென்னத்துக்கு - சீவனமென்னத்துக்கு - இந்தப்பந்துக்களுடைய ராச்சியத்துக்கும் போகத்துக்கும் ஆசிக்கப்படுமோ இந்தப்பந்துக்கள் பிராணங்களையும் தனங்களையும்விட்டுயுத்தத்துக்குவந்திருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாரும் என்னைக்கொன்றாலும் நான் அவர்களைக் கொல்ல நிச்சயிக்கிறதில்லை எப்படிக்கொத்த திரிலோகராச்சியம் வந்தாலும் எனக்கு வேண்டாம் - இந்தப்பூமிமாத்திரமென்ன - ஓய் சனார்த்தன திருதராஷ்டிரன் புத்திரரைக்கொன்று நமக்கு என்னசுகம் உண்டாகப்போகிறது இந்தமகாசேனைகளைக் கொன்றதினாலே நமக்குப்பாவமே அநுசரிக்கும் ஆகையால் பந்துசனமான திருதராஷ்டிரனுடையகுமாரரைக்கொல்லலாகாது நம்முடையவர்களைக் கொன்றபடி சுகமநுபவிக்கப்போகிறோம் குலக்ஷயகிருதமானதோஷமுண்டாகும் - நம்மாலேயிந்தப்பாவம் நிவிர்த்திக்கிறதுக்கு எந்தஉபாயசிருஷ்டியும் அறியப்படாது - மேலும்குலக்ஷயமானாலும் பூர்வத்திலே யிருந்துவருகிற குலதர்மங்களெல்லாம் நாசமடையும்தர்மம் நஷ்டமானால் குலத்தைஅதர்மம்வந்து மூடிக்கொள்ளும் அதர்மத்தினாலே குலங்கெட்டால் குலஸ்திரீகள் தூஷிக்கப்படுவார்கள் - ஸ்திரீகள் தூஷிக்கப்பட்டால் வர்ணசங்கரமாகும் வர்ணசங்கரதினாலே குலங்கெடுத்தவனுக்கும் குலத்துக்கும் நாசம்வரும் - இவர்களுடைய பிதுர்க்கள்பிண்ட உதகக்கிரியைகளில்லாமல் அதோகதியடைவார்கள் - இந்தக்குலங்கெடுக்கிறவன் தோஷத்தினாலே யதார்த்தமானகுலதர்மங்கெட்டுப்போம் - குலதர்மங்கெட்டமனுஷியருக்கு நரகத்திலே எப்போது மிருக்கவேணுமென்று வேதசாஸ்திரத்திலே கேட்டிருக்கிறோம் - ஆதலால் ராச்சியத்துக்கும் சுகத்துக்கும் ஆசைப்பட்டுத்தன் வினைத்தையெல்லாம் கொல்லவுத்தியோகிச்சது மகாபாவம் அவர்களை யெதிர்த்தும்கொண்டு கொல்லுகிறதைப் பார்க்கிலும் ஆயுதம்விட்டுச் சும்மாவிருக்கிறதே நல்லது - ஆயுத்தரான திருதராஷ்டிரன் சேனைகள் என்னைக்கொன்றாலும் எனக்கு மிகுதியும்நல்லதென்று - அர்ச்சுனன்மகா பரிதாபமுகச்சொல்லி வில்லுமம்பும் கைவிட்டுத் துக்கத்தினாலே கலங்கின மனசுண்டானவனாய் யுத்தரங்கத்திலே ரதத்தின் மேலே சும்மாவிருந்தான்.

முதலாவதுசாகவத்தியாயமுற்றிற்று.

ரெண்டாவது.

சாங்கியயோகவத்தியாயம்.

கேட்டீரோ - திருதராஷ்டிரமகாராஜாவே - அப்பால் இந்தப்படி துக்கப்பட்டுக் கொண்டிருக்கிற அர்ச்சுனனைக்கிருஷ்ணமூர்த்தி பார்த்து - அர்ச்சுனா இந்தச்சேனைகளுக்குள்ளே நின்றுகொண்டு ஸ்வர்க்கபூமியிலேயிருக்கப்பிராப்தியில்லாமலிருக்க அபகீர்த்திக்கிடமாய்க்கேட்டமான இந்தச்சோகம் உயுத்தபூமியிலேயுன்னை யெப்படிவந்தனுசரித்தது - நீ க்ஷத்திரியதேவிபுத்திரனாயிருந்தாய் போதஞ்சபுத்தியுடனே கூடாதே இது உன்னிடத்திலே தகுதியல்ல, க்ஷத்திரியசத்துருக்களை நீ கொஞ்சமனசைவிட்டு எழுந்திருவென்று சொல்ல - அந்தவார்த்தையை அர்ச்சுனன் கேட்டு - ஒப்பமாகுந்து - உயுத்தத்திலே பிரமுகரான - பீஷ்மத்துரோணர்களுடைய பாணங்களிலும் எதிர்த்து எப்படிச்சண்டைகொடுக்கப் போகிறேன் - மகாத்துமாக்களானகுருக்களைக்கொல்லுகிறதைப்பார்க்கிலும் பெரியலோகத்திலே பிச்சையெடுத்துப் பிழைத்தாலும் நல்லது அர்த்தகாமமுண்டானகுருக்களைக் கொன்று அவர்களுடைய இரத்தத்திலேநனைந்தபோகத்தை யெப்படி அநுபவிக்கப்போகிறேன் ஆனாலும் அவர்கள் ஜெயிப்பார்களோ நாங்கள் ஜெயிப்போமோதெரியாது ஆராகிலும் பெண்ணை ஒருத்தனைக்கொன்று பிழைக்கவேணுமென்கிற ஆசையெனக்கில்லை அப்படிக்கொத்ததிருதராஷ்டிரசேனைகள் முன்னேயிருக்கிறார்கள் நான்லோபதோஷத்திலே கெட்டுப்போனஸ்வபாவமுண்டானவனாய் தர்மாதர்மமும் விசாரித்தறியமாட்டாமல் உம்மைக்கேட்கிறேன் இதுசரியோ எது நல்லதென்று நிர்ணயித்து எனக்குச்சொல்லும் நானுமக்குச்சீஷன் உம்மைச்சரணமடைந்தவென்னை ரட்சியும்.

இந்தராச்சியமும் தேசாதிபத்தியமும்வந்தாலும்சகலவிந்திரியங்களையும்சோஷிக்கப்படுத்துகிறதான என்னுடையசோகத்தைத் தள்ளுகிறவுபாயம் காணேனென்று குடாகேசனென அர்ச்சுனன் ரிஷிகேசனை கோவிந்தனைப்பார்த்து சண்டைசெய்யமாட்டேனென்று சொல்லிச் சும்மாவிருந்தான் - அதற்கு ரிஷிகேசனாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும்

உபயசேனைகள் நடுவே துக்கித்துக்கொண்டிருக்கிற அர்ச்சுனனைப்பா
ர்த்துப் பாரதவம்சத்திலே பிறந்தவனுக்கு இந்தத் துக்கமுண்டோ
வென்று சிரித்துக்கொண்டவராய்ச்சொல்லுகிறார் - ஓய் ; அர்ச்சுனா!
நீ-சோகிக்கத்தகாதவனைக்குறித்துச்சோகிக்கிறாய் நீகற்றவர்கள் விஷயமாயிருப்பதுபோலே
பிரக்ஞாவாதங்கள் சொல்லுகிறாய் விவேகிகளானபேர் விழுந்துபோகிற
சரீரத்தைக் குறித்துஞ் சாகாமலிருக்கிற ஆத்துமாவைக் குறித்துஞ்
சோகியார்கள் நானும் நீயுமிந்தராசாக்களும் முன்னில்லாதபேருமல்
ல இனிமேலில்லாமற்போகிற பேருமல்லபரமாத்துமாவான நானெ
ப்படி நித்தியனோ அப்படியே நீங்களனைவரும்நித்தியரே - தேகிக்கு
இந்தத்தேகத்திலே கௌமாரவயசு யௌவனவயசுவார்த்திகம் எப்படிவ
ருகிறதோ அப்படியே தேகம் விட்டுப்பின்னையாருந்தேகாந்தரப் பி
ராப்தியும் வருகிற அர்த்தத்திலே தீரனானவன்பிரமியான் பஞ்ச
இந்திரியங்களாலேபிறந்தசத்தாதிபஞ்சவிஷயபாவம் வருகிறதும்
போகிறதுமாயிருக்கிறது அநித்தியமென்று பொறுத்துக்கொள் ஓ
ப் புருஷசிரேஷ்டனான அர்ச்சுனா - க்ஷத்திரியனாய் யுத்தத்தில்வரு
கிற சுகதுக்கங்களைச்சமமாக நினைத்துத் தீரனாயிருந்தால் அவனைச்சீதோ
ஷ்ணங்கள் வாதியாது அவன்மோக்ஷத்துக்கு அருகனாவான் அசத்தா
னசத்துக்கு நித்தியத்துவமில்லை - சத்தான ஆத்துமாவுக்கு அநித்
தியத்துவமில்லையென்று இந்தவிரண்டுநிச்சயமும் தத்துவஞானிக
ளாலே காணப்படுகிறது எந்தஆத்துமதத்துவத்தினாலே யிந்தப்
பிரகிருதியும் பிரகிருதியினாலே பிறந்ததேகமும் சகலமும் பிரகாசி
க்கப்படுகிறதோ அப்படிக்கொத்தஆத்துமத்துவம் நாசமில்லாததெ
ன்றறி நாசமில்லாத ஆத்துமதத்துவத்தைப்பிரகிருதியினாலே பிறந்த
ஒருபதார்த்தமும்நாசம்பண்ணமாட்டாது - பிரகிருதியினாலே பிறந்
ததுமல்லாத இந்திரியங்கள் முதலானதுகளினாலே பரிபப்படாதவனும்நித்
தியனும்நாசமில்லாதவனுமாயிருக்கின்றசரீரிக்குஇந்தத்தேகங்கள் அ
நித்தியமாகையினாலே யுத்தம்பண்ணு - எவனுகி
லுமொருவன் ஆத்துமாவைக்கொன்றேனென்றவனறிந்தானோ ஆத்து
மாகொல்லப்பட்டவனென்றவனறிந்தானோ இந்தவிரண்டுபேரும் அறிந்த
பேரல்ல அதெப்படியென்றால் நித்தியனான ஆத்துமாகொன்றவனு
மல்லகொல்லப்படுகிறவனுமல்ல இந்தஆத்துமா பிறந்தவனுமல்ல
செத்தவனுமல்லமுன் பிறந்தவனுமல்ல பிறப்பில்லாதவனும் நித்திய
னும் எதார்த்தனும் பூர்ணனுமான இந்தஆத்துமா சரீரஞ்சாகிறபோது
அவன் சாகிறவனல்ல - எவனுகிலென்ன இந்தஆத்மாவைநாசரகிதனும்
நித்தியனும் பிறப்பில்லாதவனாக அறிகிறானோ அந்தப் புருஷன் எவ

னைக்கொல்லுகிறான் எவனைக்கொல்லுகிறான்பழைய சீலையைவி
ட்டுப்புதுச் சீலையைத்தரித்தாற்போலே தேகியானவன் ஜீர்ணமான
சரீரத்தைவிட்டுப்புது சரீரந்தரிப்பான் இப்படிக்கொத்த ஆத்துமா
வை அம்புகள்பேதிக்கமாட்டாது - தண்ணீர் நனைக்கமாட்டாது - வா
யுவுலர்த்தமாட்டாது இப்படிபேதிக்கப்படாதவராய் தகிக்கப்படா
தவராய்க்கொல்லப்படாதவராய் நனைக்கப்படாதவராய் உலர்த்தப்படா
தவராய்நித்தியராய் சகலசரீரங்களிலேயமிருக்கிறவராய் ஸ்திரமான
சுபாவமுமுண்டானவராய்அசலராய் அவ்வியக்தராய் சிந்திக்கப்படாதவ
ராய் அவிகாரமான ஆத்துமாவை அறிந்து இப்படிக்கொத்த ஆத்தும
தத்துவத்தைக்குறித்து துக்கிக்கலாகாது - ஆனாலுந்தினந்தோறும் பி
றக்கிறது மிறக்கிறதும் தேகமென்றறிந்தாயானால் அதற்குண்டா
ன சுவபாவமென்று துக்கப்படத்தேவையில்லை - பிறந்தோமென்றவ
னுக்குச்சாவுதப்பாது - செத்தோமென்றவனுக்குப் பிறப்புதப்பா
து ஆகையால் நீ சோகப்படவேண்டாம் சகலபிராணிகளும் ஆதிகால
த்திலேயெப்படியிருந்தார்களோ அறியோம்செத்த பிறகு எப்படி
யிருப்பார்களோ அறியோம்நடுவேயிப்போது பின்னுபின்னருபமா
ன்சரீரங்களுடனே காணப்படுகிறார்கள் - இதற்குத்துக்கப்படவேண்
டாம் ஒவ்வொருத்தன்புண்ணிய விசேஷத்தினாலே பாவரகிதனாயாச்ச
ரியம்போலே இந்தஆத்துமாவைப்பார்ப்பான் அவனைப்பின்னையொ
ருத்தனுக்குச் சொல்லுவான் பின்னையொருத்தன்கேட்பன்கேட்டுங்
கண்டுஞ்சொல்லியுமிந்த ஆத்துமாவை - ஒருவருமறியார்கள் தேகிநி
த்தியமும் அவஸ்தைப்படாதவனுஞ்சகலதேகாதிகளிலேயு மிருக்கிறவ
னாகையால் நீ துக்கப்படுகிறது தர்மமல்ல - க்ஷத்திரியனானவுன்னு
டையசுவதர்மம் விசாரித்துக்கொண்டு இங்கிதைக்குப் பயப்படவே
ண்டாம் க்ஷத்திரியனுக்குத்தர்மந்தப்பாத உயுத்தியத்தைப் பார்க்கிலு
ம் சிரேயசுவேறே யில்லை - தனக்குத்தானே யெதிர்வருகிறதாய்த்திற
ந்திருக்கிறசொர்க்கத்துவார முண்டானதான இப்படிக்கொத்த உயுத்
தியம்புண்ணியரானக்ஷத்திரியரடைவார்கள்தர்மந்தப்பாமலிந்த வுயு
த்தியம் பண்ணாமலிருந்தால் க்ஷத்திரியதர்மமான கீர்த்தியைவிட்டுப்
பாவத்தை யடைவாய்இதுமாத்திரமல்லசகல பூதங்களுங்கெடுகிறபோ
து கெடாத அபகீர்த்திசொல்லிக் கொள்ளுவார்கள் அபகீர்த்திசொல்
லிக்கொண்டால் எனக்கென்னவென்றுசொன்னால் சகலருக்குள்ளேயு
ம் பூசிக்கப்பட்டவனுக்குவந்த அபகீர்த்திமரணத்திலுமதிகம் - மகா
ரதிகரானபேருன்னைவெகுமானம் பண்ணுகையில் பண்ணுவித்துக்
கொண்டவனாகவிருந்த நீ இனிமேற்கொஞ்சத்தனத்தை யடைகிறாய்

உன் சத்ருக்களுன்னுடைய சாமர்த்தியத்தை நிந்திக்கக் கொண்டு சொல்லாதவார்த்தைகளெல்லாஞ் சொல்லுவார்கள் சத்ருக்களாலேயிப்படி சொல்லிக்கொள்ளுகிறதைப் பார்க்கிலும் துக்கமொன்றேயில்லை யுத்தியத்திலே செத்தாற் சொர்க்கமடைகிறாய் ஜெயித்தாற் பூமியாளுகிறாய் ஆகையால் க்ஷத்திரியனுக்குச் சுவதர்மமான யுத்தியம் நிச்சயித்துக் கொண்டெழுந்திரு - ஆத்மஞானமுண்டாய் சுகம் துக்கம் லாபம் ஜெயம் அபஜெயம் சமம்பண்ணிக்கொண்டு அந்த பிறகு யுத்தியத்துக்கு உத்யோகப்படு அப்படியானால் பாவமில்லை இந்தப் பத்தியித்திலேயும் ஞானயோகநிஷ்டரமாகச் சொல்லப்பட்டது - இனிகர்ம யோகத்தினுடைய புத்திகேள் நான் சொல்லுகிற புத்தியிலே நின்றாயானாற் கர்மபந்தத்தை விட்டு விடுகிறாய் இப்படிச்சொன்ன கர்மயோகம்பண்ணியெங்கே கடந்தேறப்போகிறேனென்று பயப்படாதே கொஞ்சமான அனுஷ்டானத்தினாலே தானே மஹாபலங் கிடைக்கப்பண்ணுகிறேன் பலன் அபேக்ஷியாமல் மோக்ஷத்திலே யிச்சையுண்டானவன் பண்ணுகிற கர்மயோகத்துக்கு நிச்சயரூபமான புத்தியொன்றாயிருக்கும் - காம்யகர்மங்களைப் பண்ணுகிற நிச்சயமில்லாதபுத்தி அனந்தமாய் வெகுவிதமாயிருக்கும் நிச்சயமில்லாமல் காம்ய கர்மங்கள்பண்ணிக்கொண்டு புட்புதவாக்கியமான வேதங்கள் சொல்லிக்கொண்டு விவேகமில்லாமல் வேதத்திலே சொன்ன காமியகர்யங்களே நல்லதென்று அவைகளைத்தக்கொண்டு இதுக்குமேல் ஒன்றுமில்லையென்று இச்சைகளிலேமனங்கொண்டாட் சொர்க்கபராய் அந்தச்சுவர்க்கானுபவத்தின்மேல் திரும்பிப் பிறப்புண்டாக்காமியகர்யங்களைப்பண்ணிக்கொண்டு போகஐசுவரியங்களைச் சதா அநுபவிப்பார்கள் போகஐசுவரியங்களிலே ஆசைப்பட்டுச் சொர்க்கமேபலமாகப் பண்ணிக்கொண்டுபுட்பிதவசனங்களிலேமனதை வைத்து ஆத்மஞானம் கெட்டுப்போச்சுது - ஆகையால அவர்களுக்கு நிச்சயரூபமானபுத்தி பலனிச்சையில்லாத காமானுஷ்டானத்திலே யோகத்திலும் நில்லாது - ஆனால காமியகர்மங்கள் வேதத்திலே சொல்லுகிறதேயென்றால் வேதங்கள் திரிகுண விஷயத்தைக் குறித்துச் சொல்லும் இந்தத்திரிகுணங்களுக்குட்படாமல் சுத்தசாத்விகனாய்.

ஓய்! அர்ச்சுனா! நீ தொந்தங்களானசுகதுக்கங்களுக்கு வேறானவனாய் யோகக்ஷேமமென்கிற திரவியார்ச்சனை திரவியரக்ஷணை செய்யாமல ஆத்துமஞானியாயிரு - அப்படியானால் வேதத்திற்சொன்னகர்மங்களை விடலாமோவென்றால் - நிறையத் தண்ணீ ரிருக்கிற மடுவிலே தாகமானவன் தனக்குவேண்டிய தண்ணீர் மொண்டுப்பானம்பண்

னுக்கால் அப்படிப்போலவேயோன பிராமணன்சகல வேதங்களிலேயும்மோக்ஷவிரோதமில்லாத அர்த்தங்களை சங்கிரகிப்பான் - அப்படியே மோக்ஷ இச்சையுள்ளவனுக்கு மோக்ஷவிரோதமில்லாதகர்மத்திலே ஆசக்தியைப்பண்ணு - பலஇச்சையில்லாமலொருக்காலும் - புத்தியையசைதே - கர்மம் பண்ணுகிறதுக்கும் பலனனுபவிக்கிறதுக்கும் தான் காரணமென்கிறபுத்தி வேண்டாம் - சுவதர்மமும் விடலாகாது - யோகநிஷ்டனாய்ப்பலசங்கம் விட்டுவிட்டுப்பலசித்தித்தபோதும் சித்தியாதபோதும் சமனாய்கர்மங்கள் பண்ணு - சமபுத்தியாயிருக்கிறதே யோகம்- கர்மபலகர்த்தன் ஈசுவரனேயென்கிறதுக்கு அன்னியமான காமியகர்மம் அதர்மமானது ஆகையால் இப்போது சொன்னபுத்தியினாலே நிலைக்கடையாயிரு - காமியகர்மங்கள் பண்ணினபேர் அதிர்மசமுசாரிகள் இந்தப்புத்தியோகத்துடனே கூடிக் கர்மானுஷ்டானம் பண்ணினவன் இந்தலோகத்திலே தானே சுகிருத துஷ்கிருதமிரண்டியேயும் விடுபடுவன் - ஆகையால் பலத்தியாகரூபமானகர்மயோகத்தைச்செய் - இந்தயோகம் கர்மானுஷ்டானத்திலே மகாநேர்ப்பானது - மகாத்துமர்க்களாவேபரித்தபத்தியுடனே கூடிக்கர்மபலத்தைவிட்டு ஜன்மபந்தங்களிலேவிடுபட்டுத்தோஷரகிதமான பதத்தை அடைவார்கள் எப்படியானாலென்ன இந்தச்சுகர்மானுஷ்டானத்தினாலஞ்ஞானரூபமானபலத்தை உன்னுடையபுத்தியெப்போது விட்டிருக்கிறதோ - அப்போது கேட்கிறதும் கேட்கப்படுகிறதினாலேயும் வைராக்கியமில்லாமலிருக்கிறாய் நானுவிதமாகவுஞ்சொல்லக்கேட்கப்பட்டும் எப்படி செய்வேனென்று சந்தேகித்தவுன்னுடைய புத்தியெப்போது பலவிச்சையில்லாமல்கர்மானுஷ்டானத்திலே நிச்சயமாயிருக்குமோ அப்போது யோகத்தை அடைவாய் - யோகமாகிறதே ஆத்துமஞானமென்று இப்படிகிருஷ்ணசுவாமிசொல்ல - அர்ச்சுனன்கேட்கிறான்:

ஓ! சுவாமீ- சமாதியுக்தனான ஸ்திதப்பிரக்ஞனுக்குலக்ஷணமெப்படி சுவரூபமெப்படி இந்த ஸ்திரபுத்தியுண்டானவன் எப்படி வார்த்தைசொல்லுவான் எப்படியிருப்பான் எப்படிநடப்பானென்றுகேட்கக் கிருஷ்ணசுவாமிசொல்லுகிறார் -ஓ- அர்ச்சுனா- எப்போதாகிலென்ன - தன்னுடையமனதிலே ஆத்தும ஞானத்தினாலே சந்தோஷித்துக்கொண்டு ஆத்தமனசுக்குவருகிற சகலவிச்சைகளும் எப்போதுவிட்டுவிடுகிறானோ அப்போது ஸ்திதப்பிரக்ஞனென்றுசொல்லப்படும் - துக்கம்வந்தபோதுமனதுஉத்வேக விழாமற்சுகத்திலே ஆ

மெசப்படாமற் சந்தோஷம்பயங் குரோதம்விட்டுவிசார பரனாயிருந்
திறவனைஸ்திரபுத்தியுடையவனென்று சொல்லப்படுமவனொருவன்
னே சகலபதார்த்தங்களிலேயும் அத்தியந்தம் ஆசக்தியில்லாமற் சுபா
சுபமாய் வந்தவைகளிலே சந்தோஷமும் துவேஷமுமில்லா
தவனே ஸ்திதப்பிரக்ஞனன் - கூர்மமானது தன்னுடைய அங்கங்க
ளிலெ வெளிக்கு வந்தபோது வொருத்தனைக்கண்டால் எப்படி அடக்கிக்
கொள்ளுமோ அப்படிவிஷயத்தின்பேரிலே வருகிற பஞ்சேந்திரிய
ங்களைத்திருப்பிக்கொள்ளுகிற பிரக்ஞையே ஸ்திதப்பிரக்ஞை - ஆத்து
மாவையறியாமற்சகலவிஷயங்களையும் அநுபவியாமல்விட்டுவிட்டா
லும் ஆசைவிடாது ஆத்துமாநுபவமுண்டானவனுக்கு ஆசைவிட்டு
விடும் ஆத்துமக்கியானமின்றி விஷயங்கள்பேரிலே யிச்சைபோ
காமல்மோக்ஷ யத்தனம் பண்ணினாலும் அவனுடையமனதை இந்தி
ரியங்களிழுக்கும் சகலவிந்திரியங்களையும் ஜெயித்து மனதைத்தன்
னிடத்திலே நிறுத்திக்கொண்டிருந்து இந்திரியங்களைத்தன்வசப்பண்
ணிக்கொண்டவனைப்புத்தி - ஸ்திரபுத்தியென்றுசொல்லப்படும் - புரு
ஷனானவன் ஆத்துமத்தியானமில்லாமல்விஷயங்களைத்தியானம் பண்
ணினால் விஷயங்களிலே சங்கம்பிறக்கும் அந்தச் சங்கத்தினாலே யிச்
சையுண்டாம் - அந்த விச்சையினாலே குரோதமுண்டாம் அந்தக்கு
ரோதத்தினாலே மோகமுண்டாம் அந்தமோகத்தினாலே விவேகமில்
லாத அஞ்ஞானமுண்டாம் அந்த அஞ்ஞானத்தினாலே ஆத்துமத்தியா
னத்திலேபுத்தியில்லாமற்போம் அப்படிபுத்திநாசமானால் சம்சாரத்தி
லேயழுந்திநாசமடைவான் ஆகையால் ஆத்துமாவினிடத்திலே புத்தி
நிலைக்கவுடையுண்டானவனுக்கு இந்திரியங்களினாலேவிஷயங்களைப்போ
கித்தாலும் சகலதுக்கங்களுமில்லாமற் போய்ப்பிரசன்னசித்தமுண்டா
னவனுக்குப்பரமாத்துமாவின்பேரில் புத்திநிலைக்கவுடையுமஞ்ஞா
னம்பாசமில்லாதவனுக்குப்புத்திசாந்தமடையாது ஆத்தும பாவனை
யுமில்லாதிருந்தால் ஆத்துமபாவனையில்லாதவன்விஷயங்கள்பேரிலே
ஆசைவிட்டுசாந்தியடையமாட்டான் - சாந்தமில்லாதவனுக்குச்சுக
முமில்லை இந்திரியங்கள் பிறகேமனத்தைவிட்டால் அந்த இந்திரியச
ங்கத்தினாலே ஆத்துமஞானத்திலே புத்தியில்லாமல் வாயுவினாலேசமு
த்திரத்திலே ஓடத்தையடித்துக் கொண்டுபோனாற்போற் போகும்
ஆகையால் எவனுடையஇந்திரியங்கள்விஷயத்திலே நாடாமல் நிக்கிரி
க்கப்படுமோ - அவனுடைய பிரக்ஞை ஸ்திரமானது - சகலபூ
தங்களுக்கும் நிசியாயிருக்கிறபோது ஞானிசாக்கிரமாயிருப்பன் - சகல
பூதங்களும் சாக்கிரமாயிருக்கிறபோது ஞானியானவன் நிசியாகப்பா

த்தீப்பான் நிறைந்த சலனமில்லாத சமுத்திரத்திலே யெத்தனை ஜலங்கள் பே
ய்க்கூடினாலும் அதிகங் குறைச்சலில்லாமலிருப்பதுபோல அ
ப்படிப்பட்டவனுக்கு சகல விஷயங்களும் பிரவேசித்தாலுஞ் சல
னமில்லாமலிருப்பானேயல்லாமல் அவன் சாந்தமடைவன் இச்சையுள்ளவ
னுக்குச் சாந்தமில்லை - கர்மங்களென்கிற பெருங்காட்டின் விஷயங்களி
லே நிச்சயப்பட்டவனாய் மோகாதிகளாய் சஞ்சரிக்கிறானே அவன் சா
ந்தமடைவன் ஓய் அர்ச்சுனா - இது பிரமத்தினுடைய சித்து - இந்தப்
பிரமநிலையைக் கூடுகிறானே அவன் அந்தியகாலத்திலே விடுபட்ட
வன் - இப்படி நிசமான அப்பியாசம் பண்ணினவன் மோக்ஷத்தை அ
டைவானென்று ஸ்ரீகிருஷ்ணசுவாமி சொல்ல அதற்கப்பால் அர்ச்சுனன்
கேட்கிறான் கேட்டதைத் திருதராஷ்டிரமகாராஜாவே யென்று சஞ்சய
முனிவர் சொல்லியருளுகிறார்.

இரண்டாவது சாங்கியயோகவத்தியாயம் - முற்றும்.

மூன்றாவது.

கர்ம்மபிர்ம்மயோகவத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பார்த்து ஓய்-
கேசவா - கர்மத்தைக்காட்டிலும் ஞானமே சிரேஷ்டமென்று உமக்
குச் சம்மதமாச்சுது ஆனாலுங் கோரமான கர்மத்திலே யென்னை யேவுக்
குவிமுகமாய்ச் சொல்லுகிறீர் - எந்தவாக்கியங் கேட்டதினாலே பரகதியை
டையமேகம்மாக நான் சிரேயசு அடைவேனோ அந்தவாக்கியமோ
னிற்றநிச்சயமாகச் சொல்லுமென்று கேட்க ஸ்ரீகிருஷ்ணசுவாமி சொ
ல்லுகிறார் ஓய், அர்ச்சுனா- ஞானயோகிகளுக்கு ஞானநிஷ்டையும் கர்
மயோகிகளுக்குக் கர்மநிஷ்டையும் என்று நான் சொல்ல நீ கேட்டிருந்
துமறந்தாய் - ஆரம்பித்த கர்மம் விட்டுவிட்டாலும் அவன் விட்டவனே
ல்லகர்மம்பண்ணாமலிருந்தாலும் ஞானமடைய மாட்டான் - இந்த நி
த்தியநைமித்தியகர்மம் விட்டதினாலே க்ஷணமாகிலுங் கர்மஞ் செய்யா

மலிருக்கப்போகிறதில்லை சகலமானபேரும் பிரகிருதிகுணத்தினாலே கர்மம்பண்ணிக்கொண்டேயிருக்கிறார்கள் ஆகையாற் பலனிச்சியாமற்கர்மானுஷ்டானத்தினாலே ஞானயோகம் சாதிக்கவேணுமென்கிறதே தாற்பரியம் அப்படிசெய்யாமற் கர்மேந்திரியங்களைப் பந்தித்து மூடாத்துமாவாய் விஷயங்களைமனதிலே நினைத்துக்கொண்டிருந்தால் அவன் மித்தியாசாரனென்றுசொல்லப்படுவன் எவனாகிலென்ன இந்திரியங்களைமனதிலே நியமம்பண்ணிப் பலசங்கரகிதனாய்க் கர்மம்பண்ணுவானாகில் அதுஅவனே செய்யவேண்டிய கர்மத்தைவிட்டுவிட்ட மேலைய ஞானநிஷ்டையைக்காட்டிலும் அதிகமாய் - சரீரமெடுத்தவனுக்கெல்லாம்கர்மம் பண்ணுகிறது நியமமாகையால் நீயும்நியமமான கர்மம்பண்ணு - நிசகர்மத்தைவிட்ட வியானத்தைக் காட்டிலும் நிசகர்மத்துடனே கூடியயோனைப் பண்ணு அது பண்ணமாட்டேனென்றால் சரீரத்துக்கு நடக்கவேண்டியகர்மத்தைவிட்டுவிடவேணும்கர்மம்பண்ணுற் பந்தமென்றுவிதாகர்மம்பந்தமல்லாமல் யக்ஞார்த்தமானகர்மம்பந்தமல்ல.

ஓய்! அர்ச்சுனா நீபலவிச்சையில்லாமல் யக்ஞார்த்தமானகர்மம்செய் அந்தக்கர்மமாகதேதேதல்றால் - பூர்வத்திலேபிரஜாபதியானவர் பிரஜைகளைச்சிருஷ்டிக்கவேண்டி யெக்கியங்களுடனே கூடச்செனங்களைச்சிருஷ்டித்து இந்தயெக்கியமார்க்கத்தினாலே நீங்கள்விருத்தியடையுங்கோளிந்தயெக்கியமார்க்கமேயுங்களுக்கு இஷ்டார்த்தங்கொடுக்கிற காமதேனுவாமென்றார் ஆதலால் இந்தயெக்கியம்பண்ணுகிறதேவதைகள் சந்தோஷித்துஉங்களைரக்ஷிப்பார்கள் இந்தப்படியொன்றுக்கொன்று பாவனையுண்டாயுத்திருஷ்டமான சிரேயசுஅடைவீர்கள் - யெக்கியத்தினாலே பூசிக்கப்பட்டதேவதைகள் இஷ்டமான போகங்களையுங்களுக்குக்கொடுப்பார்கள் அவர்கள்கொடுத்தபதார்த்தம் அவர்களுக்குக்கொடாமல்தனக்கென்று எவன்போசிக்கிறானோஅவன்திருடன் யெக்கியம் பண்ணச்சேஷித்தஅன்னம் போசித்தவன் சகலபாவத்தினும் விடுபட்டவன்தனக்கென்றுசமைத்துப்போசித்தவன்பாவத்திலே கட்டுப்பட்டவன்மேலும் அன்னத்தினாலே பூதங்களுண்டாச்சுது இந்திரனாலே அன்னமுண்டாச்சுது யெக்கியத்தினாலேயிந்திரனுண்டானான்கர்மத்தினாலேயக்கியமுண்டாச்சுதுபிரமத்தினாலேகர்மமுண்டாச்சுதென்றறிபிரமம்அட்சரத்தினாலேயுற்பவமானது - ஆகையால் சர்வகதமான பிரமநித்தியம்அது யெக்கியத்தினாலே பிரதிஷ்டிதமாயிருக்கும் இப்படிக்கொத்தபரமபுருஷனாலே நடத்துவிக்கப்பட்டஞானசக்கிரத்திலேயெவன்வர்த்தியாமலிந்திரியபர

சமாய்ப்போகிறதென்று சொல்லியிருக்கிறார் - ஆரொருவன் ஆத்துமாவினிடத்திலே சந்தோஷமுடையவனாயும் ஆத்துமானுபவத்தினாலே திருப்தியடைந்தவனாயும் ஆத்துமானுபவத்தினாலே சந்தோஷித்தவனாயும் ஆத்தும தரிசனமடைந்தவனாயிருக்கிறானோ அவனுக்குச் செய்யவேண்டிய காரியமொன்றுமில்லை - ஆகையால் ஆத்தும தரிசனம் சித்திப்பதற்குச் செய்யவேண்டிய பிரயோசனமாய்ச் செய்யக்கூடிய பிரயோசனமும் செய்யாதிருந்தால் பிரத்தியவாயமுமில்லை - சகல பூதங்களிலேயும் ஒரு அர்த்தத்திலேயு மிச்சையில்லை ஆகையால் பலவிச்சையில்லாமல் செய்யவேண்டிய கர்மமெல்லாம் செய்கிற புருஷன் பரம புருஷனிடத்திலே யடைவான் ஞானயோக நிஷ்டரான ஜனகாதிகள் கர்மயோகத்தினாலே ஞானசித்தியடைந்தார்கள் உலோகத்தாருடைய நடபடியைப் பார்த்துக் கொண்டிருக்கிறவனாய் நீயுங் கர்மத்தைப்பண்ணு - சிரேஷ்டனானவன் எதையாசரிப்பானோ அதையே இதரமான ஜனங்களும் ஆசரிப்பார்கள் அதையே பிரமாணம் பண்ணிக் கொண்டுலோகமும் அதை அனுசரித்து வர்த்திக்கும்.

ஓ; அர்ச்சுனா! சர்வேசுவரனாய் சுவதந்திரியனான நானே அவதாரமவதரித்து இந்த மூன்று லோகங்களிலேயும் என்னிச்சையினாலே யிருக்கிற எனக்குச் செய்யவேண்டியதொன்றுமில்லை - முன்னொன்றடைந்ததை கூடியிருந்தவனுமல்ல இனிமேல் கூடப்போகிறது மில்லையிப்படியிருந்தும் கர்மத்திலே வர்த்திக்கிறேன் ஆகையால் - ஒருக்காலுங் கர்மத்திலே மறப்பில்லாமல் நான் வர்த்திக்கச் சகல மனிதர்களும் என்வழியே வர்த்திப்பார்கள் ஆகையால் நான் கர்மம்பண்ணாதிருந்தால் சகல ஜனங்களுங் கர்மம் பண்ணாமற் சங்கரமாய் நாசமடைவார்கள் இந்த நாசம் நானே பண்ணினவனுமாவேன் அர்ச்சுனா அஞ்ஞானிகள் கர்மத்திலே ஆசக்தியுண்டாய்க் கர்மமெப்படி பண்ணுவார்களோ அப்படியே ஞானிகளும் ஆசக்தியில்லாமலும் லோகசங்கிரகமாகக் கர்மம் பண்ணுவார்கள் ஆத்துமஞானமில்லாமல் கர்மானுஷ்டானத்திலே யிச்சையுண்டாய் நான்சொன்ன கர்மயோகமில்லாமல் ஞானஞ்சாதிக்கிறதுக்கு வேறேயுபாயமுண்டென்று புத்தியிலே சலங்கமுண்டாம் - வித்வானானவன் கர்மயோகத்தினாலே ஆத்துமஞானஞ் சாதிக்கிறேனென்ற புத்தியுடனே கூடிக் கர்மயோகியாய்ச் சகல கர்மங்களும் இச்சையில்லாமலே ஆசரிப்பன் - பிரகிருதி குணத்தினாலே செய்யப்பட்ட சகல கர்மங்களும் அகங்காரத்தினாலே மூடனானவன் - நான் - பண்ணினேனென்று அறிவன் ஓ - அர்ச்சுனா - தத்துவக்ஞானியா

னவன்குணகர்மம் பிறிக்கறிந்து - மூன்றுகுணமும் அதினதின்காரி யமாகவிருக்குமென்றறிந்து நான்கர்த்தனல்லவென்றிருப்பன் பிர கிருதிகுணத்திலேமூடனானவன் அந்தகுணகர்மங்களிலேயாச த்தியுண்டாய் ஞானமறியாமல் மற்றுமவன் , ஞானயோகியானவன்ச ரீவக்கியமுள்ளபடியினாலே அந்தஅக்கியானிகளுடைய புத்தியைமயக் கப்பண்ணவில்லான் நீயும் ஆத்துமஞானத்தினாலே சகலகர்மங்களையும் எ ன்னிடத்திலேவைத்து ஆசையில்லாமல் மமகாரமிகுதாய் மனதிலேதா பம்விட்டு யுத்தம்பண்ணு, எந்தமநுஷ்யனானாலென்ன இந்தச்சா ஸ்திரார்த்தத்திலே பக்தியுண்டானவர்களாய் அசூயையில்லாதவர்களாய் என் னுடையமார்க்கத்தை நித்தியமாசரிப்பாரோ - அவன்கர்மத்தினாலேவி டுபட்டவன் எவனொருவன் அசூயையுண்டாய் சகலஆத்துமாக்களும் எ ன்னிடத்திலே யிருக்கிறார்களென்று என்னுடையமார்க்கத்தை அனு ஷ்டியாமல் கேவலம்கர்மமார்க்கத்திலேதப்பண்ணினானவன் ஞானமில்லா த மூடனென்றறி - பிரகிருதிக்கவசமான ஆத்துமஞானமறிந்த வர்களும் பூர்வகர்மவாசனையினாலேதங்களுடைய பிரகிருதிக்குத்தக் கதாகவே சேஷ்டிப்பன்ஆகையால் சகலப்பிராணிகளும் பிரகிருதிவா சனையிலே அடைவார்கள் சாஸ்திரார்த்தமான இந்திரியநிக்கிரகமெ ப்படிபண்ணப்போகிறார்கள்பஞ்சேந்திரியங்களுக்கும்அந்தந்தவிஷ யங்கள் கிடைத்தபோது சந்தோஷமும்கிடையாதபோது துவேஷமு ந்தப்பாமல் வரும் புருஷனுக்கு ராகத்துவேஷமே சத்துரு - ஆகை யால் நீ ராகத்துவேஷவசத்தை அடையவேண்டாம் பரதர்மம் நன் றாக அனுஷ்டிக்கிறத்திலும் சுவதர்மமே நல்லது - பரதர்மம்பயப்பி ரதமாகையால் சுவதர்மமே சிரேயசு இதுவென்னவெனில் பிர கிருதியினாலே பிறந்ததேகமுண்டானவனுக்குக் கேவலம் ஞானயோ கம் நல்லதானாலும் தான்பிறக்கச்சே கூடப்பிறந்ததாகையால் கர்ம யோகத்துடனேகூடினஞானயோகமேநல்லதென்றதாற்பரியம் என் றுசொல்லுகிறாரது கேட்டு அர்ச்சுனன்கிருஷ்ணமூர்த்தியைப்பார்த் துச்சுவாமி - புருஷனானவன்விஷயங்கள் அனுபவிக்கிறதற்கு இச் சையில்லாமலிருந்தும் எவனாலே செலுத்தப்பட்டவனாய் பலவந்தமாக ப்பாவமாசரிக்கிறானென்றுகேட்க - அதற்குக்கிருஷ்ணமூர்த்தியும்.

ஓய் ! அர்ச்சுனா- இந்த இச்சைகள் குரோதத்தினாலேபரிண மித்துரஜோகுணத்திலே பிறந்துமகாபாவசுரூபமானதாகையால் இ துக்கு மட்டில்லை, இதேசிபானயோகத்துக்குவயிரி யென்றறி- புகை யினாலே அக்கினிமூடிபட்டாப்போலவும் அழுக்கினாலேகண்ணாடிமூ டிபட்டாப்போலவும் மாங்கிஷத்தினாலேகெற்பம்மூடிபட்டாப் போ

லையும் இச்சைகளினாலே சகலசெந்துக்களும்மூடப்பட்டார்கள். அபிர்த சுரூபமானஇயானத்துக்குநித்தியவைரியாயிச்சைகளைக்கெடுக்கிறது- இந்திரியங்களும் மனதும்புத்தியு மிந்த இச்சைகளுக்கு ஆதாரமாயிருக்கும் இதுவே தேகியையும் ஞானத்தையும் மோகிக்கப் பண்ணும் ஆகையால் - அர்ச்சுனா நீ முதல்இந்திரியங்களை நிறுத்திக்கொண்டுஞானத்தைக்கெடுக்கிற பாவசொரூபமான இச்சையை விட்டுவிடு இந்திரியங்களுக்குமனது காரணம்மனதுக்குப் புத்தி காரணம்புத்திக்கு இச்சைகாரணம் இந்தப்பிரகாரமாகப்புத்தியினு மிச்சையேயுத்கிருஷ்டமானசத்துருவென்றறிந்து புத்தியினுலேதாண்டப்படாத இச்சையென்கிற சத்துருவைவிட்டுவிடுஎன்றார்.

மூன்றாவது கர்ம்மபிர்ம்மயோகவத்தியாயம் - முற்றும்.

நான்காவது.

ஞானகர்மயோகவத்தியாயம்.

அப்பால் ஸ்ரீகிருஷ்ணசுவாமியும் அர்ச்சுனனைப்பார்த்து - ஓய் அர்ச்சுனா - இந்த அவ்வியயமானயோகம் ஆதிகாலத்திலேநான்சூரியனுக்குச்சொன்னேன் சூரியன்மனுவுக்குச்சொன்னான்மனு இக்ஷுவாகுவுக்குச்சொன்னான் இந்தப்பிரகாரமாகப்பரம் பரையாகவந்தயோகத்தைராஜரிஷிகள் அறிவார்கள் அந்தயோகம்வெகுகாலமானபடியினாலேஉபதேசிக்கிற பேருங்கேட்கிறபேரும்- கனமானபுத்தியில்லாதவர்களானபடியினாலே நஷ்டமாய்ப் போச்சுது நீ யெனக்குப்பக்தனுகையாலும் சிநேகிதனானபடி யினாலேயும் புராதனமான இந்த யோகமுனக்குச்சொல்லப்பட்டது - இதுவேரகசியம்- இதுவேயுத்தமமென்றுசொல்லியருளினார் அதுகேட்டு அர்ச்சுனன் கிருஷ்ணபகவானைப்பார்த்து - ஓய்- சுவாமீ- உம்முடையசனனம் பிறகுண்டானதும் சூரியனுடையசனனம்முன் னுண்டானது மென்றுசொல்லாமல் முதற்சூரியனுக்குநீர்சொன்னேனென்றுசொன்னீர் அதுநானெப்ப

ட்-அதியமெல்லாஞ்சொல்ல - ஸ்ப்ருஹா எனக்கு அனேகவித்யமா ங்களைச்சிருஷ்டிக்கையாலே ஜன்மங்களுக்குச் சகல ஜெகங்களு க்குமாஸ்ரிதருக்குப் பேன் நியந்தஜென்மங்களை அறியமாட்டாப். அப்படிப் படியென்னில் நான் பிறப்பில்லாதவனாயும் நாசமில்லாதவனாயும் ச மஸ்தபூதங்களுக்கும் ஈஸ்வரனாயும் விளங்குகையால் பிரகிருதியை அடக்கிக்கொண்டு ஆத்மமாயையினாலே அவதரிப்பேன் எப்போது தேதர்மத்துக்குக் குலைவு வருகிறதோ எப்போது அதர்மப்பிரபலமா மோ அப்போது என்னுடைய ஆத்மாவைச் சிருஷ்டித்துக்கொள்வேன் - ஸிஷ்டர்களை ரக்ஷிக்கிறதுக்கும் துஷ்டர்களை நிக்கிரகிக்க வேண்டியும் தர்மஸ்தாபனம் பண்ண த் திரியுகந்தோறும் தர்மம் நிறுத்தவேண்டியும் அவதரிப்பேன் என்னு னுடைய ஜன்மகர்மம் திவ்யமாகவறிகிறவன் அவன் வர்த்தமானதே கத்தைவிட்டு என்னையடைவான் அவன் திரும்பிப் பிறக்கமாட்டான் ஞானதபஸினாலே பவித்திரராய் ராகபயக்குரோதம் விட்டு என்னிட த்திலே நிலைபெற்றுத்து என்னையேயுபாசித்து என்னுடைய யெதார் த்தத்தை அடைந்தார்களே அனேகரும் - எவன் என்னை எப்படியான ப்பண்ணுகிறானோ நான் அவனுக்கு அப்படியே கிருபை பண்ணுவேன் ச கலமானவர்களும் என்னுடைய மார்க்கத்திலே அனுவர்த்திப்பார்க ள் இந்தமானிடர்கள் கர்மபலத்தையிச்சித்து இவ்விடத்திலே வேறு தேவதைகளைக்குறித்து ஆராதனை பண்ணுவார்கள் அவர்களுக்குமனு ஷியலோகத்திலே அந்தக்கர்மபலம் சீக்கிரமேசித்தியாம் அவர்களுக் குத்தக்குணங்களின் கர்மங்களும் பிரித்து நாலுவர்ணங்களும் என்னா லே சிருஷ்டிக்கப்பட்டது அந்தச்சிருஷ்டிக்குநான்கர்த்தனாக விருந் தும்கர்த்தாவல்லாதவனாக அவ்வியயனாக அறி - ஆகையால் அப்படி சி ருஷ்டிக்கப்பட்டகர்மங்களென்னைத்தொடமாட்டாது - எனக்கு அந் தக்கர்மபலத்திலே ஆசையுமில்லை இப்படியென்னையெவன் அறிகிறா னோ அவன்கர்மங்களாலே கட்டுப்படான் இந்தப் பிரகாரமாக அறிந் து பூர்விகளான முமுக்ஷுக்களாலே கர்மம்பண்ணப்பட்டது ஆகை யால நீயும் பூர்வமாக வருகிறகர்மத்தைப்பண்ணு மோக்ஷம் வேண்டி னவனுக்குச்செய்யத்தக்ககர்மமேது அதுவல்லாதகர்மமேது - என் றுவித்துவாங்கிஷரான பேரிந்த அர்த்தத்திலே மலைப்பார்கள் எந்தஞா னத்தை அறிந்து சம்சாரபந்தங்களை விடுபடுவார்களோ அப்படிக் கொத்தகர்மத்தையுனக்குச்சொல்லுகிறேன் - மோக்ஷசாதகமானகர்ம த்திலே செய்யத்தக்ககர்மமேதுவுண்டு அதுவே ஞான சுவரூபத்தை அறியத்தக்கது அந்தக்கர்மத்தினுடைய கெதி அறியப்படாதது கர்மம் பண்ணுகையில் அந்தக்கர்மபலமும்கர்மம் பண்ணுவிக்கிற வனும்ப

ஜனாந்தராதிகளையும் ஆத்மாவானவனைக் கர்மேந்த்ரியங்களிலே வைக்கிறி
ருக்கிற அவ்வியத்துக்கு அடக்கமான ஆத்மாவை அந்திலே வைக்கிறதி
னாலே பலமும் பாவமுங் கூடின தலைப்புத்திபுண்டானவன் அவனே கா
ம்ய கிரியைக்கு அனர்த்தமானவன் என்றுகிறாம் கர்மம் ஆரம்பித்த
நம்போது சங்கற்பமுமில்லாமற் போகும் அந்த கர்மங்களி
லே பற்றுதலில்லாமலே சம்மதி அனுசரித்துவரும் பெரியவர்க
ள் சொன்னார்கள் கர்மபலத்தைவிட்டு ஆத்மாவினாலே தீமைதிரு
ட்டுத் தீர்ப்பிரயத்தினால் கர்மானுஷ்டானம் பண்ணினவன் சத்துருக்கள்
கர்மபலனில்லையென்று ஆகையினால் தவறும் சித்தசுத்திய
ங்களும் நியமித்தால் சகலபதார்த்தங்களிலும் ஆசையில்லாதவரும்
பலம் சரீரசம்பந்தமான கர்மம் பண்ணினாலும் அந்தமோக்ஷமான
பதத்தை அடையான் ஆனதுக்குச் சரீரத்தைத் தரித்திருந்தே சம்பூர்த்தியி
னால் கொண்டு உயிரான கர்மம் பண்ணுகிறபோது அவனுக்கு நிச்சயமான
நிராந்தங்கள் சமித்ததுபோல் பலமில்லை தவறுப் கர்மபலனுடைத்ததுபோ
லாகி நித்தியமாக நம்போதும் சமமாக்க கர்மம் பண்ணினவன் கர்மத்திலே
கட்டுப்படான் - ஆத்மாவினாலே கூடினவனாய் அடைவானாய்
இதனைக் கவிட்டு இராகத்துவேஷமில்லாதவனாய் யெக்ஞம் பண்ணினா
னாத்மாக்கு யெக்ஞம் பண்ணினவனுக்குச் சகல பூர்வகர்மங்களும் லயி
த்துப்போம் - எந்த யெக்ஞமும் பிரம்மம் - அவிசும் பிரம்மமே -
அக்கினியும் பிரம்மமே - ஆத்மாவுக்கு இதெல்லாம் பிரம்மமென
று பண்ணின கர்மம் பிரம்மகர்மம் அந்தப் பிரம்மகர்மம் சமாதியிலே
லே அடையவேண்டியது - அப்படியிருக்கச் சிலயோகிகள் தெய்
வமேமெய்க்கியமாக பாவிப்பார்கள் பின்னையுஞ் சிலபேர் பிரம்ம
மே ரூபமான அக்கினியிலே யக்ஞமானவனை ஓமம் பண்ணு
வார்கள் பின்னையும் சிலபேர் சுரோத்திராதியிந்திரியங்களை மனோ
நியமமென்கிற யெக்ஞத்திலே ஓமம் பண்ணுவார்கள் சிலபேர் ச
ப்தாதிவிஷயங்களை இந்திரியங்களென்கிற அக்கினியிலே ஓமம் பண்ண
ுவார்கள் இது இந்திரியஷயமுயற்சி பலிக்கத்தக்கதாயிருப்பதென
ன்கிறது நாற் பதம் பின்னையுஞ் சிலபேர் சகலமான இந்திரியகர்ம
ங்களும் ஞானப்பிரகாசமானமனோ நியமமென்கிற யோகாக்கினியி
லே ஓமம்பண்ணுவார்கள் சிலபேர் திரவியயெக்ஞம் பண்ணுவார்க
ள் சிலர் தபோயெக்ஞம் பண்ணுவார்கள் சிலர் யோகயெக்ஞம் சிலர் சுவா
த்தியாயயெக்ஞம் சிலர் ஞானயெக்ஞம் பண்ணுவார்கள் - இவர்
களெல்லாரும் திடவிரதமான் யோகிகள் சிலர் அபானவாயுவிலே பிரா

னவாயுவை ஓமம்பண்ணுவார்கள் சிலர்பிராணவாயுவிலே அபானவா
யுவை ஓமம் பண்ணுவார்கள் சிலர்பிராணன் அபானன் இரண்டையும்
அடக்கிப்பிராணாயாமம் பண்ணுவார்கள் சிலர்கொஞ்ச ஆகாரமுண்டா
னவர்களாய்ப் பிராணனைப்பிராணனிலே ஓமம்பண்ணுவார்கள் இப்
படிசொல்லின்றவர்களனைவரும் எக்கியத்தினாலே பாபரகிதரானார்கள்
யெக்கியசேஷமான அமிர்தம் புசிப்பவராய் அநாதியான பிரமத்
தையடைவார்கள் இப்படிச்சொன்ன எக்கியங்களில் அனுஷ்டானமொ
ன்றுமில்லாதவனுக்கு இகலோகமேயில்லை - அவனுக்குப் பரலோக
மெங்கே வரப்போகின்றது இப்படி வெகுபிரகாரமான கர்மயோக
யெக்கியங்கள் பிரமத்தினுடைய முகத்திலேவிஸ்தரிக்கப்பட்டதாய்
ஆத்துமசித்தியானதுக்குச்சாதனமாயிருக்கும் அதுவெல்லாம்கர்மயெ
க்கியங்களாக அறி- இப்படியறிந்து கர்மானுஷ்டானம் பண்ணினால்
மோக்ஷத்தையடைவாய் திரவியமுதலான யெக்கியத்தைக் காட்டிலு
ம் ஞானயெக்கியமே யதிகம் சகலமானகர்மானுஷ்டானமும் ஞானபூர்
வமாகவே செய்யப்படுகிறதாகையால் ஞானத்திலேதானே சமாப்
தியாம் அந்தஞானம் தத்துவதெரிசனையுண்டான ஞானிகளுனக்கு உ
பதேசிப்பார்கள் - ஆகையால் அவர்களை நமஸ்காரம் பண்ணுகையி
னாலும் சேவை பண்ணுகிறதினாலும் கேட்டதினாலும் ஞானத்தை-
அறி - அந்தஞானத்தையறிந்து அந்தக்கியானத்திலேகூடுகிறபோ
எந்தக்கியானத்தினாலே சகல பூதங்களையும் உன்னைப் போலே அறிகி
றாயோ அதின்பிறகு சகலமும் என்னிடத்திலே யென்றறிவாய்- இப்
படிக்கொத்தஞானமுண்டானால் எத்தனையுக்கிருஷ்டபாவ கர்மானு
னும் அந்தப்பாவமென்கிறசமுத்திரத்தை ஞானமென்கிறதெப்பத்தி
னாலே கடப்பாய் - பிரகாசமான அக்கினிசமித்துகளை யெப்படிதக்த
ம்பண்ணுமோ அப்படியே ஞானாக்கினிசகலகர்மங்களையும் தக்தம்ப
ண்ணும் - ஞானத்துக்குச்சரியாய்ப்பவித்திரமானவஸ்து இந்தலோ
கத்திலே யில்லை நீயிந்தயோகசித்தியானகாலத்திலே அறிவாய்-சி
ரத்தையுண்டானவனாய்-ஞானதற்பரனாய்இந்திரியநியமமுண்டானவ
ன்ஞானத்தை யடைவான் அவன் பரமமானசாந்தியைசீக்கிரமாகவே
அடைவன் அக்கியானியாய்ப்பத்தியில்லாமல் சம்சயசித்தமுண்டான
வன் நாசத்தை அடைவான்சம்சய ஆத்துமாவுக்கு இகலோகபரலோ
கமுமில்லை சுகமுமில்லை ஞானயோகத்திலே வைக்கப்பட்ட கர்மமு
ண்டானவனாய் ஞானத்திலே சம்சயமெல்லாமில்லாமற் பண்ணி ஆத்
துமகியானியாயிருக்கின்ற வனைக் கர்மங்கள் பந்திக்கமாட்டாது - ஆ
கையினாலே உன்னுடையஇருதயத்திலேயிருக்கிற அக்கியானபூதமெ

ன்கிற சம்சயத்தை ஞானமென்கிற வாளினாலே வெட்டிப்போட்டு யோ
கத்தை ஆசரித்தெழுந்திருவென்று சொல்லியருளினார் - சேட்டமோதி
ருதராஷ்டிரமகாராஜனேயென்று சஞ்சயமுனிவர் சொல்லுகின்றார்;

நான்காவது ஞானகர்மயோகவத்தியாயம் முற்றும்.

ஐந்தாவது.

சந்நியாசயோகவத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனன் கிருஷ்ணதேவனைப்பார்த்து ஓய் - சு
வாமீ - கர்மசன்னியாசரூபமான ஞானயோகம்சொன்னீர்கர்ம யோ
கம்சொன்னீர்இந்தவிரண்டிலேயும் எதுநல்லதோ அதைநிச்சயித்து
ச்சொல்லுமென்றுகேட்கக் கிருஷ்ணசுவாமியும் ஓய் அர்ச்சுனா - ஞா
னயோகமும் கர்மயோகமும் இரண்டும்மோக்ஷகாரணமே இதில்ஞா
னயோகத்திலும் கர்மயோகமேவிசேஷம் எந்தக்கர்மயோகியானவ
ன் ஆத்துமத்தியானத்தினாலே திருப்தியடைந்து துவேஷியாமற்சி
தவுஷ்ண சுகதுக்கங்களுக்கு உடன்படாமலிருந்தால் அவனே நித்திய
சந்நியாசியானயோக நிஷ்டன் அவனேசுகமாகப்பந்த முக்தனாவன்
ஞானயோகமும் கர்மயோகமும் வெவ்வேறென்று அறியாதபேர் க
ள்சொல்லுவார்கள் ஞானயோகமானாலும் கர்மயோகமானாலு மொன்
றைநன்றாயறிந்தாலிரண்டினுடையபலத்தையும் அடைவான் ஞான
யோகநிஷ்டன்எந்தஆத்துமகியானமென்கிறபலத்தையடைவானோஅ
துகர்மயோகத்தினாலேயுமடையப்படுமாகையால்ஞானமும்- கர்மமு
மொன்றாக எவனறிகிறானோ அவனேயறிந்த ஞானி கர்மயோகத்தை
விட்டு ஞானயோகமடைகிறது பிரயாசம்- கர்மயோக நிஷ்டனானமு
னீசுவரனானற்சீக்கிரமாகப்பிர்ம்மத்தை அடைவன்கர்மயோகயுக்தனா
ய் நிர்மலசித்தனாய் இந்திரியக்ஷயமுண்டானவனாய் சகல பூத ஆத்து
மாவையும் தன்னுடையபூத ஆத்துமாவாய அறிகிறவனாய் கர்ம யோ
கம்பண்ணினால் ஆத்தும ஞானத்தைப்படைவானேயல்லாமல் கர்மபல

[illegible] போ[illegible] [illegible]

[illegible]

[illegible] பெரியும் [illegible]

[illegible]

[illegible] இந்திரியங்கள் [illegible]

[illegible] பிரம்பத்தில் [illegible]

[illegible]

[illegible]

[illegible] இந்திரியங்களி[illegible]

[illegible]

[illegible] ஆத்துமமே [illegible]

[illegible] ஆத்துமமே [illegible]

[illegible]

[illegible] இந்திரியங்க[illegible] விவேக [illegible]

[illegible]

[illegible]

[illegible] விருப்பன் - உலகங்களை [illegible]

[illegible]

[illegible] ஆத்துமமே [illegible]

[illegible] ஒருத்தர் [illegible]

[illegible]

[illegible] ஞானத்[illegible] ஞானத்

[illegible]

[illegible] ஆத்துமாவி[illegible]

[illegible] ஞான

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ஆத்துமமா[illegible]

[illegible] இப்படி [illegible]

[illegible]

[illegible] ஆத்தும

[illegible] பிரம்ம ஞானியாய் [illegible]

[illegible]

[illegible] [illegible] இருப்பன்

இப்படி ஆத்தும அனுபவமுண்டானயோகியாகியமான விஷயபரிச
த்திலே ஆசையில்லாமற் பிரம்மயோகயுக்தமானமனமுண்டானவ
ன் அக்ஷயசுகத்தை அடைவான் விஷயஸ்பரிசத்திலே பிறந்தபோக
ங்கள் துக்ககாரணமாய் அஸ்திரமாகவுமிருக்கும் விவேகியானவன் அ
திலே ரமிக்கான் எந்தப்புருஷனானவன் சரீரம்விடாததற்கு முந்தியே
ஆத்தும அனுபவத்திலே காமக்குரோதாதிகளிலே பிறந்த வேகம்
பொறுக்க அறிகிறானோ அவனே யோகி - அவனே சுகியானவன் என்று
ம் எவன் ஆத்துமானுபவத்திலே சுகமுண்டானவனாய் ஆத்துமாராம
னாய் ஆத்துமஜோதியானதேயுண்டானவனாயிருந்தால் அந்த யோகிபிர
ம்மசொரூபமாய் மோக்ஷத்தை அடைவன் தொந்தாதீதராய் ஆத்து
மாவிலே திருப்தியுண்டாயிருப்பவர்களாச் சர்வபூதஹிதவரென்று
ம்ஞானிகளென்றும் ரிஷீசுவரர்களென்றுஞ் சொல்லப்படுவர் - அவர்க
ள் க்ஷீணகர்மராய்ப் பிரம்மபதத்தை அடைவார்கள் காமக்குரோதம்
விட்டு ஆத்துமஞானத்திலே யெத்தனம்பண்ணிமனதைத் தன்வசம்ப
ண்ணிக் கொண்டிருந்தவர்களுக்குப் பிரம்மநிர்வாணம் அடுத்தாப்
போலே யிருக்கும் பாஹ்யமானவிஷயபரிசங்கள் வெளிப்பண்ணியோ
காசனத்திலே இருந்து திருஷ்டிபுருவமத்தியிலே நிறுத்திப் பிரா
ண அபானரூபமான உசுவாச நிசுவாசம் சமம்பண்ணி இந்திரியங்க
ளும்மனதும் புத்தியும் நியமம்பண்ணி இச்சைபயம் குரோதம் விட்
டு மோக்ஷத்திலே நிரந்தரமுமாசக்தியுண்டாயிருக்கிற வனெவனோ
அவன் எப்போதும் முக்தன் யெக்ஞதபசுக்களுடைய போக்தாவா
ய் சகலலோகங்களுக்கும் ஈசுவரனாய் சகலபூதங்களுக்கும் பந்துவான
என்னை அறிந்தவன் சாந்தியடைவன் என்று சொல்லியருளினார்.

ஐந்தாவது சந்நியாசயோகத்தியாயம் - முற்றும்.

ஆறாவது.

அப்பியாசயோகவத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனனைப்பார்த்து ஓ! அர்ச்சுனா! கர்மபல
த்தை யிச்சியாமல் எவன் கர்மம் பண்ணுகிறானோ அவனே யோகி
யோகியுங் கர்மயோகியுமாவன் அவன் கர்மாக்கினமல்லாமல் கிரியாரகித
னுமல்லவனைஞானயோகமென்பார்களோ அதுவே சர்வயோகமென்

றதி சங்கற்பம்விடாதவன் எவனுங்கர்மயோகியல்ல - ஆத்தும ஞான காரணமான கர்மயோகத்திலே யிச்சையுண்டானவனுக்குக் கர்மயோகமேகாரணம் ஆத்மயோகமாரம்பு சித்தியானபிறகு சமமென்றானையும் சமமானவனுக்குகாரணமென்கிறான் - எப்போது இந்திரியவிஷயங்களிலே கர்மபல சங்கற்பமில்லாமற்போகுமோ அப்போது யோகாரூடனென்றுசொல்லப்படும் யோகமானதே ஞானப் விஷயங்களிலே கூடாததி - தன்னாலே ஆத்துமாவையும் நிசப்பண்ணிக் கொள்ளுகிறது விபரீத சித்தத்திலே தன்னுடைய ஆத்துமாவை நாசம்பண்ணிக்கொள்ள வேண்டாமாகையால் தன்மனதைத் தனக்குட்படுத்தி தன்மனதே தனக்குச்சத்துருவானாலுந்தானே தன்மனதைச் செயித்தால் அவனுக்குத்தன்மனதேபந்து எவன் ஆத்துமசித்தியானமில்லாமற்றன்மனதைச் செயிக்கமாட்டானோ அவனுக்குத்தன்மனதே சத்துரு - சீதவுஷ்ணம் சுகதுக்கம் வெகுமானம் அவமானம் வந்தபோது சித்தவிக்ஷேபமுண்டானவனும் சாந்தனாய் பரமாத்மாவுடனே கூடிக்கொண்டு ஞானவிஞ்ஞானதர்பதிருப்தியுண்டானவனும் நிர்விகாரனுஞ்சிதேந்திரியனும் பொன்னும் ஓடும் சரியாய்ப்பார்க்கிறவனு மிருக்கிறவன் யோகயுக்தனென்று சொல்லுவார்கள் சிநேகிதரிடத்திலும் சத்துருவிடத்திலும் உதாசீனனிடத்திலும் துவேஷியிடத்திலும் பந்துவிடத்திலும் புண்ணியவானிடத்திலும் பாவியிடத்திலும் மத்தியஸ்த ரிடத்திலும் இருக்கிற ஆத்துமசமமென்றறிந்து அவரவர் சரீரத்திலே வருகிறசினேகத்துவேஷம் ஒவிபாமலிருக்கிறவனே யோகபுருஷன் யோகாப்பியாசகாலத்திலே யேகாந்த ஸ்தலத்திலிருந்தவனுமேகாக்கியாய் ஆத்துமாவிஷயத்திலே நிறுத்தப் பட்டசித்தமுண்டானவனுமாசையில்லாதவனும் ஸ்திரமனதில் சிக்கமான பதார்த்தத்திலே கூடாதவனே ஆத்துமநிஷ்டன் அப்படிப்பொருந்த ஆத்தும நிஷ்டையிலே யெப்படி இருக்கவேணுமென்றால் சுசியானஸ்தலத்திலே மிகுதியும் உயர்ச்சி யில்லாமல் தாழ்ந்தும் யில்லாமல் தர்ப்பைபரப்பி அதின்மேலே புலித்தோலாகிலும் மிருகத்தோலாகிலும்போட்டு அதன்மேல்வஸ்திரம்போட்டு - அதிலேயே பத்மாசனமாயிருந்துகொண்டு மனதை விஸ்தாரபண்ணவொட்டாமல் ஏகாக்கிர சித்த முண்டானவனும் சித்தமுமிந்திரியமுமடங்கியையும் நியமித்து ஆத்துமசித்திக்காகயோகஞ்சாதிக்கிறது - சரீரமும் சிரமும் கழுத்தும்சமமாய் பண்ணிக்கொண்டு சலனமில்லாமல் மற்ற திக்குகளைப்பாராமல் நாசிகாக்கிரத்திலே திருஷ்டியைவைத்து சாந்தசித்தனும் பயரகிதனும் பிரம்மசாரியாய் விரதமுண்டானவனும் மனதை நியமித்து சித்த மென்னிடத்திலே வைத்து நானே

பரமமான பலமென்றறிந்து யோகத்துடனே கூடினவனும் சகலகா
லமும் மனதினிடத்திலே சஞ்சரிக்கிற நினைவுகளை நிறுத்தினவனு
மாய் யோகியினிடத்திலே பிரவேசிக்கப்பட்ட மோக்ஷமும் பரமமான சா
ந்தியுமுண்டாமவன் - மிகுதியும் அசனம் பண்ணுகிறவனுக்கும் போ
சனத்தை விட்டவனுக்கும் அதிக நித்திரை செய்பவனுக்கும் நித்திரை
யைவிட்டவனுக்கும் யோகங் கூடாது - தனக்குத்தக்க போசனமும்
தனக்குத்தக்க சஞ்சாரமும் காரியங்களின்மேலிருந்தும் பிரயாசைப்ப
டாமல் யுக்தமான நித்திரையும் யுக்தமான சாக்கிரமுமாயிருந்துக் கொ
ண்டு யோகம் சாதிக்கிறவனுக்குத் துக்கம் நாசமாம் எப்போது நியம
மான சித்தத்தை ஆத்துமாவினிடத்திலே நிறுத்தித் திடம் பண்ணுவா
னோ அப்போது சகல இச்சைகளினும் விடுபட்டு யோகி என்று சொல்
லப்படுவன் காற்றில்லாவிடத்திலேயிருக்கிற தீபத்துக்கு எப்படிசல
னமில்லையோ அப்படியே ஆத்துமயோகம் பண்ணுகிற வனுடைய சி
த்தம் சலனமில்லாமல் இருக்கவேணும் அங்ஙனமிருந்தால் யோகசே
வையினாலே நிறுத்தப் பட்டசித்த முண்டானவனாய் அந்தயோகத்தி
னாலே ஆத்துமாவை அறிந்து ஆத்துமானுபவத்திலே சந்தோஷிப்பன்
இந்திரிய ரஹிதமான புத்தியினாலே அறியப்பட்ட கனமான சுகானுப
வமெந்த யோகத்திலே அறியப்படுமோ அந்தயோகத்திலே யிருந்த
புருஷனுக்குத் தத்துவமார்க்கத்திலே சலனமில்லை எந்தயோகத்திலே
அடைந்து அதுக்கு அன்னியமான லாபத்தை அதிகமென்று நினையா
னோ அந்த யோகிக்குக் கனமான துக்கம் வந்தாலும் சலனமில்லை - து
க்கசம்யோகவியோகத்திலே ஒருக்காலும் கூடாது யோகசப்தத்து
க்கர்த்தம் நிச்சயசித்தத்துடனே ப்ரயாசநினைப்புடனே அந்தயோக
ஞ்சாதிக்கத்தக்கது இந்திரியசம்பந்தமான சங்கற்பத்தினாலே பிறக்கி
ற சகல இச்சைகளும்விட்டு இந்திரியங்கள் மனதினாலே திக்குகளுக்கு
ப்போகாமல் நிறுத்தி மெள்ள மெள்ள தயிரியத்தினால் வசம்பண்ணிக்
கொண்ட புத்தியினாலே மனதை ஆத்துமாவினிடத்திலே நிறுத்திப்பி
ன்னை யொன்றும் சிந்தியாமலிருக்கிறது, மனது சஞ்சலசுபாவ
மாகையால் அஸ்திரமான அந்தமனது எந்தெந்த விஷயத்தினாலே நி
ச்சலமாமோ அந்தப்படிக்கு ஆத்துமாவினிடத்திலே வசம்பண்ணிக்
கொள்ளுகிறது- ரசோகுணத்தை அடக்கிச் சாந்தமனதினாலே சுபா
வமான பிரம்மபூதனான யோகி ஆத்துமானுபவமான உத்தமசுகத்தை
அடைவன் இப்படி ஆத்துமானுபவத்தோடேயிருக்கிற யோகி ஆத்து
மானுபவத்தினாலே பூர்வகல்மஷமெல்லாம் போய் பிரம்மானுபவரூ
பமான அத்தியந்தசுகத்தை அடைவன் இப்படித்தொத்தயோகி சக

ல பூதங்களினுமாத்துமத்துவமாகவும் சகல பூதங்களுமாத்துமா வினி
டத்திலே யாகவும் யோகயுக்த ஆத்துமாவாய்ச் சர்வத்திர சமமாகவேபா
ர்ப்பன் சர்வேசுவரனான வென்னைச் சர்வத்திர இருந்தவனாகவும் சக
லமும் என்னிடத்திலே இருந்ததாகவும் எவன்பார்க்கிறானோ அவனு
க்குநான் கெடாதவன் எனக்கு அவன்கெடாதவன் சகல பூதங்களிலே
யுமிருக்கிற என்னை ஒருவனுமத்திடமாக ஆசரித்து எவனாகிலுமிருக்கிறானோ சர்
வதா வர்த்தித்துக்கொண்டிருந்தாலும் அந்த யோகி யென்னிடத்திலே
வர்த்திக்கிறவன் சகலபூதங்களிலேயும் சுகமானாலும் துக்கமானாலுந்த
ன்னைப்போலே சமமாகவென்பார்க்கிறானோ அவன் பரமயோகியெ
ன்றுசொல்ல அர்ச்சுனன் கேட்டு ஓய்! மதுசூதனா - இந்தச் சமஸ்த
ஆத்துமாக்களும் ஞானசொரூபமாகையால் சர்வெத்திர சமதரிசன
மாக இந்தயோகஞ் சொல்லீர் இந்தமனதுசஞ்சல ஸ்வபாவமாகை
யால் நிரமாணநிலைக்கடையமாட்டேன் அந்தமனோபலவத்தமாக இந்த
ஆத்துமாவுக்குமேற ஆசத்தி யுண்டாக்கும் இந்தமனதை நிக்கிரகிக்
கிறதுமெய் இறது காற்றைப் பிடித்துச்சுமைகட்டுகிறதுபோலே கடி
னமாகுமேயென்றுசொல்ல அதற்கு- கிருஷ்ணமூர்த்தியும்.

ஓய்- அர்ச்சுனா- மனதுசஞ்சலமென்றும் நிக்கிரகிக்கக்கூடா
தென்றும் சொன்னது சம்சயமல்ல ஆத்துமாப் பியாசத்தினாலேயும்
வைராக்கியத்தினாலேயுமனதை நிக்கிரகிக்கலாம் இந்தப்படிமனதை
நிக்கிரகிக்கமாட்டாதவனாலே யோகத்தை அடையக்கூடாதென்று எ
ன்மனதிலேயுமுண்டு இதற்குபாடயேதென்றால் ஆத்தும யோகத்தி
னாலேமனதைத் தஞ்வ சப்படவணிக்கொள்ளுகிறயெத்தினமனது நி
க்கிரகிக்கிறதுக்கு வுபாய மென்று சொல்ல அர்ச்சுனன் - கேட்டு-
ஓய்- கிருஷ்ணா - சிரத்தையோடேகூடியிருந்துமனதை நிறுத்தமாட்
டாமல்யோகத்திற் சலனப்பட்டு யோகசித்தியடையாதவனுக்குக் கெ
தியென்ன அவன் மூடனுமல்லாமல் ஞானியுமல்லாமல் - உபயபிரஷ்
டனாய் ஒன்றிலேயுங்கூடாமற்கொஞ்சமேகங்காற்றினாலே நாசமடை
ந்தாப்போலஅவனும்நாசமடைந்துபோவானோ- ஓமகாத்துமாவே எ
ன்னுடைய சமுசயம் சற்றாகிலும் இல்லாமற்பண்ணுகிறதுக்குச்-ச
ர்வசுபனுனவுன்னைத்தவிரப்பின்னையொருத்தருமில்லையே யென்று
சொல்லக் - கிருஷ்ண மூர்த்தியும் ஓய், அர்ச்சுனா, இப்படிக்கொத்த
யோகத்திலே சலனமேவந்தவனுக்கு இந்தலோகத்திலேப்பலபிராப்தியி
ல்லே சுவர்க்கலோகபலத்திலே நாசமுமில்லேகல்யாணரூபமானயோக
ம்பண்ணினவர் ஒருத்தரும் துர்க்கதியடையார்கள் எந்தப்போகங்களி
லே யிச்சைப்பட்டு யோகத்திலே சலனப்படுவானோ அந்தப்போகங்

ளுக்குத்தக்கலோகத்தை அடைந்துவெகுகாலம் அந்தப்போகம் அனுசரித்தயோகப் பிரஷ்டன் பிறகுபவித்திரமான யோகஞ்சாரிக்கிறத்துக்கு அநுகூலமானகுலத்திலே செனிப் பண்பரிபக்குவமான யோகியோகப் பிரஷ்டனுறுல் மகாத்துமாக்களாய்நல்லபுத்தியுள்ளவராய்த்தாமேயுபதேசம்பண்ணுவார் இருமகாகஷ்டம்அந்தயோகிக்குஇந்ததேகத்திலே பூர்வதேகசம்பந்தமானயோகப் புத்தியிலே திடமாய்த்திரும்பவும் யோகசித்தியாகிறவளாக்கும் எத்தினம் பண்ணுவான் பூர்வம் பண்ணின அப்பியாசத்தினுலே வசனுகாதவனுனுலும் முன் யோகமார்க்கத்திலேஸ்திரப்பட்டுப்பக்குவயோகியாய்விசாரபரனுவான்ஆகையால்யோகத்திலேமனதுக்குச்சலனம்வந்தாலும் அந்தசசப்தபிர்ம்மப்பிர்மத்தைஅதிக்கிரமிக்கும் இதற்குத்தாற்பரியமேதென்றுல் தேவமனுஷாதிசந்தங்களாலே சொல்லப்படாதசொருபத்தை அடைவான் பிரயத்தினத்தினுலே யெத்தினம் பண்ணுகிறயோகி அநேகஜன்மங்களிலே தேடினபுண்ணியங்களினுலே பாபங்களெல்லாம் தள்ளிப்போட்டு அதினுலேபரமகதியடைவான் இப்படி ஆத்தும ஞானியான மூடனானவன் தபசுபண்ணுகிற பேரிலும் அதிகம் - தன்னை அறியாதசடக்கியானியிலும் யோகிஅதிகம் கேவலம் கர்மயோகியிலும்ஞான யோகிஅதிகமாகையினுலே நீயும் யோகாப்பியாசம்செய்-சகலமானயோகிகளுமென்னிடத்திலே நினைப்புவைத்துச் சிரத்தையினுலே பஜனைபண்ணுவார்கள் அதுவே யெனக்குச்சம்மதமென்று சொல்லினர் கேட்டீரோதிருதராஷ்டிரமகாராஜாவே என்றுசஞ்சய முனிவர்சொல்லுகிறுர்.

ஆறுவது அப்பியாசயோகவத்தியாயம் - முற்றும்.

ஏழாவது.

பரமாத்மவிஞ்ஞானயோகவத்தியாயம்.

அப்பால் கிருஷ்ணதேவரும்- அர்ச்சுனனைப்பார்த்து- ஓ- அர்ச்சுன, என்னிடத்திலே வைக்கப்பட்டசித்தமுடையவனாய் நிரந்தரமென்னைஅநுசரித்துச்சம்சயமில்லாமல்திடமாகஎந்தப்பாவத்

நிலைமையிலே யிப்போ அதிகிருஷ்ணா அர்ச்சுனனைப்பார்த்துச் சொல்லுகிறதே விஞ்ஞானசகிதமாக வுனக்கு நான் அசேஷமாய்ச் சொல்லுகிறேன் அந்த ஞானத்தை அறிந்தாற் பின்பு அறியவேண்டிய தொன்று மில்லை அநேகமாயிரமனுஷருக்குள்ளே ஒவ்வொருத்தன் ஆத்துமசித்தியாகிறதி ற்றிக்காகப்பிரயத்தனம் பண்ணுவான் அப்படிப்பிரயத்தனத்திலே சித்திய டைந்தவர்களாயிரம் பேருக்குள்ளே ஒவ்வொருத்தன் யதார்த் தமாக என்னை அறிவான் பூமி ஜலம் அக்கினிவாயு ஆகாசம்மனது புத் தி அகங்காரம் என்கிற இந்த எட்டுப்பேதமுண்டான சகலத்துக்கு ம் காரணமான பிரகிருதி என்னுடையதென்றறி இது அபரப்பி ரகிருதி - இதுக்கன்னியமான ஜீவப்பிரகிருதியினாலே யிந்தச் சகல ஜெகத்தும் தரிக்கப்பட்டிருக்குது அது என்சம்பந்தமான பரப்பிரகிரு தியென்றறி இந்தச் சராசரங்களுண்டான அபரப் பிரகிருதியி னாலேயும் ஜடமான ஜீவனென்கிற பரப்பிரகிருதியினாலேயும் பிறந் ததாகையாற் பிரகிருதிக்கும் ஜெகத்துக்கும் நானே காரணம் அன்றியும் இந்தப் பிரகிருதிபுருஷாத்மகமான ஜெகத்து உற்பத்தி நாசங்களுக்கு நானே காரணம் - என்னிலும் சிரேஷ்டமான வஸ்து சற்றுமில்லை யிவ் வ இந்தச் சேதனாசேதனமான சகலப்பிரபஞ்சமும் சூத்திரத்திலே ம ணிகளிருக்கிறாப்போலே என்னுடைய ஆதாரத்திலே யிருக்கிறது அதெப்படியென்றால் - ஜலத்திலே ருசியுண்டான ரசம் நானே - சூரி யன் சந்திரனிலே பிரகாசிக்கிற பிரகாச ரூபம் நானே சகலவேதத்தி லும் பிரணவம் நானே ஆகாசத்திலே சப்தம் நானே மனுஷரிடத்தி லே பௌருஷம் நானே பூமியிலே புண்ணிய கெந்தம் நானே - அ க்கினியிலே தேஜஸ் நானே சகலபூதங்களிலேயும் ஜீவன் நானே தபசு ள்ளவர்களிடத்திலே தபசு நானே - சகல பூதங்களுக்கும் அநாதியான காரணம் நானே புத்திமான்களுக்குள்ளே புத்தி நானே - தேஜசுள்ளவர் களுக்குள்ளே தேஜசு நானே பெலவான்களுக்குள்ளே பெலன் நானே காமமும் இச்சையும் விட்டுத் தன்மத்துக்கு விரோதமில்லாத சகல பூத ங்களிலேயு மிச்சையும் நானே சாத்விகராஜசதாமசபாவங்களே தன் னோடே தானே யுண்டானதென்றறி- அதினிடத்திலே நான் அக ப்படவில்லை அது என்வசமாயிருக்கும் - குணமயமான ராஜசதாம சசாத்விகமென்கிற பாவங்கள் மூன்றினாலேயும் மோகிதமான - இந் தச் சகல ஜெகத்தும் என்னாலேபிறந்திருக்கும் குணங்களுக்கு அப்பு றமாய் அவ்வியயனான என்னை அறியாது - தெய்வமான என்னாலே நிர் மிக்கப்பட்ட முக்குணமயமான மாயை யொருத்தராலுங் கட க்கப்படாது; யாரொருத்தன் என்னைச் சரணமடைந்தானோ அவனி

ந்தாவிகளைக் கடப்பவர்களாய் மூடாத்துமாக்களான
மையினாலே ஞானம் அபகரிக்கப்பட்டு அசுரபாவமுடையவரா
ர்கள் சொல்லப்படிய அர்ச்சனும் ஆத்மசொரூபமறியாதவரா
கின்ற நித்தியமாகிய அர்ச்சுன பேசைப்பட்டவர்களும் சொ
ரூபத்தை அறிந்த ஞானியும் - என்கிற சந்திரதாசன் இந்த ஞானிக
ளெல்லாருக்கும் மேலே ஏற்பட்டவர்களானவர்கள் அவர்களுக்குள்ளே ஞா
னி நித்திய யுக்தனாய் என்னோடே கூடினவனாய் ஏகபக்தியுடையவனாய்
ய் மேலே பக்தியுடையவனாயிருப்பன் ஆகையால் அவனே மேலானவ
ன் அந்த ஞானிக்கு நான் பிரியன் அந்த ஞானியும் எனக்குப் பிரியன் அந்த
ஞானத்தை உபாசனைகளும் மகா அதிகமானவர்கள் ஞானியானவன் என்னை
யேப் பரமகதியாக ஆசிரித்து என்னோடே கூடின சித்தமுடையவ
னாயிருப்பன் அநேக ஜன்மங்களுக்கப்புறம் ஞானவானாய் என்னைச் சேர்ந்து
விடுவன் வாசுதேவனே சர்வமுமென்று நிச்சயிப்பன் ஆகையால் அந்த
மகாத்துமாவானவன் கிடைக்கிறது துர்லபம் இந்த ஞானிக்கு அன்னியமான
ர்கள் தங்கள் பிரகிருதியாலே கட்டுப்பட்டு அந்தந்த இ
ச்சைகளினாலே ஞானம் மறைக்கப்பட்டவராய் அந்தந்தத் தேவதைகளை
அடைந்து பஜிப்பார்கள் எவனெவன் எந்தெந்தத் தேவதை
ரூபமான என்னுடைய சரீரத்தைப் பஜிப்பானோ அவனவனுக்கு
ந்த ரூபமான அந்தந்தத் தேவதைகள் மேலே பக்தியைச் செய்விக்கிறேன்
பண்ணுகிறேன் இப்படிக்கொத்த பக்தியுடனே கூடினவனாய் அந்தத் தே
வதையின் ஆராதனை பண்ணுவான் அதின்மேலே அந்தத் தேவதைகளுக்
குள்ளே இருந்து என்னாலே விதிக்கப்பட்ட இச்சைகளையடைவான்
அற்ப புத்தியுடையவர்களுக்கு அந்தப் பலம் நாசமடைகிறதாலும் அ
ந்தந்தத் தேவதைகளைச் சேவிக்கிறவர்கள் அந்தந்தத் தேவதைகளையடை
வார்கள் என்னுடைய பக்தனே என்னையடைவான் அவ்வியக்தனாயி
ருக்கிற என்னைப் புத்தியில்லாதவர்கள் அவ்வியக்தனே கூடின வியக்
த்தரூபமாக அறிவார்கள் அவர்கள் அவ்வியயமாய் அனுத்தமமாய்ப் பரம
மான என்னுடைய பாவத்தை அறியமாட்டார்கள் நான் யோகமாயையினா
லேகாணப்படாமல் சகலருக்கும் பிரகாசிக்கப்படுகிறவனல்ல இந்த மூட
ஜனங்கள் நான் ஜென்மரகிதன் நாசரகிதனென்று என் சொரூபத்தை அறி
கிறார்கள் நான் போனகாரியத்தையும் அறிவேன் இப்போது நடக்கி
றகாரியத்தையும் மேலே வருகிற காரியத்தையும் அறிவேன் இந்தப்பூத
பவிஷ்யத்துமானதிலே ஒருத்தரும் என்னை அறியார்கள் இ
ச்சைத்வேஷத்தினாலே வருகிற த்வந்தமோகத்தினாலே சகலப்பிரா
ணிகளும் பிறந்தபோதே அஞ்ஞானத்தை அடைவார்கள் எப்போ

7019

னங்களுக்காகவென்ன புண்ணியகர்மத்தினாலே பாபநாசமாம் அவர்கள் ராகத்வேஷமுதலானதொந்தமோகத்தைவிட்டுத் திடபக்தியுள்ளவர்களாய் என்னைப்பஜனைபண்ணுகிறார்கள் ஜராமரணமில்லாத ஆத்மசொரூபத்தியானத்துக்காக என்னை ஆசிரித்து முயற்சிசெய்பவர்களாகிய அவர்கள் பிரம்மசொரூபத்தை அறிவார்கள் சகலகர்மங்களையும் அறிவார்கள் என்னை அதிபூதத்துடனே கூடினவனாகவும் அதிதெய்வத்துடனே கூடினவனாகவும் அதியக்கியத்துடனே கூடினவனாகவும் அறிவார்களோ அவர்கள் சரீராந்தகாலத்திலே நல்லபுத்தியுள்ளவர்களாயென்னையறிவார்களென்றுசொல்லியருளினார்.

ஏழாவது பரமாத்மவிஞ்ஞானயோகவத்தியாயம் - முற்றும்.

எட்டாவது

அக்ஷரப்பிரம்மயோகவத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனன்! ஸ்ரீகிருஷ்ணதேவரைப்பார்த்து! ஓ! புருஷோத்தமா! பிரம்மமாவதென்ன - அத்தியாத்மகமாவதென்ன கர்மமாவதென்ன - அதிபூதமாவதென்ன அதிதெய்வமாவதென்ன - இந்தத்தேகத்திலே அதியக்கியமாவதென்ன - சரீராந்தத்திலே நியமமானமனது உண்டானவராலெப்படி அறிவார்களென்று கேட்க அதற்குக்கிருஷ்ணசுவாமியும்! ஓ! அர்ச்சுனா! பரமமான அக்ஷரப்பிரம்மமென்றுசொல்லப்படும் ஆத்துமாவின் சுபாவவாசனைப்பிரகாசத்துக்கு - அத்தியாத்மகமென்றுசொல்லப்படும் - பூதங்களுடைய பாவங்களுக்கும் சன்மங்களுக்கும் காரணமானசிருஷ்டி கர்மமென்றுசொல்லப்படும் சத்தபரிசாதிகளுக்காசிரயமான பஞ்சபூதசொரூபம் அதிபூதமென்றுசொல்லப்படும் அதிதெய்வமானபுருஷன் நான் சகலயக்ஞங்களிலுமேயும் நான் அந்தந்தத்தேவதைகளுக்குள்ளேயிருந்து பூசிக்கப்படுவேனாகையால் இந்ததேகத்திலே நானே அதியக்கியம் அந்தியகாலத்திலே யென்னையேதியானித்துக்கொண்டு எவன்சரீரம்விடு

ருகிறு அவனென்னுடையபாதத்தை அடைவான் [illegible]
[illegible]
[illegible] ருகிறு அந்தப்படிபாவிக்கப்பட்ட [illegible]
[illegible] சகலகாலத்திலேயும் என்னை நினைக்கிறவனாகி [illegible]
யுத்தியப்பண்ணு - என்விடத்திலேவைக்கப்பட்ட மனதாயும் புத்தியுமு
ள்ளவனாகுறுவ என்னையடைவாய் சம்சயமில்லை [illegible] அப்பியா
சயோகத்திலே மனதை அன்னியமானால் [illegible]
னித்துகொண்டு ஓ! அர்ச்சுநா! பரமமாய் திவ்வியபுருஷனை சென்
னேயடைவாய் சர்வக்ஞருய் புராதனருய் விசுவத்தையெல்லாம் சிருஷ்
டிக்கிறவருய் அணுவானதைகாட்டிலுஞ்சூட்சுமருய் [illegible]
த்துச் சகலமும் சிருஷ்டிக்கிறவருய் சிந்திக்கப்படாதவருய் [illegible]
சூரியப்பிரகாசருய் இருட்டையண்டாமல் அப்பிராகிருதமான திவ்விய ரூ
பமானவென்னை [illegible] சலனமில்லா
த - மனதாகின்றவனாய் அந்தியகாலத்திலே யோகபலத்தினாலே பு
ருவமத்தியத்திலே பிராணவாயுவை நிறுத்தி அவிடத்திலே பரமபுருஷ
னைத் தியானம்பண்ணினுல் [illegible] அந்தப்பரமபுருஷனைக்கூடுவான் [illegible]
அக்ஷரசொரூபத்தை தெரிந்த [illegible] சொல்லுவார்கள் [illegible]
வாதபநிராவிதசொரூபத்தை அடைவார்கள் [illegible]
தைநிச்சயித்துப் பிரம்மசரியம் அநுசரிப்பார்கள் அந்தப்பத [illegible]
யபதமுனக்குச்சங்கிரகமாகச்சொல்லுகிறேன் சகலமான இந்திரி
யத்துவாரங்களும் நியமித்து மனதை இருதயத்திலே நிறுத்திப்பிராண
வாயுவைப் பிரம்மரந்திரத்திலே வைத்துயோகதாரணையிலிருந்து ஓம்
என்கிற ஏகாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு அந்தமந்திரார்த்தமான எ
ன்னைத்தியானித்துக்கொண்டு தேகம்விட்டிருக்கிறவன் பரமமான
கெதியடைவான் நிரந்தரமும் அனன்னியமனதுள்ளவனாய் எவ
னெவனென்னைத்தியானம்பண்ணுகிறுனே அவனுக்கு நான்
சுலபமானவன் என்னை அடைந்தபேர்கள் துக்கத்துக்கிருப்பிடமா
ய் அநித்தியமானஜென்மத்தை அடையார்கள் ஆகையால்மகாத்துமாக்கள்
பரமசித்தியடைவார்கள் பிரம்மலோகமுதலானசகலலோகங்களும் அ
ஸ்திரமானதால் அந்தலோகத்தை அடைந்தபேருக்குத் திரும்பிவர
வேண்டியிருக்கும் என்னை அடைந்தால் நாசமில்லாததால் திரு
ம்பிவாரார்கள் பிரம்மாதிலோகங்களுள்ளபடி அநித்தியம் அதெப்ப
டியென்றுல் ஆயிரஞ்சதுர்யுகமானுல் பிரம்மதேவனுக்கொருபகலெ
ன்றுசொல்லுவார்கள் ராத்திரியுமப்படியே ஆயிரயுகமாகும் ஒருநா

ன் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள் அவ்வியக்தமான பிர்ம்ம அரீரத்திலேயே பகலிலே சகல பூதங்களும் உதயமாம் ராத்திரியிலே சகல பூதங்களும் அடங்கும் கர்மவசமான அந்தப் பூதசமூகம் ஏய்! அர்ச்சுனா! பகலாகும் பிறந்து ராத்திரியானவுடங்குமாகையால் இந்தப்படி காலஞ்செரியானதற் பிர்ம்மாதி லோகங்களு நாசமடையும் அவ்வியக்தத்துக்கு அன்னியமான வியக்தமென்று சொல்லப்படும் - உத்கிருஷ்டபரமாய்ச் சனாதனமான அவ்வியக்தம் சகல பூதங்களும் நாசமடைகிற போதும் அவ்வியக்தத்துக்கு நாசமில்லை - அதை அவ்வியக்தமென்றும் அக்ஷரமென்றும் சொல்லுவார்கள் அதுவே பரம கெதியென்பார்கள் எந்தச்சொரூபத்தை அடைந்து திரும்பிவாரார்களோ அது என்னுடைய பிர்ம்மயானஸ்தானம் எந்தப்பரம புருஷனிடத்திலே சகல பூதங்களுமிருக்கின்றது எவனாலேசகலமும் வியாபிக்கப்படும் அந்தப்பரம்புருஷன் அனன்னியபத்தியினாலே கூடத்தக்கவன் எந்தக்காலத்திலேபோனயோகீசுவரர்கள் திரும்பி வாரார்கள் எந்தக்காலத்திலேபோனயோகீசுவரர்கள் திரும்பிவருகிறார்கள் அந்தக்காலம் உனக்குச்சொல்லுகிறேன்கேள் ஏய்! அர்ச்சுனா! அக்கினியென்கிற தேஜசும்பகலும் சுக்கிலபக்ஷமும் உத்தராயணத்திலே ஆறுமாசமும் இதுவெல்லாம் அதிதேவதையாகவுண்டான மார்க்கத்திலே போனயோகி பிர்ம்மத்தை அடைவான் புகையும் ராத்திரியும் அபரபக்ஷமும் தெக்ஷிணாயனத்திலே ஆறுமாசமும் சந்திரதேசுமிது வெல்லாம் அதிதேவதையாகவுண்டான மார்க்கத்திலே போனயோகி திரும்பிவருவான் சுக்கிலபக்ஷமும் கிருஷ்ணபக்ஷமும் மென்கிற இரண்டுமார்க்கமும் சகத்துக்குச் சத்தியமாயிருக்கிறது இதில் தேவமார்க்கத்திலேபோனவன் திரும்பிவாரான் தூமமார்க்கத்திலேபோனவன் திரும்பி வருவான் இந்தமார்க்கமிரண்டுமறிந்து நித்தியமும் தேவமார்க்கத்திலேநிலைதியுண்டானயோகிக்கும் மாசமில்லையாகையால் நீயும் சகல காலமும் யோகயுக்தனாகவே யிரு - வேதங்களிலேயும் எக்கியங்களிலேயும் தபசுகளிலேயும் தானங்களிலேயும் எந்தப்புண்ணியபலம் சொல்லப்படுமோ அந்தப்பலத்துக்கெல்லாம் அதிகமானபலனுமிப்போது சொன்னவனும் இதை அறிந்தயோகி பரமபதத்தை அடைவான் என்று கிருஷ்ணனுஞ்சொல்லுகிறார்.

எட்டாவது அக்ஷரப்பிர்ம்மயோகவத்தியாய - முற்றும்.

ஒன்பதாவது.

ராஜவித்திய ராஜகுய்ய யோக வத்தியாயம்.

ஓய்! அர்ச்சுனா! மிகுதியும் ரகசியமாய் விஞ்ஞான சகிதமான ஞானத்தை அசூயையில்லாதவுன்னிமித்தியம் சொல்லுகிறேன் அந்த ஞானமறிந்து அஞ்ஞானத்திலே இருந்து விடுபடுவாய் வித்தைகளெல்லாம் ராசாவானதாய் பவித்திரமானதாய் நல்லகதிக்கொடுக்கிறதாயுத்தமமானதாய்ப்பிரத்தியக்ஷமாக என்னை அறியத்தக்கதாய் தர்மசகிதமானதாய் அவ்வியயமானதாய் இந்தத்தர்மத்துக் குள்ளாயிருந்தும் அவிசுவாசமுண்டானபுருஷர்தன்னை அடையாமல் மிருத்தியுரூபமான சம்சாரமார்க்கத்திலே மிகுதியும்திரிவார்கள் இந்தச் சகல செகத்தும் காணப்படாத்சொரூபமாய் அந்தரியாமியானஎன்னாலே விஸ்தரிக்கப்பட்டது சகலபூதங்களுமென்னுடைமையாயிருக்கும் நான் அந்தப்பூதங்களின் ஆதீனமானவனல்ல-சகலபூதங்களும் என்னிடத்திலேயிருக்கும் என்னுடைய அயிசுவரியயோகத்தைப்பார் பூதங்களை நான் தரித்துக் கொண்டேயிருப் பேன் தரித்திருந்தும் அதினுடைய ரூபாகாரத்தை அடைந்தவனல்ல என்னுடையசங்கற்பமேபூதங்களைப் பிறப்பிக்கவும் ரக்ஷிக்கவும் கர்த்தனானது அதெப்படியென்றால் ஆகாசத்திலேயெல்லாம் நிறைந்துக்கொண்டு கனமானவாயுநித்தியமுமெப்படி தரிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே சகலபூதங்களுமென்னாலே தரிக்கப்பட்டதென்றறி - ஸ்தாவரசங்காத்மகமான சகல பூதங்களும் கற்பாந்தரத்திலே என்னுடைய பிரகிருதியிலே அடங்குங்கற்பாதியிலே அதுவிருந்தே பிறப்பிப்பேன் பிரகிருதியை நான் கைப்பிடித்து பிரகிருதிவசத்தினாலே சகல பூதகர்மங்களும் திரும்பிச்சிருஷ்டிப்பேன் அந்தந்தக் கர்மங்களிலே ஆசத்தியில்லாமல் நல்லது பொல்லாது இல்லாமலிருக்கிறவென்னை அந்தச்சிருஷ்டியாதி கர்மங்கள்பந்தப்படுத்தமாட்டாது என்னுடையபார்வையினாலே பிரகிருதியானது சராசரமான ஜகத்தைப்பிறப் பித்துக் கொண்டிருக்கும் இந்தவதுவினாலே.

ஓய்!அர்ச்சுனா! சகத்துப்பிரவர்த்திக்கும்-மூடரானபேர்சகலபூதங்களுக்கும்சுவாமியானவென்னுடைய பரமபாவம் அறியாமல் மனிததேகமெடுத்தவனென்று அவமானமாகவெண்ணுவார்கள்ராக்ஷ

ரூபமாகவும் அரூபமாகவும் மோக்ஷத்தைப் பண்ணுகிற பிரதிஷ்டி
யைப் பண்ணித் தாம்போலவே அந்தப் பட்டாபிஷேகம் பண்ணுவ
டைவார்கள் [illegible] பண்ணுகிறவர்கள் சிருஷ்டிக்க புண்ட
ரீகாக்ஷனாகிய மகாத்துமாக்களையே பார்த்தீர் புண்ணிய [illegible]
சேர்ந்தோர்களை நடத்தி தெய்வம்பிரதிஷ்டை [illegible]
போனதில்லாமல் பிரதிஷ்டையுமாகித் தேவதைகளை [illegible]
பண்ணுவார்கள் எப்போதும் தேவதைக்கு [illegible] பண்ணுவதற்கு
[illegible] க்கிரகங்களை அபிஷேகம் பண்ணி [illegible]
யாக பண்ணுவார்கள் பின்னையும் சிறிது மகத்துவமான [illegible]
[illegible] புருஷனைக் கண்ட [illegible] இருக்கிறவர்கள்
[illegible] பிரகாசமாக [illegible] விசுவாசமாயிருக்கிற
வன்னே [illegible] உபாசனை பண்ணுவார்கள் [illegible]
[illegible] ங்களுக்குத் தானே மகா வெக்கியங்களும் தானே [illegible]
ளும் தானே அக்கினியும் தானே [illegible] தானே [illegible]
[illegible] தகப்பனும் பாட்டனும் பாட்டியும் தானே பவித்திரமு
ம் பிரணவமும் [illegible] தானே இருக்குவேதம் யசுர்வேதம் சாமவேதமு
ம் தானே சகலத்துக்கும் காரணமும் தானே [illegible] பத்திகளு
க்கு காரணமும் தானே [illegible] தானே [illegible] கொடா
காரணமும் தானே [illegible] தானே [illegible]
[illegible] பண்ணுகிறதும் தானே [illegible]
[illegible] இப்படிச் சகலமும் தானேயென்று [illegible]
[illegible] மிகவும் [illegible] யிருக்கிறவர்கள் [illegible]
[illegible] பாவங்களெல்லாம் கழு
[illegible] சொர்க்கலோகத்தில் [illegible] அந்தச் சொர்க்கத்திலே அடை
[illegible] அனுபவிப் பார்கள் இவர்களுக்கு [illegible]
[illegible] சொர்க்கபோகமனுபவித்து அந்தப்புண்ணியம் தீர்ந்தபோ
து பூலோகம் பிறப்பார்கள் இந்தப்பிரகாரமாகத் தர்மங்களைப்
பண்ணிப் பலத்தைத் சொர்க்கத்துக்கும் பூலோகத்துக்கும் போக
[illegible] இருப்பார்கள் எந்தச் சனங்களாகிலும் அன்னிய சிந்
தையில்லாமல் என்னையுபாசிப்பார்களானால் அவர்கள் நித்தியமுமென்
னுடனே கூடியிருப்பார்கள் அவர்களுடைய யோகக்ஷே
மம் தானே [illegible] எவர்களாகிலும் என்னை அறியா
மல் அன்னியதேவதைகளைச் சிரத்தையுடனே பூசை
பண்ணுகிறவர்கள் [illegible] பிரகாரமாக என்னைப் பண்ணே
பண்ணினவர்களாக [illegible] சகல வெக்கியங்களுக்கும் போக்தா

ஸம்பிரபுவும் நானேயாயிருந்தும் என்னையறியாமல் தேவதாந்தரபு
த்தியுண்டானபேர் அற்பமேலாகங்களை அடைந்து கொஞ்சப்பட்டுப்போ
வார்கள் சர்வாத்துமகம் நானேயென்றறியாமல் தேவதைகளை
ப்பூசித்தபேர் பிதிர்த்தேவதைகளை அடைவார்கள் பூதங்களைப் பூசித்
தபேர் பூதங்களை அடைவார்கள் எல்லாரிடத்திலேயும் அந்தரியாமி
சொரூபம் நானென்றறிந்து அவர்களைப்பூசித்தாலும் என்னைத்தானே
அடைவார்கள் எவனாகிலும் பக்தியினாலே பரிசுத்த சித்தனாய் - இலை-
பூ - பழம் - ஜலம் - இது முதலானதுகளை என்னிடத்திலே சமர்ப்
பித்தால் அந்தப்பூசையை நானேகிரகிப்பேன் - எந்தக்கர்மம்பண்ணுகி
றாயோ என்னபோசனம்பண்ணுகிறாயோ - என்னஹோமம்பண்ணுகிறா
யோ - என்னதானம்கொடுக்கிறாயோ என்னதபசுபண்ணுகிறாயோ.

ஓ! அர்ச்சுனா! அதெல்லாம் எனக்குச்சமர்ப்பணையாகப்
பண்ணு - இப்படியானபோகத்துடனே கூடி என்னைச்சரணமடை
ந்தால் சுபாசுபசொரூபமானகர்மபந்தங்களிலே விடுபட்டு என்னை அ
டைவாய், நான் சகலபூதங்களுக்கும்சமன் எனக்குத்துவேஷியுமில்லை
பிரியனுமில்லை எவன் பக்தியினாலே என்னைப் பஜனைபண்ணுகிறா
னோ அவன் எந்தச்சாதியானாலும் என்னிடத்திலே அவனுக்குப்பக்தியு
ண்டானால் அவனிடத்திலே நானும்பக்தியுண்டாயிருப்பேன் மிகுதி
யும் துராசாரமுண்டானவனானாலும் அனன்னியமாக என்னைப்பஜனைப
ண்ணுமல் இப்போது சொன்னபடிக்குப்பண்ணினால் அவனைசாது
வெகுமானஞ் செய்யத்தக்கவனும் அறிவுண்டானவனும் அவனை நல்
லக்கிரமஸ்தனும் அவனை இந்தப்படியென்னை அறிந்து பஜனை பண்
ணினவன் சீக்கிரமாகத்தர்மாத்துமாவாய் நல்லசாந்தி அடைவான். இத்
தைப்பிரதிக்கினைபண்ணு என்னுடைய பக்தன்கெட்டுப்போகான் எ
ன்னைமிகுதியும் ஆசரித்தால் பாபயோனியிலே பிறந்தவர்களும்ஸ்திரீ
கள் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் ஆனாலும் பரமகெதியை அடை
வார்கள் புண்ணியயோனியிலே பிறந்தபிராமணோத்தமாள் ராசரிஷி
களானால் அவர்களுக்குக் கெதியுண்டாகிறத்துக்குச் சொல்லவே தே
வையில்லை ஆகையால் அநித்திய மாச்ச சுகமில்லாத இந்த லோகத்தி
லே அடைந்த நீயும்ராசரிஷியாயென்னைப்பஜனைபண்ணு - என்னிட
த்திலே மனதுண்டானவனாய் எனக்குப்பக்தனாய் என்னைப்பூசைபண்
ணி எனக்கு நமஸ்காரம் பண்ணி நானே பரமகெதி யென்று அறிந்
து இந்தப் பிரகாரமாகமனதை என்னிடத்திலே வைத்திருந்தாயானா

லெயடைவாயென்று சொல்லினுர் - கேட்டாயோ திருதராஷ்டிர
மகாராஜாவேயென்று சஞ்சயமுனிவர்சொல்லுகிருர்.

ஒன்பதாவது

ராஜவித்தியா ராஜகுஹ்ய யோகவத்தியாயம் முற்றும்.

பத்தாவது

விபூதிவிஸ்தார யோகவத்தியாயம்.

அப்பால் கிருஷ்ணபகவான் ! ஓ! அர்ச்சுனா ! என்னுடை
ய பிரபாவத்தைக் கேட்டுப் பிரியப்பட்டிருக்கிற உனக்குப்பக்தி பிறப்பிக்க
இதுவுண்டானவன்றும் பரமமானவாக்கியத்தைச் சொல்லுகிறேன்கே
ள் தேவர்களும் மகாரிஷிகளும் சகலமான பேரும் என்னுடையபிர
பாவத்தை அறியார்கள் அவர்களுக்குநானேயாதியானவன் எவனுகிலு
மென்னைச்சென்மாதியென்றும் ஆதியென்றும் சகல லோகங்களுக்கு
ம் ஈசுவரனென்றும் அறிந்தால் அவன் சகல பாவங்களிலேயும்விடுப
டுவனென்று சொல்லித் தன்னுடைய விபூதி சொல்லுகிருர் எப்படி
யென்றால் ஓ; அர்ச்சுனா; புத்தியும் ஞானமும் அல்லயாமலிருக்கிற
தும் பொறுமையும் சத்தியவாக்கியமும் இந்திரிய நிக்கிரகமும் சு
கதுக்கம் வந்தபோது சந்தோஷமும்பிலேசமுமில்லாமலிருக்கிறதுமி
ம்சையில்லாததுவும் சமபுத்தியும் சந்தோஷமும் தபசும் தானமும்
கீர்த்தியும் அபகீர்த்தியும் இது முதலானபாவங்கள் சகலபிராணிகளு
க்கும் என்னாலே பிறக்கும் மகாரிஷிகளேழுபேரும் - சனகாதிகள்
நாலுபேரும் மநுக்களும் இந்தச்சிருஷ்டிகர்த்தியாமாயெனக்குப்ப
க்தர்களாய் என்னுடையமானசத்திலே பிறந்தார்கள் அவர்களாலே இ
ந்தச் சகல மானசனங் களும் பிறந்தார்கள் என்னுடைய அயிசுவரிய
யோகத்தை யெதார்த்தமாக எவனறிகிறானே அவன்சலனமில்லாதப
க்திபோகத்துடனே கூடினவன் இதற்குச்சந்தேகமில்லை - நானேசகல
த்துக்குங்காரணம் என்னாலே இச்சகத்திலே வர்த்திக்கின்றது இப்ப

டாயிருக்கப்பட்ட விஷயங்கள் அவர்களெல்லையறிந்தவர்கள் என்னிடத்
திலே சித்தமுள்ளவர்களாய் என்னிடத்திலே பிராணனுள்ளவர்க
ளாய்த்தங்களுக்குள்ளே தாங்கள் என்னுடைய பிரசங்கமே பண்ணிக்
கொண்டிருப்பார் சொல்லுகிற விஷயங்கள் நித்தியமும் இதினாலே சந்தோ
ஷித்துக் கொண்டு திருப்தி அடைவார்கள் - இந்தப்படிக்கே நிரந்த
ரம் என்னுடைய யோகமிச்சித்துக்கொண்டு பிரீதிபூர்வகமாக என்னை
ப்பஜனைபண்ணுகிறவர்களுக்கு நான்சந்தோஷமாய் அந்தயோகத்தை
க்கொடுப்பேன் அதினாலே யென்னையடைவார்கள் அவர்களுக்குத்தய
வுபண்ணுகிறதுக்காக நானேயான தீபத்தினாலே அஞ்ஞான மென்கி
ற இருட்டைக் கெடுத்துப்போடுவேனென்று சொல்ல அர்ச்சுனன்!
கிருஷ்ணதேவரைப்பார்த்து! ஓய்! சுவாமி! பிரம்மமும் பரந்தாமமு
ம் பரமபவித்திரமும் எப்பேர்ப்பட்டதுக்கும் நிசமானவனும் திவ்வியபுரு
ஷனுமாதிதேவனும் சன்மரகிதனும் விபுவும் நீயேயென்று ரிஷிகளு
ம் தேவரிஷியான நாரதனும் அசிதன்தேவலன்வியாசர் முதலானபே
ர்களும் சொல்லுவார்கள் அந்தப்படி நீயும்சொல்லுகிறாய் நீசொன்
ன இதுவெல்லாம் சத்தியமேயாம் சந்தேகமில்லை ஆகையா
ய் உன்னுடைய அயிசுவரியம் அற்பஞ்ஞானிகளான தேவதைகளும்
ராக்ஷதருமறியார்கள்- சகல பூதங்களுக்கு முற்பத்திஸ்தானமாய் சம
ஸ்தபூதங்களும் நியமித்து தேவதைகளுக்கும் தெய்வமாய் சகலசகத்
துக்கு மீசுவரனுமாய் புருஷோத்தமா உன்னையுன்னுடைய ஆத்துமாவி
னாலே நீயேயறிவாய் இப்படிக்கொத்த அயிசுவரியத்தினாலே யிந்த
லோகமெல்லாம் வியாபித்திருக்கிற திவ்வியமான - இந்த அயிசுவரிய
ஞ்சகலமும் சொல்லுகிறதுக்கு நீயே சமர்த்தன் பக்தியோக நிஷ்ட
னான நானெப்போதும் உன்னைச்சிந்தித்துக் கொண்டிருக்கிறவனாய்
எந்தெந்தப்பாவத்தினாலே யுன்னைச்சிந்தை பண்ணலாம் ஓய்! ஜநார்
த்தனா உன்னுடையயோகஅயிசுவரியம் சகலமும் விஸ்தாரமாகச்சொ
ல்லும் அமிர்தசொரூபமான வுன்னுடைய வாக்கியங்கள் கேட்டுத்தி
ருப்தி அடைவேனென்று சொல்லஅதற்குக்கிருஷ்ணதேவரும்:

ஓய்! அர்ச்சுனா! திவ்வியமான அயிசுவரியத்துக்குள்ளே பி
ரதானமானத்தை உனக்குச்சொல்லுகிறேன் என்னுடைய அயிசுவரிய
விஸ்தாரத்துக்கு அந்தமில்லை சகல பூதங்களுடைய இருதயத்திலே
யுமிருக்கிறவன் நானே பூதங்களுடைய ஆதிமத்தியாந்தமும் நானே
ஆதித்தருக்குள்ளே விஷ்ணுவென்கிற ஆதித்தனும் சோதிகளுக்கு
ள்ளே சூரியனுமே வாயுவுக்குள்ளே மரீசியென்கிறவாயுவு நானே நக்ஷ
த்திரங்களுக்குள்ளே சந்திரனும் நானே - வேதங்களுக்குள்ளேசா

வேதம் நானே தேவதைகளுக்குள்ளே தேவேந்திரனுமே இந்திரியங்க
ளுக்குள்ளே மனசு நான் சமஸ்த பூதங்களுக் குள்ளேயும் ஞானசத்தி
நான் ருத்திரர்களுக்குள்ளே சங்கரனுமே யக்ஷர்களுக்குள்ளே குபேரனு
மே வாக்குக்குள்ளே ஏகாக்ஷரப்பிரணவம் நான் யக்கியங்களுக்குள்ளே
செபயக்கியம் நான் தாபரங்களுக்குள்ளே யிமயத்தம் நான் விருக்ஷ
ங்களுக்குள்ளே அசுவத்தம் நான் தேவரிஷிகளுக்குள்ளே நாரதனு
ம் கந்தர்வர்களுக்குள்ளே சித்திரரதன் நான் சித்தர்களுக்குள்ளே கபிலமு
னி நான் குதிரைகளுக்குள்ளே அமிர்தத்துடன் பிறந்த வுச்சைசிரவ
மென்கிற அசுவம் நானென்றறி - ஆனைகளுக்குள்ளே அயிராவதம்
நான் மனுஷியர்களுக்குள்ளே ராசா நான் ஆயுதங்களுக்குள்ளே வச்சி
ராயுதம் நான் பசுக்களுக்குள்ளே காமதேனு நான் செனிக்கிறவர்களுக்
குள்ளே மன்மதனும் சர்ப்பங்களுக்குள்ளே வாசுகி நான் வெகுசிரசு
ண்டானபாம்புகளுக்குள்ளே அனந்தனும் செலவாசிகளுக்குள்ளே வரு
ணனும் பிதிர்களுக்குள்ளே அரியமன் நான் தெண்டிக்கிற பேருக்கு
ள்ளே யெமன் நான் தயித்தியருக்குள்ளே பிரகலாதன் நான் எண்ணி
க்கைகளுக்குள்ளே காலம் நான் ஆயுதந்தரிக்கிற பேருக்குள்ளே ரகுராம
னும் மச்சங்களுக்குள்ளே மகரம் நான் நதிகளுக்குள்ளே கெங்கை
நான் மிருகங்களுக்குள்ளே சிங்கம் நான் பட்சிகளுக்குள்ளே கெருட
னும் நடக்கிறதுக்குள்ளே வாயுநான் சிருட்டிக்கப் பட்டதுக்கு
ள்ளே ஆதிமத்தியாந்தகாரணம் நான் வித்தைகளுக்குள்ளே அத்தியா
த்துமவித்தை நான் வாதிக்கிற பேருக்குள்ளே தத்துவநிர்ணயம் பண்
ணுகிறவன் நான் அக்ஷரங்களுக்குள்ளே அகாரம் நான் சமாசங்களுக்
குள்ளே துவந்துவசமாசம் நான் அக்ஷயமானகாலம் நான் விசுவமுகமா
னபிரமதேவனும் சகலபிராணிகளையும் அழிக்கிற மிருத்தியுநான் பி
றப்பிக்கிற பிராணிகளுக்குள்ளே மறப்பு நான் ஸ்திரீகளுக் குள்ளேகீ
ர்த்தி வாக்குடனான ஸ்திரீ நான் அறிவும் புத்தியும் தயிரியமும் பொ
றுமையும் நான் சாமவேதத்துக்குள்ளே பிரகதாரண்ணியசாமம் நா
ன் சந்தசுக்குள்ளே காயத்திரி நான் மாதங்களுக்குள்ளே மார்கழிமா
சம் நான் ருதுவுக்குள்ளே வசந்தருது நான் ஒருபதார்த்தத்தையிச்
சித்துச் சண்டைக்கு நிற்கிற வாளுக்குள்ளே அந்தச்சூது நான் தேய
சு நான் ஜயமானவிபசாயம் நான் பெலவான் களுக்குள்ளே பெலம்
நான் ரிஷ்ணிகளுக்குள்ளே வாசுதேவனும் - பாண்டவர்களுக்குள்ளே அ
ர்ச்சுனனும்! முனிசுவரருக்குள்ளே வியாசன்நான் கவிகளுக்குள்ளே,
சுக்கிரனும் தண்டிக்கிற துக்குள்ளே தண்டனை நான்செயிப்புக்குள்
ளே நெறிவுபாயம் நான் நீதி நான் ரகசியங்களுக்குள்ளே மவுனம்நா

ன் ஆத்மஞானரூபஸ்டானவரிலே ஞானம் நான் சகலபூதங்களுக்கும் பீஜகாரணம் நான் சராசரமான பூதசாலமெல்லாவிட்டிருக்கிறது ஒன்றுமில்லை மயன்னுடைய திவ்ய விபூதிக்கு மட்டில்லை அதின் விஸ்தாரத்திலே கொஞ்சமாகச் சிறிது என்னாலே சொல்லப்பட்டது உனக்கு எதாகிலும் ஒரு ஐசுவரியயுக்தமானகாந்தியுண்டானால் அது என்னுடைய தேஜஸில் ஒரு அம்சையினாலே பிறந்ததென்றறி ஆனபடியினால் பின்னையும் பின்னையுஞ் சொன்னதினாலே பிரயோசனமென்ன இந்தச்சகலசகத்திலேயும் என்னுடைய அனேக அம்சைகளுக்குள்ளே ஒரு அம்சையினாலே நான் வியாபித்திருக்கிறேன் என்று சொல்லியருளினார்.

பத்தாவது விபூதிவிஸ்தாரயோகவத்தியாயம் - முற்றும்,

பதினோராவது

விசுவரூபயோகவத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனன்! கிருஷ்ணதேவரைப்பார்த்து ஓ! சுவாமீ; தேகமேயாத்துமாவென்றுமலேத்திருந்தவென்னை அனு அத்தியாத்து மகமென்கிற பேருண்டானவார்த்தைமுதல் அத்தியாயங்களிலே யுன்னாலே சொல்லப்பட்டு அதினாலே மயன்னுடைய அஞ்ஞானம் விடுபட்டது இதற்குமுந்தின அத்தியாயங்களிலே உற்பத்திப் பிரளயங்களும் அவ்விய யமகத்துவமும் விசாலமாகவுன்னாலே கேட்கப்பட்டன உன்னுடைய சொரூபத்தைக்குறித்து நீர் சொன்ன அர்த்தம் தப்பாது ஓ! புருஷோத்தமாவுன்னுடைய திவ்வியமான ஐசுவரிய ரூபம்பார்க்கிறதுக்கு இச்சிக்கிறேன் சகலத்துக்கும் ஆதாரமானவுன துரூபத்தைப்பார்க்கலாமென்று என்சித்தம்விரும்புகின்றது ஓ! யோகீசுவரனான சுவாமீ யுன்னுடைய சகலசொரூபமும் எனக்குக்காட்டிமையாவென்றுசொல்ல ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும்! ஓ!

அர்ச்சுனா! சகஸ்ரசங்கையாய் நானாவர்ண ஆகிருதியான திவ்விய ரூபங்
களைப்பார், ஆதித்தியர்களும் வசுக்களும் ருத்திரர்களும் அசுவினி
தேவதைகளும்வாயுக்கள் முதலானதும் அனேகமாயெப்போதுங் கண்பா
ராத ஆச்சரியமான எனது சொரூபத்தைப்பார் என்தேகத்திலே
சராசரமான இந்தச்சகல ஜெகத்துமிருக்கின்றது - பின்னையும் என்
னைப்பார்க்கவேணுமென்று இச்சிக்கிறாய் பார் அதெல்லாமிவிடத்திலே
காணப்பார், இந்தமாமிச திருஷ்டியினாலே என்னைப் பார்க்கிறதற்
கு உனக்குச்சக்தியில்லை ஆகலாலுனக்குத் திவ்விய திருஷ்டி கொடுக்கி
றேன் என்னுடைய கடவுடனசாமர்த்தியமானயோகஐசுவரியத்தை
ப்பாரென்று சொல்லி அர்ச்சுனனுக்குப்பரமமான தன்னுடைய அ
யிசுவரிய ரூபங்காண்பித்தருளினார் - அந்தரூபமெப்படிக் கொத்த
தென்றால் அநேகமுகங்கள் அநேகநேத்திரங்களுண்டாய் அனேகஅ
யிசுவரியங்கள் காண்பித்துக் கொண்டு அநேகதிவ்வியாபரணங் களு
ண்டாய் அநேகதிவ்விய ஆயுதங்களும் திவ்வியமாலைகளும் திவ்வியவ
ஸ்திரங்களுந் தரித்துதிவ்வியகெந்தம் பூசிச்சர்வ ஆச்சரியகரமாய் அ
னந்தமாய் விளங்கப் பட்ட விசுவமுகமானது அநேக சூரியனுடை
யகாந்தி ஆகாசத்திலேபொன்றாகப்பிரகாசித்தாலும் அந்தமகாத்துமா
வானசர்வேசுவரனுடையதேஜசுக்குச்சரியாகாது அப்போது அர்ச்சு
னன் அநேகவிதமான சகல செகத்தும் அந்தத்தேவதேவனுடையசரீர
த்திலே ஒரிடத்திலே யிருக்கிறதாகப்பார்த்தான் அதின்பிறகு அர்ச்சு
னன் ஆச்சரியத்துடனே கூடினவனாய் மயிர்ப்புளகித முண்டானவ
னாய் அந்தச்சுவாமியை நோக்கிச்சாஷ்டாங்கமாக தெண்டன்பண்ணி
க்கைகூப்பிநின்று:"

ஓ! சுவாமீ! உன்னுடைய தேகத்திலே சகலதேவதைகளை
யும் சகலப் பிராணிகளையும் பிர்ம்மாவையும் ஈசுவரனையும் சகலரிஷீ
சுவரர்களையும் திவ்யமானபாம்புகளையுங்காண்கிறேன் அனேகங்கை
யும் அநேகம் வயிறும்அநேகமுகங்களும் சர்வத்திராகாண்கிறேன் வி
சுவேசுவரனும் விசுவரூப மான சுவாமீ! நீ அநந்தனானபடியால் ஆதியு
ம் மத்தியமும் அந்தியமு மில்லை யென்று காண்கிறேன் தேஜசா
னே ஒருராசியாய்சர்வத்திர காந்தியுண்டானவனாய் கண்ணுக்குக் கா
ணப்படாமல் வெளிச்சக் கொண்டு அநேகசூரியர் அநேகஅக்கினிகள்
ஒன்றாகக் கூடியதுபோல அதிபச்சத்திய மில்லாமலிருக்கிற கிரீடங்
கள் கதைகள் சக்கிரங்கள்தரித்திருக்கிறவனாகக்காண்கிறேன் வேதாந்த
ங்களிலே அறியப்பட்ட பரமமும் ஒருக்காலுங்கெடாத சொரூபமு
ண்டானவனும் நீயே இந்தச் சகலபிரபஞ்சங்களுக்கு நிதானமும் நீ

யே நாசாகிதனாய் நித்தியமான தர்மத்தைரக்ஷிக்கிறத்துக்காக வந்த சநாத
னரூபம் அவதரிக்கிற ஜனார்த்தனமான புருஷனும் நீயேயென்று எனக்
கறியப்படுகின்றது ஆதிமத்தியாந்தமில்லாதவனாய் அனந்த பராக்கி
ரமமுண்டானவனாய் சூரியசந்திரர் கண்களையுடையவனாய் ஜ
வாலாரூபமான அக்கினிபோலே முக முண்டானவனாய் உன்னுடை
ட தேஜசினாலே இந்த விசுவமெல்லாம் தபிக்கப்பண்ணிக் கொண்டிரு
க்கிற வுன்னைப்பார்க்கிறேன் ஆகாசத்திலும் பூமியிலும் நடுவிலுமசா
வதிக்குகளிலும் ஒருத்தனானவுன்னாலேயே வியாபிக்கப் பட்டது உன
து ஆச்சரியமான உக்கிரரூபத்தைப் பார்த்து இந்தலோகத்திரயமு
ம்பயப்படுகின்றது இந்தத்தேவசமூகமுன்னைப் பார்த்துச் சந்தோ
ஷித்துக்கொண்டிருக்கிறார்கள் சிலதுதேவதைகள்சற்றேபயப்
பட்டுக்கைகட்டிக்கொண்டு ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள் மகாரிஷி
கள் சித்தர்களுங்கூட நன்மையாகவேணுமென்று உசிதவாக்கியங்களி
னாலே தோத்திரம் பண்ணுகிறார்கள் ருத்திரர்கள் ஆதித்தியர்கள் சாத்
தியர்கள் வசுக்கள் விசுவதேவதைகள் மருத்துக்கணங்கள் பிதிர்க்கள்
கெந்தர்வர்கள் யக்ஷர்கள் அசுரர்கள் சித்தசமூகங்கள் இப்படிக்கொத்த
சகலமானபேரும் ஆச்சரியப்பட்டு வுன்னைப்பார்க்கிறார்கள்.

ஓய்! மகானுபாவனே வெகுமுகங்களும் அநேகங்கண்களும்
அநேகங்கைகளும் அநேகம் பாதங்களும் அனேகம் வயிறுகளும் அ
நேகந்துடைகளுமுண்டானதாய் நானாவிதமான கோரப்பல்லுகளு
டனே பயங்கரமாய்க்காணப்படுகிறவுமது சொரூபத்தைப் பார்த்து
லோகங்கள் பயப்படுகின்றது அப்படியே நானும்பயப்படுகிறேன்
ஓய், விஷ்ணுவே பரமாகாசம்போலேமகாப்பிரகாசமுண்டானதா
ய் அனேகவர்ணங்களுடனே கூடிவாயைத்திறந்து எரிந்துக்கொண்டு
விசாலமான நேத்திரங்களுண்டானவுன்னைப் பார்த்து லோகங்கள்ப
யப்படுகின்றது நானும்பயப்பட்டுத் தயிரியமும் சாந்தியுமடையா
மலிருக்கிறேன் பிரளயகால அக்கினிக்குச்சரியாய் கோரப்பல்லுகளு
டனே தோற்றுகிற பயங்கரமானவுமது முகங்களைப்பார்த்துத் திக்குக
ள் தெரியாமல்சுகத்தை அடையாமலிருக்கிறேன் எனக்கு நீர் பிரசன்
னராகவேணும் திருதராஷ்டிர புத்திரரான துரியோதனாதிகளும் பீ
ஷ்மர் துரோணர் கர்ணன் முதலான ராசாக்களும் நமதுசேனைகளுக்கு
ள்ளே சூரிக்கராரும் கோரப்பல்லுகளுடனே பயங்கரமான வுமது
முகங்களிலே சாகிறத்துக்காகச்சீக்கிரம் பிரவேசிக்கிறார்கள் அதிற் சி
லம்பர்கள் தலைகளுடைந்து வுமதுபல்லிலே யகப்பட்டுக் காணப்படுகி
றார்கள் நதிகளிலே தண்ணீர் நிறைந்து வேகத்துடனே தனக்குத்த

ளை ஏழுசமுத்திரத்திலே கூடுறாப்போலே சில வீரபுருஷர்கள் எரிந்துகொண்டிருக்கிற வுமது முகத்திலே விழுகிறார்கள் ஓய், மகாவிஷ்ணுவே யெரிகிற அக்கினியிலே விட்டில் பூச்சி விழுந்தாப்போலே சகல ஜெனங்களும் மகாவேகத்துடனே தங்கள் சாகிறத்துக்குவுன்னுடைய முகங்களிலே பிரவேசிக்கிறார்கள் எரிந்துக் கொண்டிருக்கிற வுமது முகங்களினாலே சகலராசாக்களையும் விழுங்கிறவராய்நாக்குகளினாலே நக்கிக்கொண்டிருக்கிறீர் உமது தேகபிரணங்கள் சர்வத்திர நிறைந்து லோகங்களெல்லாம் தபிக்கப்பண்ணுகின்றது உன்னுடைய சவுமிய ரூபத்தைத்தரிசிக்கவேணுமென்கிறவனக்கு அதிகோரரூபமுண்டானவனாயிருக்கிறீர் நீராரென்னுடனே நிச்சயித்திருக்கிறீர் உம்முடையவியாபாரந்தானதேயென் அது எனக்குத்தெரியச்சொல்லும் ஓய், தேவதேவா-உனக்குநமஸ்காரம் நீ எனக்குப்பிரசன்னமாகவேணுமென்று இப்படிபலவாகத்தோத்திரஞ்செய்ய ஸ்ரீ கிருஷ்ணதேவரும் அர்ச்சுனனைப்பார்த்து.

ஓய்! அர்ச்சுனா! திருதராஷ்டிர புத்திரர் முதலானராசாக்களுக்கு ஆயசுநிறைந்தது ஆகையால் க்ஷயம்பண்ண நிச்சயித்தகாலசொரூபனான நான் இந்தராசலோகத்தைச்சங்கரிக்கிறதுக்குத்தியோகித்திருக்கிறேன், நீகொல்லாமற்போனாலுமுனக்கெதிர்ப்பட்டிருக்கிற வீரபுருஷர்கள் இத்தனைபேரும் நஷ்டமாய்ப்போவார்களென்றேயறி ஆகையால் நீசத்துருக்களுடனேயுத்தியத்துக்கு எழுந்திரு இந்த ராச்சியத்தையனுபவி இந்தச்சத்துருக்களென்னாற் செத்தவர்களை நீ கொன்றாப்போலே உயுத்தியம்பண்ணி அர்ச்சுனன் கொன்றனென்கிறகீர்த்தியைக்கட்டிக்கொள்ளு, துரோணனையும் பீஷ்மனையும் ஜயத்திரதனையும் கர்ணனையும் மற்றராசாக்களையும் அவரவர் குற்றத்துக்குத்தக்கதெண்டனை விசாரித்து என்னாலே கொல்லப் பட்டவர்களை நீ கொல்லு, குருக்களையும் அண்ணன் தம்பி முதலானபேரையுமெப்படி கொல்லுவே னென்று துக்கப்படாதே நீயே ஜெயிக்கிறாய் உயுத்தம்பண்ணென்று சொல்ல - அதுகேட்டு அர்ச்சுனன், மறுபடியுந்நமஸ்காரம் பண்ணிமிகுதியும் பயப்பட்டவனாய்க்கைகூப்பிக்கொண்டுஸ்ரீ கிருஷ்ணபகவானைப்பார்த்து ஓய்? சுவாமீ! ரிஷிகேசா-தேவேந்திரர்கள் முதலான சகல மானுஷர்களும் உன் பிரசாதத்தினாலே உன்னைச்சேவித்துச் சந்தோஷப்பட்டிருக்கிறார்கள் இப்படிக்கொத்தவுன்னைப் பார்த்து ராக்ஷதர்கள்திக்குகளுக்கு ஓடிப்போகிறார்கள் அதற்குத்தேவர்களுனக்கு நமஸ்காரம் பண்ணுகிறார்கள் இது வெல்லாமுனக்கே தகும் ஓய் : மகாத்துமாவே பிரமதேவனு

ப்ரும் ஆதிகர்த்தாவானவுனக்கு தேவர்களெல்லா[illegible]
மெலப்படி யிருக்கப்போகிறார்கள் அனந்த[illegible]களுக்கெ
ல்லாம் பாருப் செகத்தெல்லாம் நிறைஞ்ச [illegible] சொல்லப்
பட்டவனும் நீயே - சத்தும் நீயே அசத்தும் நீயே - இவ்விரண்டி
ற்கும் அன்னியமானவனும் நீயே இந்தச்சகலப்பிரபஞ்சத்துக்கும்
ஆதாரமும் நீயே ஆதிதேவனாய் புராணபுருஷோத்தமனாய் செகத்
திலே பிரகாசிக்கிறவனும் நீயே அறியப் பட்டவனும் நீயே அறிகிற
வனும் நீயே அநந்தரூபமானவுன்னாலே சகலமும் வியாபிக்கப்பட்
டதாகையால் - பரந்தாமனும் நீயே வாயு எமன் அக்கினி வருணன் ச
ந்திரன் பிரம்மதேவனும் நீயே இந்தச் சகல மானவர்களுக்கும் த
கப்பனும் நீயே பாட்டனும் நீயே இப்படிக் கொத்த வுனக்கு நமஸ்
காரம் பின்னையும் பின்னையும் நமஸ்காரம் ஆயிரந்தரம் நமஸ்கார
ம் உன்னைச் சேவித்து எனக்குச் சந்தோஷமாச்சுது - ஆகையாலுன
து முன்புறத்துக்கும் நமஸ்காரம் பின்புறத்துக்கும் நமஸ்காரம்பக்
கங்களுக்கும் நமஸ்காரம் அபரிமிதபராக்கிரமமுண்டான நியந்தரி
யாமியாய் சகலத்திலேயும் பூர்ணமாயிருக்கிறாய் ஆகையால் சகலமு
முன்னுடையசரீரமே சகலமும் நீயே உன்னுடையமகிமையறியாத
அக்கியானமென்ற பிரமாதத்தினாலே யுன்னைச்சினேகித னென்று நி
னைத்து ஓய்! கிருஷ்ணா! ஓயாதவா! ஓசினேகிதனே யென்று என்னென்
னமோ சொன்னேன் அப்படியு மல்லாமல் சிரிப்பு விளையாட்டாக
ச் சஞ்சார வேளையிலேயும் படுக்கிற போது மிருக்கிற போதும்
போசனம் பண்ணுகிற போதும் என்னாலே நாலுபேருடனே ஒருத்
தனாகவு மவமானம் பண்ணப்பட்டா யாகையால் இப்படி அப்படியெ
ன்று அறியப்படாத உன்னைப்பொறுத்துக்கொள்ளு மென்றுவேண்
டிக்கொள்ளுகிறேன் சரியில்லாத பிரபாவ முண்டானவனும் நீ இந்த
ச்சராசர ரூபமானசெகத்துக்குத் தகப்பனும் நீயே உனக்குச்சமான
னுமில்லையதிகனுமில்லை மூன்றுலோகத்திலு முன்னுடைய பிரபாவ
த்துக்குச் சரியில்லை இப்படிக்கொத்தவுனக்குச் சாஷ்டாங்கமாகத்தெ
ண்டன் பண்ணுகிறேன் நீ பிரசன்னனாகவேணுமென்று வேண்டிக்
கொள்ளுகிறேன் தகப்பனுக்கு மகன்வர்த்தனம் பண்ணினால் பொறு
த்துக்கொண்டாப் போலவும் சினேகிதனுக்குச் சினேகிதன் க்ஷமை
பண்ணினாப் போலவும் பிரியபுருஷனுக்குப்பிரிய ஸ்திரீ க்ஷமைபண்
ணினாப் போலவும் என்னுடைய அபசாரம் க்ஷமைபண்ணவேணும்
ஒருக்காலும் பாராத ஆச்சரியமானவுன்னுடைய ரூபத்தைச் சேவித்

அர்ச்சுநன் தேகமெல்லாம் நடுங்கிக் கொண்டிருக்கிறவனைக் கருப்பயத்திலே மனசு கலங்கியிருக்கிறதினாலேயாலும் பிரசன்னமான உமது பூர்வ ரூபமேயெனக்குக் காண்பிக்கவேண்டுமென்று சகலதேவதைகளுக்குமீசுவரனாய் சகல லோகவாசனுமாய் நித்தியமாய்ப் பிரசன்னருமாகிய நீரும் ஒருக்காலும் பாராத எப்போதுமிருக்கிற கிரீடமும் கதையும் சக்கரமும் தரித்திருக்கிற வன்னுடைய ரூபஞ்சேவிக்கவேணுமானதையால் ஆயிரங்கையுடைடான விசுவரூபமான நீ - பூர்வம்போலே நாலுகையுடனே யவதாரம் பண்ண வேணுமென்று வெகுவாகத் தோத்திரஞ் செய்ய ஸ்ரீ கிருஷ்ணதேவரும் - அர்ச்சுனனைப்பார்த்து - ஓய் ! அர்ச்சுனா ; தேஜசமயமாய் சகலமும் வியாபித்துக் கொண்டு ஆதிமத்தியாந்தமில்லாமல் சகலத்துக்குங் காரணமான ரூபத்தை உன்னைத்தவிர அன்னியருக்கு ஒருக்காலுங் காண்பிக்கவில்லை அப்படிக்கொத்த ரூபம் உனக்குப் பிரசன்னனாய் ஆத்தும யோகத்தினாலே யுனக்குக் காண்பித்தேன் இப்படிக்கொத்த ரூபமுண்டான நானுன்னைத்தவிர அன்னியபக்தியில்லாமல் வேதங்கள் படித்தாலும் எக்கியதானக்கிரியைகளாகிற வுத்கிருஷ்டமான தபங்களைப்பண்ணினாலும் அவர்களுக்குக்காண்பியேன் இப்படிக்கொத்த கோரமான ரூபம் சேவித்து நீ பயப்படவேண்டாம் மூடபாவமிவிட்டுப் பயமில்லாமல் சந்தோஷித்துக்கொண்டிரு - பூர்வந்தீயெப்போதுஞ்சேவித்திருக்கிறரூபங்காண்பிக்கிறேன் பாரென்று சொல்லி ஸ்ரீ கிருஷ்ணசுவாமியுந் நாலுகையோடேயிருக்கிறபூர்வ ரூபத்தைத்தெரிசிப்பிக்கப் பயத்தைச்சார்ந்த வேஷத்துடனே நின்று மிகவும் பயப்பட்டிருக்கிற அர்ச்சுனனைப் பயந்தீர்த்தருளினார் அதுகண்டு அர்ச்சுனன் ! சந்தோஷித்தனாய் சுவாமியை நமஸ்காரம் பண்ணி. ஓய் ; ஜனார்த்தனா, சவுந்தரியத்துடனே யெல்லாருமிருப்பிடமானவன்னுடைய சவுமிய ரூபம் தெரிசித்து இப்போது பிராணன்வந்து பயம் போய்ச் சந்தோஷமானேன் என்று சொல்லக்கிருஷ்ணதேவரும்.

ஓய்! அர்ச்சுனா! இப்போது உனக்குவிசுவரூபங்காண்பிக்கையில் பார்த்தையே அப்படிக்கொத்த ஆச்சரியமானவுருவத்தைத் தேவதைகள் தரிசிக்கவேணுமென்று இச்சிப்பார்களே யல்லாமல் பார்க்கமாட்டார்கள் அது எதினாலென்றால் வேதங்களினாலேயும் எக்கியம் தானம் ஓமம் தபசுமுதலானதுகளினாலு முன்னருக் காண்பித்த இப்படிக்கொத்த ரூபம் பார்க்கப்படாது ஓய் ! அர்ச்சுனா ! அனன்னிய பக்தியுண்டானவனுக்கு நான் காணப்படுவேன் என்னிடத்திலே யதார்த்தமாகப் பிரவேசிக்கிறதுக்குஞ் சுலபமாயிருப்பேன் ஆகையா லெனக்காகக்கர்மம் பண்ணாமலேயே பூசை பண்ணு - சகல வுத்தியோ

கர்மங்களுமெல்லாக்கிருஷ்ணார்ப்பணஞ் செய் என்னிடத்திலே பிரியமுண்டான ருயிகாரசங்கம் விட்டுச் சகலபூதங்களிலேயும் வைரமில்லாமலிருந்தா லென்னையடைவாரென்று சொல்லியருளினார்.

பதினோராவது விசுவரூபயோகாத்தியாயம் - முற்றும்.

பன்னிரண்டாவது

பக்தியோகாத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனன்? சுவாமியைப் பார்த்து ஓய்? சுவாமீ யுன்னை நம்பி நிரந்தரமு முன்னிடத்திலே மனசுண்டான பத்தர்கள் உன்னைச்சேவிப்பார்கள் பின்னேயும் சிலபேர் அவ்வியக்த மாய் அட்சரசொரூபமான ரங்களாத்து மசொரூபத்தைச் சேவிப்பார்கள் இந்த இரண்டுவிதத்திலேயும் யாவரியோகமறிந்த சிரேஷ்டரென்று கேட்கக்கிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனனைப்பார்த்து ஓய்? அர்ச்சுனா! ஆருமென்ன, மனசை என்னிடத்திலே நிறுத்திப்பத்தியுடனே கூடிமென்னைச் சந்தோஷித்துடனே வுபாசனை பண்ணுவார்களாகில் 'அவர்கள் யோகத்திலேநேர்ப்பாய் சீக்கிரமாகவென்னையடைவார்கள் எவர்கள் இளும் தேகவெளிருத்தமென்றும் அப்படி யிப்படியென்று சொல்லப்படாதவ னென்றும் சர்வவியாபகனென்றும் கூடஸ்தனென்றுஞ்சலனமில்லாமல் நிலைக்கடையாயிருக்கிற ஆத்துமசுவரூபத்தை யுபாசனைபண்ணிக்கொண்டு பஞ்சேந்திரியங்களை நியமித்துச் சகலமாத்துமாக்களுமாத்மசொரூபமென்கிற சமபுத்தியுண்டானவர்களாய் சகலபூதங்களுக்கும் இதம்பண்ணிக் கொண்டிருந்தாலவர்கள் ஆத்மசொரூபமானவென்னை அடைவார்கள் இப்படிகாணப்படாத ஆத்துமாவினிடத்திலே நினைப்புவைக்கிறது மகாப்பிரயாசம் அதெப்படியென்றால் நான்தேகத்தரித்திருந்தவன் கானுத ஆத்துமா வைத்தியானம் பண்ணுகித்துமகாப்பிரயாசம்எவர்களாகிலும் சகலகர்மபலமுமென்னிடத்திலே

வைத்து என்னைக் கூடுகிறதேயிச்சை யுண்டானவர்களாய் மற்றுமுப்பிர
யோசனங்களிலே யிச்சையில்லாமலென்னையே தியானம் பண்ணிக்
கொண்டு என்னையே சேவிப்பார்களாகில் அவர்களை மிருத்தியு ரூப
மான சம்சார சாகரத்திலே விழாமல் சீக்கிரமாகரக்ஷிப்பேன் நீயென்னி
டத்திலே மனதைப் புத்தியும் வைத்து நானே கெதியென்றிரு. அப்ப
டியிருந்தா லென்னிடத்தில் பிரவேசிக்கிறதுக்குச் சமுசயமில்லை. அ
ப்படி மனதை நிறுத்துகிறதுக்குச் சக்தியில்லாதிருந்தால் அப்பியாச
யோகத்தினாலே என்னைக் கூட இச்சை செய் இப்படிச் செய்த அப்பி
யாசயோகத்துக்குஞ் சாமர்த்தியமற்ற போனாலெனக்காக வேகர்மம் ப
ண்ணு. அந்தகர்மத்தினாலே மனசு நிற்கும் அப்படிச் செய்த அப்
பியாச முண்டானால் நீயொப்பு என்னுடனே கூடினயோகஞ் சித்திக்
கும் இதுக்கு அசமர்த்தனானால் ஆத்தும ஞானம் சித்திக்கிறதுக்கா
கமனசு ஒன்றையு மிச்சியாமல் நிறுத்திச் சகல கர்மானுஷ்டானபல
முந்தியாகஞ் செய் அப்பியாசயோகத்திலும் ஞானமதிகம் ஞானத்தி
லும் தியானமதிகம் தியானத்திலுந் தியாகமதிகம் தியாகத்திலுஞ் சாந்
தியதிகம், சகல பூதங்களிலேயுந் துவேஷ மில்லாமல் மைத்திரியுங் க
ருணையு முண்டானவனாய் மமதையகங்கார மில்லாதவனாய் சுகதுக்கங்க
ளிலே சமமாய்ப் பொறுமையுண்டானவனாய் எம்மாத்திரங் கிடைத்தா
லுஞ் சந்துஷ்டனாய் ஆத்தும சுவரூபமாகவே சந்தோஷித்தை நிலைத்
துக்கொண்டு சாஸ்திரயுக்தமான அர்த்தத்திலே திட நிச்சய முண்டா
னவன் என்னிடத்திலே மனசும் புத்தியும் வைத்து என்னை யெவன்
பத்தி பண்ணுகிறானோ அவனெனக்குப் பிரியன், எவனாலே லோகம் ப
யப்படாமலிருக்கும் எவன் லோகத்துக்குப் பயப்படான் எவன் அ
ரிஷ்டப் சோகப்பய மில்லாமல் என்னிடத்திலே பத்தி பண்ணுகிற வ
ன் அவனெனக்குப் பிரியன் ஆத்துமஞானத்தைத் தவிர இதரமான அ
பேக்ஷை யில்லாமலுள்ளும் புறம்புஞ் சுசியுண்டாய்ச் சாஸ்திரயுக்தமா
ன கர்மானுஷ்டானத்திலே சமர்த்தனாய்ச் சகல பதார்த்தங் களிலேயு
முதாசினபுத்தியுண்டானவனாய்ச் சகலவுத்தியோகங் களிலேயும் விடுப
ட்டு என்மேலே பத்தியுண்டானவன் எனக்குப் பிரியன் பிரியாப்பிரிய
ங்களுக்கும் ஹர்ஷவிஷாதமில்லாதவனாய் சுகமில்லாதவனாய்க் காங்ஷை
யில்லாதவனாய்ச் சுபாசுபங்களைத் தியாகம் பண்ணியென்னிடத்தில் ப
த்தி யுண்டானவன் எனக்குப் பிரியன் சத்துரு மித்துருவிலே சமபுத்
தியுண்டானவனாய் மானாவமானம் சீதவுஷ்ணம் சுகதுக்கம் வந்தபோது
விசாரத்தை யடையாமல் சங்கவர்ச்சிதனாய் நிந்தை ஸ்துதிசமமாகப்
பண்ணிக் கொண்டு மௌனியாய் எம்மாத்திரம் லாபம்வந்தாலுஞ் ச

ந்தோஷித்துக் கொண்டிருக்கிறதிலே மதியாசத்தி யில்லாதவனும் நிரபக்ஷபுண்டானவனும் யென்னிடத்திலே பத்தியுண்டான ஆத்துமபோனெனக்குப் பிரியன் எவனுனுமென்ன தர்மத்தை விடாமல் அமிர்தசொரூபமான பத்தியோகத்திலுலே நாமெனதெறியென்று நான்சொன்ன பிரகாரமாக அப்பியாசம்பண்ணுவானுகில் அவனிப்போதுசொன்ன ஆத்துமஞானிகளிலும் எனக்குப்பிரியன் என்று சொல்லியருளினார்.

பன்னிரண்டாவது பத்தியோகவத்தியாயம் - முற்றும்.

பதின்மூன்றாவது

பிரகிருதிபுருஷ யோகவத்தியாயம்.

இதுகேட்டு அர்ச்சுனன் சுவாமியைப்பார்த்து ஓ! கேசவா பிரகிருதியாவதென்ன புருஷனாவ தென்ன க்ஷேத்திரமாவ தென்ன க்ஷேத்திரக்கியனாவதென்ன ஞானமாவதென்ன ஞேயமாவதென்ன இதுகளை நானறிய இச்சித்தேன் தெரியச்சொல்லுமென்று கேட்கத் இருஷீகேசரும் ஓய் ! அர்ச்சுனா ! ஷட்பாவ விகாரமான இந்தச் சரீரம் க்ஷேத்திரமென்னப்படும் இந்தச்சரீரத்தை அறிகிற ஆத்துமா க்ஷேத்திரக்கியனென்று ஆத்தும சுவரூப மறிந்தபெரியவர்கள் சொல்லுவார்கள் சகலக்ஷேத்திரங்களிலேயும் க்ஷேத்திரக்கியன் நானாகவேயறி இந்த க்ஷேத்திரமும் க்ஷேத்திரக்கியனுடைய சொருபமும் அறிகிற ஞானமெனக்குச்சம்மதம் அந்தச்சரீரமெப்படிக்கொத்தது - எதை ஆசரித்திருக்கும் அதற்குவிகாரமென்ன அது என்னபிரயோசனத்துக்காகப்பிறந்தது அதற்கு ரூபமெப்படி க்ஷேத்திரக்கியனான ஆத்துமாவினுடைய சொருபமெப்படி அந்த ஆத்துமாவுக்குப்பிரபாவமென்னவென்றுஉனக்கதீயப்படி இதுவெல்லாம் சுருக்கமாகச்சொல்லுகிறேன் - கேள்- க்ஷேத்திரமும் க்ஷேத்திரக்கியனுடைய சொருபமும் பராசரர் முதலான ரிஷிகளாலே பிருதியுஞ் சொல்லப்பட்ட

ரு - இருக்கிறதென்று முதலான சந்தைகளாலே வெவ்வேறாய் நன்றாகச் சொல்லப் பட்டயுக்திகளுண்டான பிரம்மசூத்திரங்களென்கிற வேதாந்த சூத்திரங்களினாலே நிச்சயிக்கப்பட்டது பஞ்சமகாபூதங்களும் அகங்காரமும் புத்தியும் மூலப்பிரகிருதியும் இந்திரியமும் ஒ மேற்சொ ரியமும் மனமும் விஷயங்கள் ஐந்தும் இதுவெல்லாம் தேகத்தை ஆசிரித்த தத்துவங்கள் இச்சை த்வேஷம் சுகம் துக்கம் பஞ்சமகா பூதங்கள் முதலான ஆகாரம் இருக்கிறதென்கிற சேதனை தைரியம் இப்படி சரீரத்தின் காரியமும் விகாரமு முனக்குச்சொன்னேன் இனிமேல் ஞானசாதனமான க்ஷேத்திரஜ்ஞனுடைய காரிய மேப்படி யென்றால் ஒருத்தரையும் நிந்தை பண்ணாமல் தன்னை ஸ்துதி பண்ணவேணுமென் றெண்ணாமல் தர்மம் பண்ணி பரோபகாரச் செய்யங்களினாலே ஒருத்தரை இம்சை பண்ணாமல் ஒருவன் தன்னைப் பீடை பண்ணினாலும் விகாரமடையாமல் சாஸ்திரங்களிலேயும் குருமார்க்கமாய் ஞானவுபதேசம் பண்ணின ஆசாரியனைச் சேவை பண்ணி எப்போதும் சுசியாயிருந்து சாஸ்திரயுக்த மார்க்கத்திலே நிலைக்கட்டையுண்டாய் மனது இதர வியாபாரத்திற் போகாமல் நிறுத்தி இந்திரிய விஷயங்களிலே வைராக்கியமுண்டாகி அகங்காரமில்லாமல் ஜனனமரண வார்த்திகம் வியாதி துக்கம் தோஷமுதலானவைகளை எந்நேரமு நினைத்துக் கொள்ளுதல் புத்திராதிஸிநேகங்களிலே ஒட்டு அற்றிருக்கிறது! அத்தியந்தப்ரீதியில்லாமல் அதிலேசங்கமில்லாமல் இஷ்டமான பதார்த்தத்திலும் இஷ்டமில்லாத பதார்த்தத்திலும் சமசித்தமுண்டாய் எல்லிடத்திலே அனன்னிய யோகத்தினாலே வ்யபசாரமில்லாத பக்தியுண்டாய் ஏகாந்தத்திலே இருந்து ஜனமிகுந்த பந்துக்களிலே வேடிக்கையில்லாமல் அத்தியாத்ம ஞானத்திலே நிலைக்கட்டையுண்டாய் தத்துவஞானமே எந்நேரமுஞ் சிந்திக்கிற தாகிய இது வெல்லாம் ஆத்துமாவையறிகிற ஞானத்துக்குச் சாதனம் இதுவல்லாததெல்லாம் அஞ்ஞானம் இனி அறியத்தக்கதேதென்றால் - சொல்லுகிறேன் கேள் அதை அறிந்தால் அமிருதசொரூபமான ஆத்துமாவை அடையலாம் அந்த ஆத்துமா ஆதியந்தமில்லாத பரப்பிரம்மமானது சத்துமல்ல அசத்துமல்ல எங்கெங்கும் கையுங் காலுஞ் சிரசுகளும் முகங்களுங் காதுகளுங் கண்களுமுண்டான சக்தியுண்டாய் எங்கும் வியாபித்திருக்கிறது சகலமுமாச் சகல இந்திரியங்களுந் தனக்கில்லாமலே அதின் ஆபாசகுணங்களை அறிகிறதும் தேகமில்லாமலே தேகசங்க முண்டாய் குணத்திரய மில்லாமலே குணங்களுண்டானதாய் சராசர மான பூதங்களிலேயுள்ளும் புறம்புமிருந்து சூக்ஷ்மரூபமானதையால் அறியப்படாத

நாய் அஞ்ஞானிகளுக்குத் தூரமாய் ஞானிகளுக்குச் சமீபமாய் சகல
ப்பிராணிகளிலேயும் அந்தஞானம் பிரிக்கப் படாமலிருந்தும் தேக
சமயத்திலே தேகத்தைப்பார்த்தால் பிரிபட்டாப்போலேயிருக்கிறதாய் பஞ்ச
பூதங்களைத் தரித்திருந்தும் அதற்கு அன்னியமாயறியத் தக்கதாய் அ
ன்னபானாதிகள் போஷித்தும்பெ சிபாதனாய்ச்சங்கரிக்கிறதும் பிறப்பிக்
கிறதுமாய் சோதிசொரூபமான சூரியன் தீபமணிமுதலான பிரகாச
ங்களுக்குமுடைய ஞானப் பிரகாச யிருளிலே காண்பிக்கப் படாதவி
ற தாயிருட்டுக்கப்பாற்பட்டதாய் ஆத்துமதத்துவமெல்லாம் ஞானஸ்
வரூபமென்கிற யறியத்தக்கதாய் ஞானசாதகமான குணங்களினாலே
யடையத்தக்கதாய் சகலப்பிராணிகளின் இருதயத்திலே யிருக்கிறது
ஆத்தும தத்துவம் இந்தப்படி க்ஷேத்திரத்தின் சுவரூபமும் ஞானத்
துக்குச்சாதனமான குணசுவரூபமும் அறியத்தக்கதாகிய ஆத்மசுவரூ
பமு முனக்குச் சொன்னேன் இதைப் பத்தியினாலே யறிந்தவன் என்
னுடைய பாவத்தை யடைவான் இந்தப் பிரகிருதியும் புருஷனுமநா
திமென்று நீயறி சம்சார ஹேதுவான இச்சைத் துவேஷமுதலானவி
காரங்களும் ஞானசாதகமான மோக்ஷஹேதுவான குணங்களும் பிரகி
ருதியினாலே பிறந்ததாக அறி, காரியமான சரீரத்துக்குங் காரணமான
இந்திரியத்துக்கும் அதினுடைய கர்த்தத்துவத்துக்கும் பிரகிருதிகா
ரணம் அந்தப்பிரகிருதியோடே கூடினபுருஷன் சுகதுக்கமநுபவி
க்கிறதற்குக்காரணம் இந்தப்படி புருஷன் பிரகிருதியிலே யிருந்
து ஆத்துமாநுபவம் விட்டுப்பிரகிருதியினாலே பிறந்த சுகதுக்கங்க
ங்களை அநுபவித்துக் கொண்டிருப்பன் ஆகையால் புருஷன் பிரகி
ருதிகுணசங்கத்தினாலே நல்ல ஜென்மத்திலேயும்பொல்லாத ஜென்மத்
திலேயும் பிறக்கிறதுக்குக் காரணமாவன் - இந்தத்தேகத்திலே யிரு
க்கிற புருஷனென்கிற சீவன் இந்தத்தேகத்திலே பிறந்தவிஷயங்களை
இச்சித்துப் பார்க்கிறவனும் வேறு மென்கிற வனும் தேகத்தினாலே
சுகதுக்கமநுபவிக்கிறவனுமாய்த் தேகத்தைத் தரித்ததால் கர்த்தாவா
யிருப்பன் - கனமான ஞானமுடையனான இந்தஆத்துமாவைப்பிரகிரு
திபந்தத்தினாலே யித்தத்தேகத்திலே கேவலம் உத்கிருஷ்டமான புரு
ஷனென்று சொல்லுவார்கள் இப்போதுனக்குச் சொன்ன புருஷசு
வரூபமும் பிரகிருதி குணசுவரூபமும் விசேஷித்தறிந் தவனாதலே
சர்வதாவிவகரித்துக் கொண்டிருந்தாலும் அவனுக்கு மறு படியுஞ்
ஜெனனமில்லை அவன் மோக்ஷத்தையடைவான் இந்த ஆத்தும சொ
ரூபத்தைச் சிலர் தியானத்தினாலே காணுவார்கள் சிலர் ஞானயோகத்தி
னாற் கண்டார்கள் சிலர் சாங்கியத்தாலுங்காணுவார்கள் இப்படி சுத்தி

யமாட்டாதபேர் ஆசாரியராலே யிதுவெல்லாம் நன்றாகக்கேட்டுத்தம
க்குத் தக்கவுபாசனையினாலே ஆத்தும ஞானத்துக்கு வுத்தியோகம் ப
ண்ணுவார்கள் இப்படிப்பெரியவர்களாலே நிரந்தரமுங் கேட்ட பேர்
பிருத்தியு சொரூபமான சம்சாரத்திலே யகப்படாமல் ஆத்துமாவை
க்காணுவார்கள் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் சகல ஜெந்துக் களும்
பிரகிருதி புருஷ கூட்டத்தினாலே பிறந்ததென்று நியதி - இந்தப்ப
டி சகல பூதங்களிலேயும் ஆத்துமா சமமாக இருந்தும் அந்தந் தே
கங்களிலேகெடுகிறபோதும் ஆத்துமாகெடாதென்று எவனறிகிறானோ
அவனாத்துமாவை அறிந்தவன் சகலதேகங்களிலேயும் சர்வத்திர ஆத்
துமா சமமாயிருக்கிறதென்று எவனறிகிறானோ - அவன் தன்மனதி
னாலே ஆத்துமாவைக் கெடுத்தவனல்ல அவன் ஞானத்தினாலே மோக்ஷ
த்தையடைவான் சகல கர்மங்களும் சகல கிரியைகளும் பிரகிருதியினா
லே செய்யப்படுகிறது ஆத்துமா ஞான சொரூபமாகையால் இதற்கு
கர்த்தா அல்லவென்று எவனறிகிறானோ அவனாத்தும சொரூபத்தைத் த
ன்றாக அறிந்தவன் பிரகிருதி புருஷாத்துமகமான தேகதாரிகளுக்கு
ள்ளே தேவத்துவ மனுஷியத்துவ குட்டையநெட்டையன் முதலான
வெவ்வேறான பாவங்களும் புத்திரபவுத்திர பரம்பரை என்கிற விஸ்
தாரமும் பிரகிருதி யினாலே பிறந்ததே யல்லாமல் ஆத்துமா ஞான
சொரூபமென்று எவனறிகிறானோ அவன் அப்போதே ஆத்துமாவை
அடைவான் இந்தத்தேகத்துக்கு அன்னியமான சுபாவமுண்டா யுதி
ருஷ்டமான இந்த ஆத்துமா சரீரத்திலே இருந்தாலும் அநாதியாகையா
ல் நாசமில்லாதவர் குணங்களில்லாதவராகையால் ஒருகர்மமும்பண்
ணினவரல்ல மிகுந்த சுபாவத்துடனே கூடினவருமல்ல ஆகாசம் சர்வத்
திர வியாபித்திருந்தாலும் அந்தந்த வஸ்துசுபாவத்திலே எப்படிக்கூ
டவில்லையோ அப்படியே ஆத்துமா அதிசூக்ஷமமாகையால் சகலதே
கங்களிலே யிருந்தாலும் அந்தந்த தேகசுபாவங் களிலேயும்கூடினவ
ரல்ல அதெப்படி யென்றால் சூரியன் ஒருத்தனே தன்பிரகாசத்தி
னாலே சகல லோகங்களுமெப்படி பிரகாசிக்கப்பண்ணுகிறானோ அப்
படியே ஆத்துமாவும் சகல சரீரங் களிலேயும் ஞான சொரூபத்தினா
லேயுள்ளும்புறம்பும் பிரகாசிக்கப்பண்ணுவார் இப்போது நான்சொ
ன்னபடி க்ஷேத்திரமும் க்ஷேத்திரக்ஞனுடைய விசேஷமும் விவே
கித்த ஞானதிருஷ்டியினாலே பஞ்சபூதசொரூபமும் பிரகிருதி சுவ
ரூபமும் மோக்ஷசுவரூபமும்அறிந்தபேர்பிரமமான ஆத்துமசுவரூ
பத்தை அடைவார்களென்று சொல்லியருளினார்.

பதின்மூன்றாவது பிரகிருதிபுருஷயோகவத்தியாய - முற்றும்.

குணத்திரயவிபாகயோகவத்தியாயம்.

அப்பால் கிருஷ்ணபகவானாய்? அர்ச்சுனனைப்பார்த்து ஓ! அ
ர்ச்சுனா; முன்சொன்ன ஞானத்திலேயு முத்தமமான ஞானத்தைச்
சொல்லுகிறேன் கேள்அந்த யோனமறிந்தரிஷிசுவரர்கள்பரிசுத்தமா
னஆத்துமசொரூபத்தைஅடைந்தார்கள்இந்தவுன்னமைஞானத்தைஆ
சரித்தால் ஆத்தும சுவரூபத்தை அடைந்து சிருஷ்டி காலத்திலே பிற
ப்புக்கும் வரார்கள் பிரளய காலத்திலே சங்காரத்துக்கும் கூடார்கள்
சகல சனங்களுக்கும் காரணமான என்னுடைய யோனிசொரூப மா
னபிரகிருதியைக்குறித்துக் கெற்பந்தரிப்பேன் அதினாலே சகலபிர
ணிகளுக்கும் பிறப்புண்டாயிருக்கும் - தேவ கெந்தர்வயக்ஷ ராக்ஷச
மிருகாதிசாதிகளிலே எந்தெந்தச்சரீரம் பிறக்குமோ அந்தச்சரீரத்துக்
கெல்லாம் பிரகிருதியினாலே நானே காரணமாயிருப்பேன் நான் பீ
ச பூதமான தகப்பன் சாத்துவிக ராஜச தாமச மென்ற மூன்று குண
ங்களும் பிரகிருதி யினாலே பிறந்தது ஓ! அர்ச்சுனா! அந்தக்குணங்
களினாலே கேடில்லாத ஆத்துமாவை ஜன்மங்களுக்கு ஏதுவாகப்
பந்தப்படுத்தும் இந்தமூன்று குணங்களிலேயும் சாத்துவிகந்தான் சு
கத்திற் கூட்டிவைக்கிறதாகையால்நிர்மலமானதுஅதுவசெய்கத்தினா
லே ஞானத்தைப் பிறப்பிக்கும் ராஜசகுணம் ராகாத்துமகமான ஆ
சையிலே கூட்டிவைக்கும்அதினாலே கட்டுப்பட்டுத்தேகி கர்மசங்கமு
வான் தமோகுணம் ஞானத்தைமூடி எதார்த்தமானதைத்தெரியாமல்ப
ண்ணிபொருளல்லாதவைப்பின்னே பொருளல்லாதவாய்த்தெரிகிற ஞான
அஞ்ஞானத்தை யுண்டுபண்ணிப் பிரமாதமும்ஆலஸியமும் நித்திரை
யு முண்டாவதைப்பண்ணும் சாத்துவிககுணஞ்சுகத்தைப் பிறப்
பிக்கும் ராஜசகுணம் இச்சையைப் பிறப்பிக்கும்- தாமசகுணம் ஞா
னத்தை மூடிப்பிரமாதத்தையுண்டு பண்ணும் இந்தக்குணங்களில் ஒ
ருவேளை இராஜசதாமசமடங்கிச்சாத்துவிகம் பிரபலமாம் ஒருவேளை
தாமச சாத்துவிகமடங்கிராஜஸம் பிரபலமாம் ஒருவேளை இராஜசம்
சாத்விக மடங்கித் தாமசம் பிரபலமாம் சாத்துவிககுணம் பிரபலமா

னுஞ்சகலவிந்திரியத்துவாரத்திலேயும்பிரகாசரூபமாகவிளங்கியபு
ள்ளபடியறிகிற ஞானத்தையும்பண்ணும் - ராஜசகுணம்பிரபலமா
னால் லோபமும் ஆரம்பம்பண்ணவேண்டிய கர்மங்களிலே சஞ்சலமுங்காமி
யகர்மங்கள் பண்ணுகிறதும் விஷயங்களிலே இச்சையுமுண்டு பண்
ணும், தாமசகுணம் பிரபலமானால் மனதிலே ஞானம் பிறக்கவொட்
டாமல் பிரமாதமும் மோகமுமுண்டு பண்ணும் எவனுக்கும் சாத்து
விகமுண்டாய் அதிகமானவேளையில் தேகம் விட்டால் அவன் ஆத்தும
ஞானிகளுடைய நிர்மலமானலோகத்தை யடைவான் ரஜோகுணம் அ
திகமானவேளையில் சரீரம்விட்டால் காமியகர்மங்கள் பண்ணுகிறவர்
களுடைய வம்சத்திலே பிறப்பன் தாமசகுணம் பிரபலமானவேளை
யில் சரீரம் விட்டால் மூடர்களுடைய வம்சத்திலே பிறந்து அக்ஞி
யானத்துடனிருப்பன் - சாத்துவிகமுண்டானதினாலே ஞானம் பிறக்கு
ம்ரஜோகுணத்தினாலே லோபம்பிறக்கும் தாமசகுணத்தினாலே மறை
ப்பும் அஞ்ஞானமும்பிறக்கும், சாத்துவிகர்கள் ஊர்த்துவ லோகமோ
க்ஷமோக்ஷத்தை அடைவார்கள், ராஜஸர்கள் காமிய கர்மபலமாய் வந்
த பலத்திலே சுவர்க்காதி போகங்கள் அனுபவித்துத்திரும்பிப்
பிறந்துமத்திய லோகத்திலே யிருப்பார்கள், தாமசர் அக்ஞானத்
தினாலே அஞ்ஞானகாரியங்களைப்பண்ணி-அதோகதி அடைவார்கள்
சகலபிரயோசனங்களையுஞ்செய்துவிக்கிறதுக்குக்குணங்களே கர்த்தா,
ஆத்துமா இதிலே கூடினவனல்லவென்று அறிந்தவன் எனதுசுபாவ
ரூபத்தை யடைவன் - எனதுசுபாவமெப்படிக் கொத்த தெனில்
இந்த ஆத்துமா விஷயத்தில் தேகத்தினாலே பிறந்த பிரகிருதிகுணங்
களைக்கடந்து ஜெனனமரணவார்த்திக மென்கிற துக்கங்களில் விடுப
ட்டு அமிர்தசொரூபமான ஆத்மானுபவமே அனுபவிப்ப னென்று.
சொல்ல அர்ச்சுனன் கேட்டு ஓய்! சுவாமி! இந்தமூன்று குணங்களு
ங்கடந்தவனுடைய லக்ஷணமென்ன ஆசாரமெப்படி எந்தவுபாயத்
தினாலே குணத்தைத் தள்ளுவானென்று கேட்க - ஸ்ரீ கிருஷ்ணதேவ
ரும் - ஓய்! அர்ச்சுனா! சாத்துவிகலக்ஷணத்தினாலே பிறந்தபிரகாசமும்
ராஜசத்தினாலே வந்தகாமியபிர விர்த்தியும் தாமசத்தினாலே பிறந்த
அஞ்ஞான மென்கிற மூடமுமிவை யெல்லாம் வந்தபோது - துவே
ஷமுஞ் சந்தோஷமுமில்லாதவனாய் ஆத்துமானுபவத்திலே சந்தோ
ஷத்துடன் கொண்டிருக்கிறவனாய் மற்றைக்காரியங்களிலேயுதாசீனபுத்
தியுண்டானவனாய் குணங்களினாலே சலனமில்லாமல் சுகம் துக்கம் வ
ந்தபோதும் ஆத்துமாவினிடத்திலே நினைப்பு வைத்தவனாய் பொ
ன்னும் ஓட்டுஞ்சரியாய்ப்பார்க்கிற வனாய்ப் பிரியப்பிரியங்களுமிது

ஜி நிர்க்குணருஞ் சமமாகப் பண்ணிக் கொண்டிருப்பவருமான அவ்யபி
சாரித்தான பக்தர்களிலே ஊடுருத்தியுண்டான வருஞ் சகலவித
போகங்களை பரித்தியாகம்பண்ணினவனோனாலு மென்னை மெள்ளவிடத்
லே ஒன்னிலுமிடைவிடாத பக்திபண்ணிச் சேவித்து வருகிறவனோ
அவனே சந்தோஷமடைந்து பிரம்மபாவத்தையடைகிறானோ முண்டானவருக்கு
ஆகையால் சகலத்துக்கும் நானே ஆகாரம் அப்படியே தர்மத்துக்கு
ம் ஞானிகளுக்கும் அடையத்தக்க சுகத்துக்கும் நானே காரண மென
று சொல்லியருளினார்.

பதினாலாவது குணத்திரயவிபாகயோகவத்தியாயம் முற்றும்.

பதினைந்தாவது

புருஷோத்தமயோகவத்தியாயம்.

அப்பால் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனைப்பார்த்து ஓய்!
அர்ச்சுனா! இந்த சம்சாரமென்கிற அசுவத்தவிருக்ஷம் வேர்மேலும்
கொப்புகிளைகள் கீழுமாகவுண்டானது - இதற்குத்தாற் பரியமென
ன்றால் பிரம்மதேவனிடத்திலே யிந்தச்சமுசாரந் தோன்றுகிறபடியி
னாலே வேர்மேலென்கிறது அங்கேயிருந்து தேவர்மனுஷ்யாதி சிருஷ்
டிபரம் பரையுண்டாகிற தாகையால் கீழ்க்கிளைகள் என்கிறது - இந்த
விருக்ஷத்துக்கு வேதங்களை யிலைகளிப்படிக் கொத்த சம்சாரவிருக்ஷ
த்தை எவனறிகிறானோ அவன்வேதத்தை அறிந்தவன் இந்தச் சமுசா
ரவிருக்ஷம் விஷயங்களென்கிற துளிர் துளிர்த்து குணத்திரயங் களி
னாலே விருத்தியடைந்து கீழுமேலும் நிறைந்து மனுஷ்ய லோகத்தி
லே அவரவர்கர்மங்க ளென்கிறவிழுதுகளிறங்கிச் சகலத்திலும் நிலத்
திருந்தது இப்படிக்கொத்தசமுசாரவிருக்ஷத்தின் சொரூபம் சம்சா
ரிகளினாலே அறியப்படாது இதற்கு ஆதியுமில்லை அந்தியுமில்லை
இதினுடைய நிஜமிப்படியென்று தெரியப்படாது இப்படிக் கொ
த்தசம்சார விருக்ஷத்தை வயிராக்கியத்தினால் அசங்கமென்கிற வாளி
னாலே வெட்டி வைராக்கியத்தினாலே யிப்படிக்கொத்த பதத்தை அ
டைந்தால் இந்தச்சமுசார துக்கத்திலே திரும்பிவாரார்கள் அப்படிக்
கொத்த இடத்தைத்தேடவேண்டியதெப்படியென்றால் எந்தப்பிரம்

வற்றிறுலே அநாதியாயிந்தச்சமுசாரம் நடப்பிக்கப் பட்டதோ அந்தத்திருவடிகளைச்சரணமடைந்தாலிந்தச் சமுசாரதுக்கங்கடந்துபோவார்கள் டம்பமில்லாமல் பெரியோரானவர்கள் தேகமேஆத்துமாவென்கிற அவித்தையைவிட்டுப்போகங்கள்மேலேஆசைவிட்டுச் சங்கதோஷமில்லாமல் ஆத்துமஞானமென்கிறவித்தையுண்டானவராய்இச்சைகள்விட்டுச்சுகதுக்கமென்கிற துவந்துவத்திறுலே விடுபட்டு ஆத்தும ஞானமறவாமல் நாசமில்லாத ஆத்தும சொரூபத்தைக் காண்பார்கள் ஆத்துமாவென்கிற தேஜசு ஞானமே காணப்பண்ணும் அல்லாமற் சூரியனுஞ்சந்திரனும் அக்கினியுமானவிவர்கள் காண்பிக்கப்பண்ணமாட்டார்கள் எந்தஆத்துமசொரூபத்தை அடைந்தால் திரும்பிவாரார்களோ அந்தஆத்தும சொரூபம் பரமமான என்னுடைய ஸ்தானமென்னுடைய அம்சமாயிருந்தே சகல ஜீவன்களும் பூதங்களுமநாதியாய் மனமுதலிய ஆறு இந்திரியங்களிறுலே பிரகிருதி ரூபமாயிருக்கின்றது ஆத்துமாவொருசரீரத்திலே பிரவேசிக்கிற போதும் அந்தச்சரீரத்தைவிடுகிற போதும் இந்திரியங் களுக்குத்தான் ஈசுவரனுன படியிறுலே அந்தஇந்திரியங்களைக்கிரகித்துக் கொண்டுபோம் அதெப்படியென்றால் வாயுசுகந்தம் கிரகித்துக்கொண்டு வந்தாப் போலாகும் அந்த இந்திரியங்களேதென்றால் சுரோத்திரம் தொக்கு - சக்ஷு - ரசனை க்கிராணம் இதுகளுக்குச்சிரேஷ்டமானமனது இதுகளைப்பிடித்துக்கொண்டு இந்திரியவிஷயங்களை அநுபவித்துக் கொண்டிருக்கும் இந்தப்படி தேகங்கள் விடுகிறபோதும் இருக்கிறபோதும் விஷயங்களை அநுபவிக்கிறபோதும் ஆத்துமாவுந்தேகமும் வேறென்று மூடர்களறியார்கள் ஞானதிருஷ்டியுண்டானவர்களறிவார்கள் யோகீசுவரர்கள் யோகதிருஷ்டியிறுலே சரீரத்திலேயிருந்தாலும் ஆத்துமாவைச்சரீரத்துக்கு அன்னியமாக அறிவார்கள் யோகமில்லாத பேருக்குமனது நிர்மலமில்லாதபடியால் ஆத்துமாவைக் காணமாட்டார்கள் சகலலோகங்களும் பிரகாசிக்கப்பண்ணுகிற சூரியனுடைய தேஜசும்சந்திரனுடைய தேஜசும் அக்கினியினுடைய தேஜசுமாகிய இந்தத்தேஜசுகளெல்லாம் என்னுடைய தேஜசென்றே அறி, பூமியிலேயும் நானே பிரவேசித்து என்னுடையசக்தியிறுலே நானே பூதங்களைத்தரிப்பேன் அமிர்தசொரூபமான சந்திரனிலும் அப்படியே பிரவேசித்துச்சகலஓஷதிகளையும் விருத்திபண்ணுவேன் நான் அக்கினியிலும் பிரவேசித்துப் பிராணிகளுடைய தேகத்தையாசிரித்து அவர்கள் புசிக்கிற சதுர்வித அன்னமும் பிராண அபானவாயுக்களைப்பிரேரேபித்து அந்த அன்னத்தைப் பாகம்பண்ணுவிப்பேன் - சகலபிரா

ளிகளுடைய இருதயத்திலும் அந்தரியாமியாக நானிருந்தபடியினா-
லே சகலருக்கும் அதிஷ்டாயிருக்கும் நான் வேதங்களினாலே அறியத்
தக்கவன் வேதாந்தசம்பிரதாயப்பண்ணினவனும் நானே வேதரூபம் அ-
றிந்தவனும் நானே லோகத்திலே க்ஷரமென்றும் அக்ஷரமென்றும் இர
ண்டு புருஷர்கள் சகலப்பிராணிகள் சரீரங்களிலேயுமிருந்து சமுசாரம்
பண்ணுகிறதே க்ஷரமென்றும் இதுக்கெல்லாங்கூடஸ்தனாய் ஆனந்த
சொரூபியாய் விகாரமில்லாத ஆத்துமாவை அக்ஷரமென்றுஞ் சொ
ல்லப்படும் - உத்தமபுருஷர் பந்தமுத்தஜீவாளுக்கு அன்னியராய் ச
கல வேதாந்தங்களிலேயும் இவரே பரமாத்துமா வென்று சொல்லப்ப
ட்டவராய் மூன்று லோகத்திலும் அந்தரியாமியாயிரு வெல்லாந்தரி
த்துக்கொண்டேயிருப்பர் அவரே நாசமில்லாதவர் அவரே ஈசுவரரா
ந்தக் காரணத்தினாலே நான் பந்தஜீவாளுக்கும் முத்தஜீவாளுக்கும்
அதிகமாயிருப்பேனே அந்தக் காரணத்தினாலே லோகங்களிலேயும்
வேதங்களிலேயும் நான் புருஷோத்தமனென்று பிரசித்தனானேன் எ
வனொருவன் இப்போது நான் சொன்னபிரகாரத்தினாலே புருஷோத்த
மனானே யென்று அறிவானாகில் அவனே ஞானி அவன் சகலபாவங்க
ளிலும் என்னையே பஜனைபண்ணுவான் - இப்போது உனக்குச்சொன்
னபுருஷோத்தம யோகமிருதியும் ரகசியமான சாஸ்திரம் இதை அறி
ந்தவன் நல்ல புத்தியுண்டானவன் அவனே கிருதகிருத்திய னென்று
சொல்லியருளினார்.

பதினைந்தாவது புருஷோத்தமயோகவத்தியாயம்- முற்றும்.

பதினாறாவது
தெய்வ அசுர சம்பத்து

விபாகயோகவத்தியாயம்.

அப்பால் கிருஷ்ணதேவரும் - அர்ச்சுனனைப் பார்த்து ஓய்!
அர்ச்சுனா! பயமில்லாமல் சத்துவகுணத்தோடேயிருந்துக்கொண்டு

ஞானயோகத்திலே நிலைக்கையுண்டாய் தானமுமேறு நிக்கிரகம் எஞ்ஞியம் சுவாத்தியாயம் தபசுமுதலான இதுக எல்லாமுண்டாய் இம்ஸைபண்ணுகிற புத்தியில்லாமல் சத்திய வாக்கியமே பேசிக்கொண்டு குரோதமில்லாமல் ஆத்தும ஞானத்துக்கு விரோதமான வஸ்துக்களிலேதியாகமுண்டாய் இந்திரிய விஷயங்களிலே போகாமல் சாந்தியுண்டாய் ஒருத்தர் மேபரிலே சாட்டிச் சொல்லாமல் பூதங்களிலே தயவுண்டாய் விஷய லோலமில்லாமல் சாதுவென்கிறபேர் எடுத்துக் கொண்டு நிஷித்தகர்மத்திலே லஜ்ஜையுண்டாய் விஷயான்வீதனத்திலே சபலமில்லாமல் துஷ்டஜனங்களுக்குப் பயப்படாமல் சமபுத்தி பண்ணிக் கொண்டு பொறுமையுண்டாய் நிஷித்தகர்மத்திலே இச்சையுண்டாய் ஆபத்காலத்திலேயாகிலும் நிஜஸ்வரூபம் மறவாமலிருக்கச் சுசியுண்டாய் ஒருத்தருக்குந் துரோகம் பண்ணாமல் கெர்வம்விட்டுவிட்டு இது முதலான குணங்களுண்டாயிருக்கிறது தெய்வசம்பத்தென்று சொல்லப்படும்! டம்பமும் புண்ணியபாவங்க ளறியாமல் விஷயங்களிலே சந்தோஷமும் அபிமானமும் கோபமும் சாதுக்களைத் தூஷிக்கிறதும் ஆத்ம அஞ்ஞானமுதலான குணங்கள் - அசுரசம்பத்தென்று சொல்லப்படும் - தெய்வசம்பத்து மோக்ஷத்தையடையப் பண்ணும் அசுரசம்பத்து சம்சாரத்திலே பந்தப்படுத்தும் ஓய்! அர்ச்சுனா! நீயித்த இரண்டிலேயும் எப்படிக்கொத்தவனோ வென்று பயப்படவேண்டாம் நீ தெய்வசம்பத்திலே பிறந்தவனே சரீரத்தலோகசிருஷ்டி தெய்வசம்பத்தென்றும் அசுரசம்பத்தென்று மிரண்டுவிதமாகவேயிருக்கும் இதிலே தெய்வசம்பத்திலே பிறந்தவர்கள் பிறப்பும் ஆசாரமும் விஸ்தாரமாகச் சொன்னோம் - அசுரசம்பத்திலே பிறந்தவர்கள் பிறப்பும் ஆசாரமும் சொல்லுகிறோம் கேள் - அசுர ஜனங்கள் பிரவிர்த்தி நிவிர்த்திக்கிரமங்கள் அறியார்கள் அவர்களுக்குச் சுசியில்லை ஆசாரமில்லை அசத்தியமானதேகத்தைச் சத்தியமென்று சொல்லுவார்கள் செகத்துக்கு ஈசுவரனில்லை யென்பார்கள் இப்படிக்கொத்த புத்தியுண்டானவர்க ளாகையினாலே செகத்துக்கு ஸ்திரீபுருஷ சம்யோகத்தினாலே ஜனனமுண்டாகிறதென்று சொல்லுவார்கள் சகலமும் கர்மமேயதுவே யென்று சொல்லுவார்கள் இப்படிப்பட்ட புத்தியுடையவர்களாதலால் தேகத்துக்கு அன்னியமான ஆத்துமா வுண்டென்கிற ஞானமில்லாமல் அற்பபுத்தியுண்டாயுக்கிர கர்மம் பண்ணிக்கொண்டு செகத்துக்கு இதமில்லாமற் கெடுத்துப் போகிறார்கள் எத்தனை வந்தாலும் ஆசைபடங்காமல் டம்பம் அபிமானம் மதம் இதுகளுடனே கூடிக்கொண்டு தனக்கு அகப்படாதவஸ்துக்களின் பேரிலே இச்சைப்பட்டுத்

கொண்டு அன்னியாயத்தினாலே தனம் ஆர்ச்சித்து அபவித்திரமான
விரதங்களை அநுஷ்டிப்பார்கள் தங்கள் மரணம் இந்தநேரமென்று நிச்ச
யமில்லாமலிருக்கக் கற்பாந்தபரியந்த மிருப்போமென்கிற சிந்தையு
ண்டானவராய்க் காமபோகமே புருஷார்த்தமென்று நிச்சயமுண்டான
வராய் ஆசை என்கிற பாசங்களினாலே கட்டுப்பட்டு காமக்குரோதபர
ராய் அந்தக் காமபோகத்துக்காக அன்னியாயத்தினால் தனமார்ச்சிக்
கவேணுமென்கிற இச்சையுண்டாய் அதிருஷ்டமென்கிறது கெட்ட
துண்டோ என்னுடைய புசபலத்தினாலே வேண்டியது தேடினேனே
இந்தத்தன மிருக்கிறது கொண்டு இன்னம் வேண்டியதெல்லாந் தே
டுவேன் என்னுடைய பெலத்தினாலே முன்பு என்பகைவன் செத்து
ப் போனான் இன்ன மிருக்கிற பகையாளிகளை யெல்லாங் கொன்று
போடுகிறேன் எல்லாருக்கும் நானே யாண்டவன் என்னுடைய புசப
லத்தினாலே போகங்களை அநுபவித்தேன் தனத்தினாலும் குலத்தினா
லும் எவனும் எனக்குச் சரியில்லை என்வல்லமையினாலே சகல எக்கிய
ங்களும் பண்ணுவேன் சகலதானங்களும் பண்ணிச் சந்தோஷிப்படு
வேனென்று அஞ்ஞான நினைவுகள் நினைத்துக்கொண்டு சித்தத்துக்கு
அனேகம் பிராந்திபிறந்து அஞ்ஞானமென்கிற வலையிலகப்பட்டுக் கா
மபோகங்களிலே யிச்சையுண்டாய் அபவித்திரமான நரகத்திலே வி
ழுவார்கள் பின்னையும் தன்னைத்தானே புகழ்ந்துக்கொண்டு நானேய
திகனென்று நினைத்துக் கொண்டு தனமபிமான மென்கிற மதத்தோ
டே கூடிச் சாமயாசி என்கிறபேருண்டானதுபோது மென்று டம்
பத்தினாலே வேதோக்தவிதி யில்லாமல் எக்கியம் பண்ணிக் கொண்டி
ருப்பார்கள் அகங்காரம் பலம் கெர்வம் காமக்குரோதமிவைகளிலே கூ
டிக்கொண்டு தன்னுடைய தேகத்திலேயும் பரருடைய தேகத்திலே
யும் அந்தரியாமியாயிருக்கிற என்னைத்துவேஷித்துக் குயுத்தியினாலே
என்பேரிலே தோஷத்தைச் சொல்லிக் கொண்டு அசூயையினாலே யி
ருப்பார்கள் இந்தப்படியென்னைத்துவேஷித்துக் கொண்டு குரூரபு
த்தியினாலே மனுஷ அதமானபாபாத்துமாக்களை நிரந்தரமும் இற
க்கிறதும் பிறக்கிறதுமான சம்சாரத்திலே என்னை அறியாத அசுர ஜெ
ன்மத்திலே விழப்பண்ணுவேன் அவர்கள் அசுரயோனியிலேபிறந்து
ஜென்மஜென்மத்துக்கும் அக்கியானிகளாய் அதினாலே யென்னை அறியா
மல்; ஓய்! அர்ச்சுனா! அதின்பிறகு அதமகெதியடைவார்கள் அந்தநரக
த்துக்குக் காமக்குரோத லோபமென்கிற மூன்று வாயிலுண்டு அது
கள் ஆத்துமாவைக்கெடுக்கிறது ஆகையாலிந்த மூன்றும் விட்டுவிடு
ஓய்! அர்ச்சுனா; என்னை அறியாத தாமசகுணங்களுக்கு வாசலானதாய்

சத்ருக்த லோபங்களிலே விழப்பட்டவன் என்னிடத்திலே ஞானமு ண்டாகிற நிச்சயமெய்யாதிருக்கக் கொண்டு அதிருமிலே பரம கெதிய டையாய் எவருகிலும் வேதங்களிலே சொன்னவிதிப்பிரகாரம்விட்டு ஸ்வமிச்சாப்படிகளிலேயிரவர்த்திப்பாருகில் அவர் யோக்ஷசித்தியடை யமாட்டார் அவருக்கு இகலோகசுகமுமில்லை பரலோகசுகமுமில்லை ஆகையால் சகலத்துக்கும் சாஸ்திரப் பிரமாணம் இதுசெய்யலாம் இ து செய்யலாகாதென்று அறிந்து சாஸ்திரத்திலே சொன்ன படிக்கு நடப்பதுசித்தமாம் பலமென்றுஞ்சொல்லியருளினார்.

பதினாறாவது

தெய்வாசுரசம்பத்விபாகயோகவத்தியாயம் - முற்றும்.

பதினேழாவது.

ச்ரத்தாத்திரயவிபாகயோகவத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ண தேவரைப் பார்த்து ஓய்! சு வாமீ எவருகிலும் சாஸ்திர யுக்தமார்க்கம் விட்டுச்சிரத்தையோடே கூடிக்கொண்டு தேவதாதி காரியங்களைச்செய்தாலந்தக் கர்மம் சாத்து விகரூபமானதா - ராஜஸரூபமோ தாமசமோவென்று கேட்க ஸ்ரீகி ருஷ்ணதேவரும் ஓய்! அர்ச்சுனா! தேகந்தரித்தவனுக்கெல்லாம் பிறக் கும்போதே சகசமானதாய் முக்குணமுண்டு அதிலுடையசுரூபமெப் படிக்கொத்ததென்றாலசொல்லுகிறேன்கேள் சகல மானபேருக்கு ம னார்மனதிலே எந்ததிலசிரத்தையுண்டாமோ அதுக்குத்தக்க புண் ணிய பாவங்கள் பண்ணிக் கொண்டேயிருப் பார்கள் சத்துவகுணம திகமானால் தேவதைகளைப் பூசிப்பார்கள் ரஜோகுணமதிகமானால் ய க்ஷராக்ஷசர்களைப் பூசிப்பார்கள் தாமசகுணமதிகமானால் பிரேதபூத ங்களைப் பூசிப்பார்கள் - சாஸ்திரயுக்தமல்லாத கோரமான தபசுப ண்ணிக்கொண்டு - டம்பாங்காரத்துடனே கூடிக் கொண்டு இச்சைக ளும் ராகமுமுண்டாய் சரீரத்திலே யிருக்கிறபஞ்சபூதங்களையும்நான் அந்தர்யாமியாயிருக்கிற என்னையுஞ்சிரமிக்கப்பண்ணுகிற தபசு அசுர

தபசென்றறி, ஆகாரமும் யெக்கியமும் தானமுமிவை யெல்லாம் மூ
ன்றுகுணங்களுடைய பேதமாயிருக்கும் அதுவுஞ் சொல்லுகிறேன் கே
ளவிரப்படி யெல்லாம் ஆயுசும் சத்துவமும் பலமும் ஆ
ரோக்கியமும் சந்தோஷமும் விர்த்திபண்ணுகிறதாய் மதுரமாய்
ப் பார்க்கிறதுக்கு வேடிக்கையாகவிருக்கிற ஆகாரஞ் சாத்துவிகர்க்குப் போ
சனமென்று சொல்லப்படும் இதுவல்லாமல் சாத்துவிகருக்குப் பிரியம் கை
யிருப்புங் காரமும் புளிப்பும் உப்பு மிகுதியும் உஷ்ணமும் மிகுதி
குதிப்பும் சயித்தியமும் உஷ்ணமும் ரோகத்தை பிறப்பிக்கிற ஆகார
ம் ராஜஸனுக்குப்பிரியமாய் பிரயாசமும் சோகமும் ரோகமுமாகச
முமதிகமாயுண்டு பண்ணும் - சமைத்துக்கொடிருந்து போனதுமும்
புளித்துப்போன பதார்த்தமும் ஒருத்தர் மிச்சிலும் அசுசியுமான போ
சனமும் தாமசனுக்குப்பிரியமாயிருக்கும் - இதுவல்லாமலும் பலனிச்
சியாமல் சாஸ்திரத்திலே சொன்னபடி மந்திரத்திரவியலோபமில்லா
மல் மனதுநிலைக்கலையாய்ச் சமாதானமாய்ப் பண்ணுகிற யெக்கிய
ம் சாத்துவிகயெக்கியம் - பலனை இச்சித்து டம்பார்த்தமாயெண்ணியெத்
தியப்பண்ணுகிறதே அந்தயெக்கியம் ராஜசயெக்கியம் - விதியில்லா
மல் அன்னதானமில்லாமல் மந்திரஹீனமாகத் திரவியத்தோடே
கூடித் தெக்ஷிணையில்லாமல் பத்தியில்லாமல் பண்ணுகிற யெக்கியம்
தாமசயெக்கியம் அன்றியும் தெய்வப்பிராமணர்கள் குருக்கள் பெ
ரியவர்களோட் பூசிக்கிறதும் சுசியும் பிரமசரியமும் இம்சையில்லா
மலிருக்கிறதும் சரீரதபசு யாருக்குந் துக்கமில்லா சத்தியமான பிரிய
மிதவாக்கியமும் வேதசாஸ்திரங்களைப் படிக்கிறதும் வாங்மயமான
தபசு - காமக்குரோதங்களில்லாமல் நிர்மலமானமனசுண்டாய் ஒருத்த
ருக்கு பகாரம் பண்ணவேணுமென்று சவுமியமாய் மவுனமாய் மன
தை ஆத்துமதியானத்திலே வைத்து அன்னியமாய்ப் போகாமல் நிறு
த்திப் பவித்திரம் பண்ணுகிற தபசு - மானசதபசு - மேலும் பலனிச்
சியாமல் மனதுவாக்குக் காயங்களிலே பக்தியுண்டாய்ப் பண்ணுகி
றதபசு - சாத்துவிகதபசு - ஒருத்தன் தன்னைப் பெரியவனென்று மெச்ச
ல்லவேணுமென்றும் வெகுமானம் நமஸ்காராதி பூசைபண்ணவேணு
மென்றும் டம்பமாய்ப் பண்ணுகிற தபசு ராஜசதபசு - அதிசஞ்ச
லமும் ஆத்திரமுமான முடலுறுப்புச் சலனம் பிடித்துத் தன்னுடைய
சத்தியமில்லாமல் விருதாவிலே தன்சரீரத்தைப் பிடித்துக்கொண்டு ப
ரனைக்கெடுக்கவேணுமென்கிற தபசு தாமசதபசு - பலனிச்சியாமல்
அவசியம் கொடுக்கவேணுமென்று தேசகாலபாத்திரமறிந்து ஒருத்

ருபகாரம் அபேக்ஷியாமல் பண்ணுகிற தானம் சாத்துவிக தானம் உபகாரமிச்சித்துப் பலன்வேணுமென்று அபவித்திரமான திரவிய விசேஷத்தினாலே பண்ணுகிற தானம் ராஜசதானம்; தேசகாலமறியாமல் அபாத்திரனுக்குவெகுமானமில்லாமல் உதாசீனத்தோடேகொடுக்கிறதானம்தாமசதானம்- அன்றியும் ஓம்- தது-சது-வென்கிறவாக்கியம்மூன்றுபதமும் பிரம்மத்தினாலே பிறந்தது இந்த மூன்றுபதமும் பிராமணர்களையும் வேதங்களையும் எக்கியங்களையும் சொல்லப்படுமாகையால் பிரம்மஞானியானவர்களுக்கு வேதோக்தமான எக்கியம் தானம் தபஸுமுதலான சற்கர்மங்கள் செய்யும்போது முதல் ஓமென்று பிரணவம் பண்ணி அதின்பிறகு அந்தக்கர்மஞ் செய்யத்தக்கதாக விருக்கும் பலனிச்சியாமல் ஈசுவரார்ப்பணமாக எக்கியம் தானம்தபசு பண்ணி மோக்ஷமே அபேக்ஷிக்கிறவர்களாலே- தது- வென்கிற சப்தஞ்- சொல்லப்படும் அந்தச் சப்தம் பிரம்மத்துக்கே பேராகையால் அந்தக்கர்மாநுஷ்டான பலம் பிரம்மமென்றே தாத்பரியம் - இந்தவஸ்து உண்டு இது நல்லது என்கிற அர்த்தத்தில் சதுவென்கிற சப்தஞ் சொல்லப்படும் லோகத்திலேயும் நல்லகாரியம்பண்ணினால் சற்கர்மம்பண்ணினானென்பார்களாகையால் ஓய்! அர்ச்சுனா! சதுவென்கிற சப்தம் நல்லது ஆகையால் வேதத்திலே அதிகாரமுண்டான பேர்பண்ணுகிற யெக்கியம் தானம் தபசுகளிலே யுண்டான நிலைக்கடை சதுவென்றுசொல்லப்படும் அப்படியே யவர்கள் பண்ணுகிற கர்மமும்சற்கர்மமென்று சொல்லப்படும் இப்படிக்கொத்த சிரத்தையில்லாமல் யெக்கியந்தானந்தபசு சாஸ்திரயுக்தமாயானாலும் உதாசீனபுத்தியினாலே பண்ணினால் அது அசத்தென்று சொல்லப்படும் இதினாலே யிகமுமில்லை பரமுமில்லையென்றுசொல்லியருளினார் கேட்டீரா திருதராஷ்டிர மகாராஜாவே யென்றுசஞ்சயமுனிவர்சொல்லுகின்றார்.

பதினேழாவது சிரத்தாத்திரயவிபாகயோகவத்தியாயம்-முற்றும்.

பதினெட்டாவது

சகலவுபநிஷதார்த்தப்பிரதிபாதன

மோக்ஷயோகவத்தியாயம்.

அப்பால் அர்ச்சுனன்! ஸ்ரீ கிருஷ்ணதேவனைவணங்கி ஓய்! சுவாமீ வேதாந்தவாக்கியங்களினாலே சொல்லப்பட்டதியாகமாவதென்

ண ஃ சன்னியாச மாவதென்ன - இந்த இரண்டினுடைய சொரூபமு
ம் நானறிய வேணுமென்று கேட்கக்கிருஷ்ணதேவரும் ஓய்! அர்ச்சு
னா! சிறிதுவித்துவாம் சர்காம்மியகர்மம் விட்டுவிடுகிறதே சன்னியா
சமென்பார்கள் சிறிதுவிவேகிகளான பெரியோர்கள் சகல கர்ம பல
மும்விட்டுவிடுகிறதே தியாகமென்பார்கள் பின்னையுஞ்சிறிதுபேர் எக்கி
யாதிகர்மங்களைத் தோஷத்தை விட்டு விட்டாப் போலே விடவேண்டு
மென்பார்கள் சிறிதுபேர் எக்கியம் தானம் தபோரூபமான கர்மத்தை
விடலாகா தென்பார்கள் இந்தப்படி சொன்ன அர்த்தத்திலே - ஓய்!
அர்ச்சுனா! நான் நிச்சயித்தபிரகாரங்கேள் இந்தப்படிக்குப்பண்ணப்
பட்டகர்ம பலம் மூன்றுவிதமாகவிருக்கும் - எக்கியம் தானம் தபசு
என்கிறவேத யுக்தமான கர்மம் மோக்ஷத்தையபேக்ஷித்தபேர் விடலா
காது - இந்தயெக்கியம் தானம்தபசு என்கிறகர்மம் பவித்திரமானது
இந்தப் பவித்திரமான கர்மத்தில் பலாங்கம் விட்டுச்செய்யத் தக்கது
இது உத்தமம் - இப்படிசெய்யவேண்டிய கர்மத்தைமோகத்தினாலே
விட்டுவிட்டால் தாமசத்தியாகமென்றுசொல்லப்படும் இப்படி ஞான
த்துக்குக்காரணமான கர்மானுஷ்டானம் பண்ணுகிற போது காயக்கி
லேசபயத்தினாலே விட்டுவிட்டால்அது ராசதத்தியாகம் ஆகையால்அவ
ன் தியாகபலத்தை அடையான் இந்தக்கர்மானுஷ்டானம் அவசியம்ப
ண்ணவேண்டிய தென்று பண்ணச்சே அந்தக் கர்மத்திலே மமத்து
வமும் பலமும்விட்டுவிட்டால் அது ஞான காரணமான சாத்விகத்தியா
கம் இந்தப்படி சாத்விகுணத்துடனே கூடினபுத்தியுண்டானவன் தத்
துவ ஞானத்தை அறிந்து அறிவாலே சமுசயமில்லாமல் கர்மபலத்
தை விட்டுவிடுவான் அது அல்லாத கர்மத்திலே துவேஷமுமில்லை தே
கந்தரித்துக் கொண்டவனாலே சகல கர்மங்களும் அசேஷமாக விடக்
கூடாதாகையால்சகல கர்மங்களுடையபலனைவிட்டு விடுகிறதேசாஸ்தி
ரயுக்தமானகர்மத்தியாகமென்றுசொல்லப்படும் அது அனிஷ்டமென்
றும்இஷ்டமென்றும்மிசிரமென்றுமூன்றுவிதம்கர்மபலமும்மூன்று
விதமாகஇருக்கும்இந்தக்கர்த்தத்துவமும்மமதையும்விடாமல்பண்ணு
கிற வனுக்குக்கர்மானுஷ்டானபலம் அனிஷ்டமான நரகமும் இஷ்ட
மான சொர்க்கமும்மிசிரமான புத்திரபாரியாதி சம்பத்தும் அனுபவி
க்கவேண்டியிருக்கும் - அந்தக்கர்மானுஷ்டானத்திலே பலஇச்சையு
ம் கர்த்தத்துவமும் விட்டவனுக்கு அந்தப்பலம் ஒருக்காலும் அனு
பவிக்கத்தேவையில்லை - தத்துவஞானத்திலேபுத்தி கூடினதீர்மானத்
திலே சகல கர்மங்களுக்கும் ஐந்துகாரண முண்டு - ஓய்! அர்ச்சுனா!
அதுவும் என்னாலே கேள் - அதையேதென்றால் சரீரமும் கர்த்தனு

ன வேறும் கர்ம இந்திரியமும் ஞான இந்திரியமும் மனதும் - எவ்வளவில்லைப்பட்டும் இந்த பதினொரிந்திரியங் களையும் சரீரத்தையும் நடத்தி விக்கிறவிரான அபானுந்தபேதமுமண்டானவாயுக்களுடையதாருயிதசேஷ்டையும் இந்த நாலுக்கும் அந்தரியாமியான ஐந்தாவதாம் ஆக ஐந்தும் காரணம் சாஸ்திரயுக்தமான ஞானகர்மமானாலும் அதல்நேமமான விபரீதகர்மமானாலும் மனோவாக்குக் காயங்களினாலே பண்ணுகிறபோது சரீரத்துக்கு செய்கிறது முக்கியப்போது சொன்ன ஐந்துகாரணமும்மேலுமிவனுக்கும் பரமாத்மாவாகியிருக்கையிலே இவனே கர்த்தாவென்று எவனிருக்கிறானோ அவனுக்கு தானே கர்த்தாவென்கிற புத்தியானதால் யதார்த்தமான பரமாத்மாவை அறியாததினால் புத்தியிலேயாகிலும் பரமபுருஷனை யுத்தமென்று நினைத்து நான் கர்த்தாவென்கிற அகங்காரத்தை விட்டு இந்தக்கர்மபலனை நானனுபவிக்கிறதில்லையென்று எவன்புத்தியானது இதிலே கட்டுப்படுகிறதோ அவன் சகலலோகத்தையும் கொன்றாலும் அவன் கொன்றவனல்ல அதனாற்கட்டுப்படுகிறதில்லை கட்டுப்படுவனுமல்ல - அறிகிறதும் அறியப்படுகிறதும் அறிகிறவனு மென்கிற மூன்றும் ஞானமென்று சொல்லப்படுகிறது பண்ணுகிற கர்மா கூடியிருக்கும் அந்தக் கர்மசங்கிரகத்துக்கு கரணமும் காமசாதகமான இந்திரியமும் கர்மசாத்தியமான காரணமும் மூன்று விதமாக விருக்கும் இப்போது சொன்ன ஞானமும் கர்மமும் கர்த்தாவும் சாத்விக ராஜசதாமசபேதமாய் கொண்டவன்று மூன்றுவிதமாயிருக்கும் அதை யெல்லாஸ்திரமாகச் சொல்லுகிறேன் கேள் சகல பூதங்களிலேயும் எந்த ஞானத்தினாலே நாசமில்லாத ஆத்மா ஒருத்தனே யென்று பார்த்துக் கொண்டு சாதியர்களுக்கு விபாகமில்லாமல் எவனிருக்கிறனோ அந்த ஞானம் சாத்விகஞானம் சகல பூதங்களிலேயுமிருக்கிற ஆத்மா ஒருத்தனேயென்று நினையாமல் விபாகத்தை அடைந்து அந்தந்த சரீரங்களிலே பிராமணக்ஷத்திரியர்களுக்கும் பிரமசாரியாதி ஆச்சிரமங்களுக்கும் பேதமாக யெண்ணிப் பலனிச்சித்துக் கர்மானுஷ்டானம்பண்ணிக்கொண்டிருக்கிற ஞானம் ராஜஸ ஞானம் எந்த ஞானமாகிலும் காரியத்திலே சற்பபலன் கொடுக்கிறதாயிருக்கச்சே அதையுமகா பலன் கொடுக்குமென்று நினைத்துக் கொண்டு தத்துவார்த்தமில்லாத ஞானம்தாமச ஞானம் - தன்னுடைய ஆசிரமத்துக்கு உசிதமானதாய் அதற்குநான் கர்த்தாவென்கிற பலசங்கமில்லாததாய் கீர்த்திமேலே இச்சையும் அபகீர்த்திமேலே த்வேஷமும் டம்பமுமில்லாமல் எந்தக் கர்மானுஷ்டானம் பண்ணுகிறதோ அது சாத்விக கர்மம் பலனிச்சித்து அகங்கார

யுக்தனாய் அனேக பிரயாசத்தோடே கூடிப்பண்ணின கர்மம் இராஜ
ஸகர்மம் கர்மம் பண்ணுகிறபோது அநேக துக்கமுண்டாமென அறிந்த
மாய் வருகிறதாய் அனேக திரவியம் சேதமாகிறதாய் ஹிம்சை பிரா
ணஹிம்சைவருகிறதாய் பலாபல சிந்தைவிசாரியாமல் மோகத்தினாலே
பண்ணுகிற கர்மம் தாமசகர்மம் - பலசங்கரஹிதனாய் அகங்கார மில்
லாமல் தயிரியத்துடனே யுச்சாகத்துடனே கூடிக்கர்மம் பண்ணுகிற
போது அதற்குவேண்டிய திரவியஞ் சித்தித்தாலும் சித்தியாமற்போன
லும் விகாரமில்லாமல் கர்மம் பண்ணுகிற கர்த்தன் சாத்விகன் இந்
தக்கர்மம்பண்ணினால் கீர்த்தியுண்டென்று கர்மபலத்தை யிச்சித்து அ
தற்குத் தெக்ஷிணைமுதலான திரவியங்களிலே லோபமுண்டாய் ஒரு
த்தனையிம்சை பண்ணுகிறதாய் கர்மபலன் சித்தியானால் சந்தோஷ
மும் சித்தியாகாவிட்டால் துக்கமுமாய்ப் பண்ணுகிறகர்த்தன் இராஜ
சன் சாஸ்திரயுக்தமான கர்மத்துக்கு தான்யோக்கிய னல்லாமல் அந்த
க்கர்மத்துக்குத்தக்க சாஸ்திர மறியாமல் அந்தக்கர்மானுஷ்டானம்ப
ண்ணுகிறதிலே தனக்குத்தானே பயமுண்டாய் மாரணாதிகர்மங்களி
லே யிச்சையுண்டானவனாய் பரவஞ்சனை பண்ணுகிறவனாய் மந்த
புத்தியுடனே கூடிஎம்மாத்திரந் துக்கம் வந்தாலும் மிகுதியும் துக்க
ப்பட்டுக் கொண்டு ஒருத்தர் பகையை வரவழைத்துக்கொண்டு அந்
தப்பகை வெகுகாலமிருக்கப்பண்ணுகிற கர்த்தன்- தாமசன், ஓ! அ
ர்ச்சுனா! மேலும்நிச்சயஞான ரூபமானபுத்தியுந் தயிரியமுமான இந்
தஇரண்டும் ஒவ்வொன்றும் மூன்றுபேதமாக விருக்கும் அதுவெ
வ்வேறாக அசேஷமுஞ் சொல்லுகிறோம் கேள் ஒருகாரியம் பண்ணு
கிறபோது இது இகத்திலே பலன் கொடுக்கிறதோ மோக்ஷங் கொடுக்
கிறதோ வென்றுவிசாரித்து இந்தக்கர்மம் பண்ணலாம் பண்ணலாகா
தென்றும் இது சாஸ்திரயுக்தமாகையால் பயமில்லை அசாஸ்திர யுக்த
மாகையால்பயமுண்டென்றும் சமுசாரத்தையும் மோக்ஷத்தையும்வி
சாரிக்கிற புத்திசாத்விகபுத்தி, இப்படிதர்மா தர்மமுங்காரியா காரிய
மும்விசாரிக்கவறியாதபுத்திராஜச புத்தி,சகலபிரயோசனங்களும் வி
பரீதமாகவே அறிந்துதர்மம் அதர்மமாகவும் அதர்மந்தர்ம மாகவும்
நினைக்கிற புத்திதாமசபுத்தி - விசாரமில்லாததயிரியத்துடனே கூடி
இந்திரியங்களையும் மனதைப் பிராணவாயுக்களையும் யோகத்தினாலே
யெந்தப் புருஷன்தரிக்கிறானோ அந்தத்தயிரியஞ் சாத்விக தயிரியம்
தர்மமுங்கர்மமும் அபேக்ஷித்து மனதும் பிராணவாயுவும் இந்திரிய
ங்களும் இதன்கிரியைகளுந் தரித்ததயிரியம் ராசததயிரியம் - வெகு

சொப்பனங்களும் நித்திரையும் விடாமல் பயமுஞ்சோகமுந் துக்க
முமதமும் பிறப்பிக்கிற விஷயங்களையிச்சித்து மனதுபிராணன்
இந்திரியங்களின் கிரிகைகளைத்தரிக்கிறதயிரியந்தாமசதயிரியம்.

ஓய்; அர்ச்சுனா! சுகமும் மூன்றுபேதமாகவிருக்கும் அதின்
பேதமுமுறைமையுஞ் சொல்லுகிறேன் கேள் எந்தச்சுகம் அனேககா
லம் அப்பியாசிக்கையில் மனதுரமித்து சகலதுக்கங்களையும் போக்
கடிக்கிறது எந்தச்சுகம் யோகாப்பியாசம் பண்ணுகிறபோது அனே
கம் பிரயாசத்துடனே கூடிவிஷம்போலேதுக்கமாய்த் தோன்றியோ
காப்பியாசமுடிந்தபிறகு அமிர்தம்போலேசரியாய் ஆத்துமஞானம்
பிரகாசிக்கிறது அந்தச்சுகஞ்சாத்திவிகசுகம் எந்தச்சுகம் முதல்விஷயங்க
ளோடேயிந்திரியங்களோடேகூடியபோது அமிர்தம்போலேஇருந்து
அந்தவிஷயானுபவந்தீர்ந்தபிறகு விஷம்போலே துக்கம் பண்ணுகி
ன்றது அந்தச்சுகம் இராசதசுகம் - எந்தச்சுகம் முதலிலும் அனுப
வித்தபிறகும் ஆத்துமமயக்கம்பிறக்கவொட்டாக நித்திரையும் ஆலசி
யமும் பிரமாதமும் பிறப்பிக்கிறது அந்தச்சுகந்தாமசசுகம் - பூமி
யில் மனுஷியர்கள் முதலான பேரிலும் சொர்க்கத்தில் தேவதைகள்
முதலானபேரிலும் இந்தக்குணத்திரயத்துடனேகூடாதபிராணிசமு
கமில்லை ஓய்! அர்ச்சுனா! பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும்
வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் அவரவர்கள் சாதிக்குத்தக்க கர்
மம் அவரவர்கள் பிறக்கச்செபிறந்தகுணங்களாலே அறியப்படும் அ
தெப்படி என்றால் பாகியஇந்திரிய நிக்கிரகமென்கிற தமமும் அந்
தரிந்திரிய நிக்கிரகமென்கிற சமமும்பாபங்களைவிட்டதபசுஞ் சாஸ்
திரயுக்த ஆசாரமான சவுசமும் பலர் பிடித்தாலும் விகாரமில்லாத
பொறுமையும் குடிலபுத்தியில்லாமல் மனதுநேர்மையும் பரதத்துவ
த்தைத அறிகிற ஞானமும் பரதத்துவத்திலே விசேஷமாக அறிகிறவி
க்கியானமும் வேதார்த்தமேசத்தியமென்கிற நிச்சயமும் பிராமண
னுக்குண்டான சுவபாவகர்மமாம், உயுத்தத்திலே பயமில்லாத சவுரி
யமும் சத்துருக்களுக்குவுட்படாததேஜசும் ஆரம்பித்தவியுத்தத்தி
லே உயுத்தம்பண்ணவிடாத தைரியமும் அந்தவுயுத்தம் நிர்வகிப்பே னெ
ன்கிற ஆண்மைக்கையும் உயுத்தத்திலே ஓடிப்போகாமலிருக்கிறதும்
உசிதமானதானமும் ஈசுவரபக்தியும் க்ஷத்திரியனுக்குண்டான சுபாவ
கர்மமாகும் - கிருஷிபண்ணுகிறதும் பசுக்களைரக்ஷிக்கிறதும்வியாபா
ரம் பண்ணுகிறதும் வைசியனுக்குண்டானசுவபாவகர்மமாம்இந்தமூ
ன்று பேருக்கும் பரிசாரகம் பண்ணுகிறது சூத்திரனுக் குண்டான
சுவபாவகர்மமாம் இந்தப்பிரகாரம் தங்கள்தங்களுக்கு வுசிதமான கர்

மத்திலே நிலக்கடையுண்டானால் பரமபதத்தை அடைவார்கள் அந்
தப்பிரகாரமுஞ்சொல்லுகிறோம் கேள் - ஓய்; அர்ச்சுனா! எவனாலே சக
லபூதங்களும் பிறந்ததோ எவனாலே சகலசகத்திலும் வியாபிக்கப்பட்
டது அந்தப்பரமாத்துமாவைத்தங்கள்தங்கள்வர்ணாசிரமத்துக்கு உசித
மானகர்மத்தினாலே பூசைபண்ணினவன் மோக்ஷத்தை அடைவான் சு
வதர்மம் விகுணமானாலும் பரதர்மத்தை அனுஷ்டியாமல் பாவ கர்ம
த்திலே நிலக்கடையுண்டானால் அதேசிரேயசு அவன்பாவ கர்மத்தை
யடையமாட்டான் ஓய்! அர்ச்சுனா! சகஜமான கர்மம் பிரயாசத்துட
னே கூடினதானாலும் விடலாகாது - ஏனென்றால் சகலகர்மங்களும்பு
கையுடனே கூடின அக்கினிபோலே பிரயாசமே அதில் அவனவன்சு
வபாவகர்மமே பண்ணவேண்டியது கர்மானுஷ்டானபலத்தினாலே எ
ன்னிடத்திலே பரம மானபத்தியண்டையான் பத்தியினாலே என்னை நன்
றாக அறிவான்கர்மத்தில் ஆசத்தியில்லாமல் மனது செலித்து இந்தக்
கர்மத்துக்குப் பரமாத்துமாவே கர்த்தாவென்றுதான் அதிலே கூடா
மல் சகலகர்மபலமும் விட்டுவிடுகிற சன்னியாசயோகத்தினாலே கர்ம
த்திலே கட்டுப்படாத சித்தி அடைவான் இப்படிக்கொத்தகர்மானுஷ்
டானத்தினாலே ஸ்திரமான ஞானசித்தி அடைந்தவனாய் - அதினாலே
பிர்ம்மத்திலே கூடுவன் - அந்தப்பிரகாரமும் சங்க்ஷேபமாகச் சொல்
லுகிறேன் கேள் - ஓய்! அர்ச்சுனா! அப்படிக்கொத்த ஞான நிஷ்டை
யில் நின்றதே பரமமான நிலபவித்திரமான புத்தியுடனே கூடினவ
னாய்த்தயிரியத்தினாலேமனது நியமித்துச்சத்தாதிவிஷயங்களிலே போ
காமல் மனதைத்தியானத்திலே நிறுத்திராகத்துவேஷம் விட்டுதியான
த்துக்குவிரோதமில்லாமல் ஏகாந்தஸ்தலத்திலே யிருந்து கொஞ்சம்
ஆகாரம் பண்ணிவாக்குச்சரீரமானது தியானத்திபாயமாக நிறுத்திவை
ராக்கியத்தை அநுசரித்துதேகமே ஆத்துமாவென்கிற அகங்காரமும்
அந்த அகங்காரரூபமான பெலமும் தான்பெலவானென்கிற கெர்வ
மும் காமக்குரோதமும் எதாகிலும் வேணுமென்கிற இச்சையும் இது
வெல்லாம் விட்டுமமதாரகிதனாய்ச் சாந்தனானவன் பிர்ம்மபாவத்துக்
கு அருகன் இப்படிபிர்ம்மபாவமுண்டானவனாய்ப்பிரசன்னமானம
னதுண்டானவனாய் - சோகமில்லாமல் ஒருவஸ்துவிலேயு மிச்சையி
ல்லாமல் சகலபூதங்களிலேயும் சமனாகவிருக்கிற வன்என்னிடத்திலே
பரமமானபத்தியண்டவான் பத்தியினாலே என்னை அறிந்து அதின் பி
றகுஅந்தகியானத்தினாலே என்னை அடைவான் சகலகர்மங்களும்பண்
ணச்சேகர்த்தத்துவமென்னிடத்திலே வைத்துஎன்னை அநுசரித்துப்
பண்ணினவன் என்பிரசாதத்தினாலே நாசமில்லாத என்னை அடைவா

ன் ஆஞ்ஞையால் நீயும்மனதினாலே சகலகர்மங்களும் பண்ணினாலும்ப
ண்ணுவிக்கிறவனும் அந்தப்பதத்தை அடைகிறாயானும் நானே யென்
று சகலத்தையும் எனக்குச்சமர்ப்பித்து நானே பரமபதமென்று நி
னைத்து இந்தப்பக்தியோகத்தை அநுசரித்தவனாய் நிரந்தரமும் என்
னிடத்திலே சித்தமுண்டானவனாகயிரு என்னிடத்திலே நினைப்புள்ளவ
னாய் எத்தியாதிகர்மானுஷ்டானம் பண்ணினால் என்கிருபையினாலே
சமுசாரதுக்கத்திலே விடுபடுகிறாய் இப்படியல்லாமல் அகங்காரத்
தினாலே என்வாக்கியங் கேளாதிருந்தால் நாசத்தை அடைவாய் அகங்
காரத்தை அநுசரித்து என்னுடைய அனுக்கிரகத்தைத்தள்ளி யுத்த
ம் பண்ணமாட்டேனென்றால் இந்த நிச்சயம் பொய்யாய் என்னுடை
ய ஆக்ஞாரூபமாகிற பிரகிருதியுன்னையுத்தம்பண்ணுகிற தாகநியமி
க்கும் உனக்குச் சுபாவ கர்மமானவயுத்தம் பண்ணமாட்டேனென்றா
ல் - ஓய்! அர்ச்சுனா! உன்னுடைய மனதுவுனக்குவசமாகாமல் அக்ஞ
ானத்தினாலேயு யுத்தம்பண்ணுவாய் - ஓய்! அர்ச்சுனா! ஈசுவரன்சகல
பூதங்களுடைய இருதயத்திலுமிருப்பன் அதெப்படியென்றால் தன்
னாலே நிர்மிக்கப்பட்டபிரகிருதியென்கிற யெந்திரத்தின்மேலே யே
றின சகல பூதங்களையுமாட்கையினாலே திருப்புவன் ஆகையால் அந்தஈ
சுவரனைச் சகபாவங்களிலும் சரணமடைந்து அவருடைய கிருபையினா
லே பரமமான சாந்தியுண்டாய் நித்தியமானபதத்தை அடைவாய் இ
ந்தஞானம் ரகசியத்திலும் ரகசியமானது - இதைநன்றாகவிசாரித்து
இனியுனக்கு இச்சையானதுசெய்ரகசியத்திலும்இந்தரகசியமானஞா
னயோகமுனக்குச் சொன்னேம் - நீ எனக்கு இஷ்டனானபடியினாலு
ந்திட புத்தியுண்டானவனாகையாலும் இன்னம் விசேஷமாகச்சொல்
லுகிறேம் கேள் என்னிடத்திலே மனதுண்டானவனாய் எனக்குப் ப
க்தனாய் என்னைப்பூசை பண்ணிக்கொண்டு எனக்கேநமஸ்காரம்பண்
ணிக்கொண்டு இருந்தாயானாலென்னையே அடைவாய் இதுக்குச் சந்
தேகமில்லைசத்தியம் - இப்படியிருந்தால் நீயெனக்குப் பிரியனென்
று பிரதிக்கினைபண்ணுவேன் சகலதர்மங்களும் நான்சொன்னபடி அ
னுஷ்டித்துக் கொண்டுஅதிலே கர்த்தத்துவம் விட்டுச் சகலத்துக்கும்
நானேகர்த்தாவென்று என்னைச்சரணமடைந்தால் என்னை அடைகிற
துக்குவிரோதமான சகலபாவங்களிலேயும் விடுபடுவாய் இந்தரகசி
யமான அர்த்தம் தபசில்லாதவனுக்கும்பக்தியில்லாதவனுக்கும் சிசுரு
ஷையில்லாத வனுக்கும் அசூயையுண்டான வனுக்கும் ஒருக்காலுஞ்
சொல்லவேண்டாம் எவனொருவன் இந்தப்பரம ரகசியத்தை என்னு
டைய பக்தனுக்குச் சொல்லுகிறானோ அவன் என்மேலே பக்தியுண்

டானவன் அவ்வேதாந்தத்தில் என்னையே அடைவானென்றறிகிறேன். சபையிலே இந்தமகாவாக்கியத்துக்குள்ளே எல்லபக்தருக்கு இந்த அர்த்தத்தைச் சொல்லுவனைக் காட்டிலுமிந்தப் பூமியிலே எனக்குப் பிரியன் வேறேயில்லை- எவனொருவன் நீயும்நானும் தர்மந்தப்பாமல் பேசிக்கொண்ட இந்த நீதிசாஸ்திரத்தைப் படித்தறிகிறானோ அவனாலேநான் ஞானயக்ஞத்தினாலே பூசிக்கப்படுவேனென்பக்தியுண்டானவனாய் அசூயையில்லாதவனாய் எவனிந்தச் சாஸ்திரங்கேட்கிறானோ அவனு முக்தனாய் அவன் புண்ணியகர்மம்பண்ணினவர்களிருக்கிறலோகத்தை அடைவான்,

ஓ! அர்ச்சுனா! நான்சொன்ன இந்த அர்த்தத்தை ஏகாக்கிரமானமனதோடே கேட்டையோ வுன்னுடைய அக்ஞானம் விட்டுப்போச்சுதோவென்றுகேட்க அர்ச்சுனன் கிருஷ்ண தேவனைப்பார்த்து, ஓ! அச்சுதா ! என்னுடைய அக்ஞானம் நாசமாச்சுது பரதத்வமென்கிற ஞானம் உன்னாலே அடையப்பட்டுது சந்தேகமெல்லாந்தீர்ந்து நின்றேன் நீர்சொன்னபடி யுத்தாதி கர்மம் பண்ணுகிறேனே என்று, அர்ச்சுனன் கிருஷ்ணதேவனைச் சொல்லிநின்று அப்பால்யுத்தத்துக்குஆயத்தப்பட்டான் கேட்டதிருதராஷ்டிரமகாராஜாவே நான் இப்படிக்கிருஷ்ணசுவாமியும் அர்ச்சுனனும் பண்ணினசம் வாதங்கேட்டுச்சரீரம் புளகிதமாய் ஆச்சரியப்பட்டேன் வியாச பிரசாதத்தினாலே ரகசியத்துக்கும்ரகசியமான இந்தஞானயோகத்தையோகேசுவரனான கிருஷ்ணசுவாமியானவர் தான்தானே சொல்லுகையால் கேள் வியடைந்தேன் இப்படிகிருஷ்ணசுவாமியும் அர்ச்சுனனும் பேசிக்கொண்ட இந்தப்புண்ணிய சம்வாதத்தை அப்போதைக்கப்போது நினைக்க நினைக்கஎனக்குச் சந்தோஷமாகின்றது, அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணசுவாமிகாட்டின ஆச்சரியரூபத்தை நினைக்கநினைக்கவெகு சந்தோஷமாகின்றது, ஆதலால் எந்தப்பக்ஷத்திலே யோகேசுவரனான கிருஷ்ணசுவாமியும் எந்தப்பக்ஷத்திலே தனுர்த்தரனான அர்ச்சுனனு மிருக்கிறார்களோ அவிடத்துக்கு ஜெயமும் சம்பத்தும் நீதியும் உண்டாகுமென்றுஎன்மனதில் தோற்றப்படுகிறதென்று - சஞ்சயமுனிவர் சொல்லியருளினானென்றவாறு-

பதினெட்டாவது

சகலவுபநிஷதார்த்தப்பிரதிபாதனமோக்ஷயோகவத்தியாயம்.

முற்றிற்று.

வேதாந்தசூடாமணி... ... ... அரூ- ௫
சிவஞானதீபம்... ... ... ௫
விராகமம்... ... ... ௧௯
அட்டுநெறியுண்மை } ௪
தேவிகாலோத்தரம்... } ... ...
அகத்தியத்திரட்டு... ... ... ௪
அகத்தியர்கலைக்கியானம்... ... ... ௰
நவநீதசாரம்... ... ... ௬
தத்துவாமிர்தம்... ... ... ௨
சதுவர்ணபோதம்... ... ... ௨
சைவசமயவிளக்குவினாவிடை ௪
மகாவாக்கியவிசாரம் ௬
அத்துவிதானுபவம் ௫
சிவயோகசாரம்... ... ... ௫
அவதூதசம்வாதம்... ... ... ௧௯
பரமானந்ததீபம் ௧௯
அபரோட்சாத்மானுபவதீபிகை... ... ... ௫
சிவபஜனை ௫
புலிப்பாணிபலதிரட்டுஜாலசிதம்பரம்... ... ... ௮
லட்சணாவிருத்தி ௩
ரூதசங்கிதை... ... ... ௧௯
பதிபசுபாசவிளக்கம் ௨
பகவத்கீதைவசனம்... ... ... ௬
அதிவானந்தசித்தியார் ௬
வாசுதேவமனனம் ... ... ரூ. ௨௯

இப்போதுபதித்துவருகிறபுத்தகங்கள்.

சித்தாந்தசிகாமணி ... ... *
பஞ்சபதமகாவாக்கியம்... ... ... *
தத்துவாராயாடங்கள்முறை... ... ... (௰௮)